# பெரியார் தொலைநிலைக்கல்வி நிறுவனம்

# பெரியார் பல்கலைக்கழகம்

சேலம் - 636 011.

## இளங்கலை வணிக மேலாண்மை – வங்கியியல்

## முதலாமாண்டு

## தாள் – 3 : கிராமப்புற வங்கியியல்

Prepared By
**Dr.D. Ravikumar**
Director MBA Department
Sengunthar Arts Science College,
Tiruchengode, Namakkal (D.t).

பொருளடக்கம்

| வ.எண் | பொருளடக்கம் |
|---|---|
| UNIT - I | கிராம புற வங்கியில்<br>விவசாய வங்கிகளும் வளர்ச்சியும்<br>கிராமப்புறக் கடன் தேவையின் மதிப்பீடு<br>வணிக வங்கிகளும் விவசாயக் கடன்களும்<br>வணிக வங்கிகளின் நேரடி நிதியுதவி<br>ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டமும் வணிக வங்கிகளும் வணிக வங்கிகளின் இணை கூட்டான பங்கு |
| UNIT - II | கிராமப்புறக் கடன் வழங்கும் நிறுவனங்கள்<br>கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கூட்டுறவு மத்திய வங்கிகள் வணிக வங்கிகளின் பணிகள் பல்வேறு பொது நலப் பணிகள், வட்டார வங்கிகளின் பணியும் வளர்ச்சியும் வணிக வங்கிகளும் வட்டார கிராம வங்கிகளும் உள்ள வேறுபாடுகள் |
| UNIT - III | கிராமப்புறக் கடன் தேவையின் மதிப்பீடு<br>வணிக வங்கிகளும் விவசாயக் கடன்களும்<br>வணிக வங்கிகளின் மறைமுக நிதியுதவி<br>இந்திய விவசாயத்தின் தேக்க நிலைக்குக் காரணம் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத்<br>திட்டம் - பி . எம். ஆர். ஓய்<br>கடன் அளவை எந்த சூழ்நிலையில் அனுமதிக்கலாம் ?<br>கடன் வழங்குவதற்கான வழிமுறைகளை கோட்டுபாடுகளை விவரி. இந்நிறுவனங்களின் பணிகள் பற்றிய மதிப்பீடு |
| Unit - IV | திட்டம் கண்டறிவதற்கான ஆதாரங்கள் திட்ட வடிவமைப்பின் தேவைகள் மூலதனத் திட்டமும் அதன் முக்கியத்துவம்<br>ஒரு சிறந்த தொழில் அமைப்பின் இயல்புகள்<br>வியாபார வாய்ப்பு எளிமை |
| UNIT – V | இந்திய ரிசர்வ் வங்கியும் அதன் பணிகளும்<br>ரிசர்வ் வங்கியின் பணிகள் வணிக வங்கிகளும் ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாடும் நபார்டின் மூலதனமும் நிதிவசதிகளும் அரசாங்கம் அல்லாத நிறுவனத்தின் பணிகள் சிவராமன் கமிட்டியின் சிபாரிசுகள் |

## அலகு- I

**கிராம புற வங்கியில்**

இந்திய பொருளாதரம் ஒரு வளர்ச்சி அடைகின்ற பொருளாதாரம். இதில் கிராமப்புற பகுதிகளின் உள்ள கிராம்புற மக்கள் தரத்தை உயர்த்த கிராமப்புற வங்கியில் பயன்படுகிறது. நாட்டின் வளர்ச்சிக்கு மனித விழிப்புணர்வும் , மனித அறிவு வளர்ச்சிக்கும் கிராமபுற வங்கியியல் பயன்படுகிறது. கிராமப்புற வங்கியியல் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய கருவியாகும்.

நாட்டின் வளர்ச்சியை முக்கியத்தை உணர்த்து கிராமப்புற வங்கிகள் வளர்ந்த கூட்டுறவு வங்கியை உபயோகித்து வளர்ச்சியடைய செய்கின்றனர். இந்த கூட்டுறவு வங்கிகள் மூலமாக கிராமப்புற கடன் கொடுத்து கிராமப்புற வளர்ச்சி அடைய செய்கின்றனர்.

**கிராமப்புற வங்கியின் நோக்கங்கள் :-**

1. இந்திய கிராமப்புற பொருளாதாரத்தில் பகுதிகள் அறிய பயன்படுத்துகிறது.

2. இந்திய கிராமபுற பொருளாதாரத்தில் முக்கிய அங்கங்களை விரிவுபடுத்தி கூறுகிறது.

3. கிராமபுற நிதி ஆதாரத்தை அறிய உதவுகிறது.

4. கிராமப்புற நிதி அமைப்புக்கு தேவைகளை நிதி ஆதாரத்தை விரிவுபடுத்தி செய்கின்றது.

**இந்திய கிராமப்புற பொருளாதாரம்**

இந்தியாவின் வளர்ச்சி மற்றும் அபி விர்த்தி கிராமபுற பொருளாதாரத்தை சார்ந்து அமைந்து உள்ளது. ஏனெனில் இந்தியாவில் முக்கிய வேலைவாய்ப்பு வேளாண்மை தொழிலை சார்ந்ததாகும் . அதுமட்டும் இல்லாமல் 70% to 75% மக்கள் வேளாண்மையுடைய அறை சார்ந்த தொழிலை சார்ந்ததாகும்.'' அதனால் இந்திய பொருளாதாரம் கிராமப்புற பொருளாதாரத்தை சார்ந்ததாகும்.

**விவசாய வங்கிகளும் வளர்ச்சியும்**

**RURAL BANKS AND DEVELOPMENTS**

இந்தியா முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பியுள்ள ஒரு நாடு ஆகும். நமது ஜனத்தொகையில் பொரும்பகுதியினர் விவசாயத்தை நம்பி வாழும் மக்களாவர். விவசாயத்தின் மூலம் உணவு, தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருகள் (Raw Materials) ஆகியன கிடைப்பதோடு அல்லாமல் பலகோடி மக்களுக்கு வேலைவாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. எனவே, விவசாய வளர்ச்சியே இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் அடிப்படை என்றால் அது மிகையாகாது.

ஆயினும், விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் இன்னமும் மோசமாகவே உள்ளது. பலர் வறுமைக் கோட்டிற்குக் கீழேயே இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வாழ்நாள் முழுவதும் கடனிலேயே மூழ்கி இருக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். இவர்கள் நலனுக்குப் பலவேறு திட்டங்களைத் தீட்ட வேண்டிய அவசியத்தையும் நாடு விடுதலை அடைந்த பிறகு மத்திய அரசு உணர்ந்தது.

நமது நாட்டு விவசாயிகள் கடனிலேயே பிறந்து கடனிலேயே வளர்ந்து கடனிலேயே இறக்கின்றனர். இது உலகில் வேறெங்கும் காணாத புதுமையாகும். இதற்கு முக்கியக் காரணம் நமது விவசாயிகள் வாங்குகின்ற கடனை விவசாயத்திற்குச் செலவிடாமல்,வேறு வேறு தேவைகளுக்கும் உற்பத்தியோடு தொடர்பற்ற காரியங்களுக்கும் பயன்படுத்துவதே ஆகும்.

**கிராமபுற நிதி உதவிக்கு தேவையான காரணம்**

நமது விவசாயத்தின் பெரும்பகுதி பருவ மழையை நம்பியுள்ளது. பருவ மழை அடிக்கடி பொய்த்து விடுவதால் விவசாயமும் கடன் வாங்க வேண்டிய

நிலைமைக்கு உந்தித் தள்ளப்படுகின்றனர். இந்நிலைமைகளுக்கான முக்கியக் காரணங்கள் பின்வருமாறு.

**1. போதுமான அளவு கடன் வழங்கும் நிறுவனங்கள் இல்லாமை (Inadequancy of Institutional Credit ) :** விவசாயங்களுக்குக் கடன் வழங்குவதில் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் கிராமப்புற வங்கியர்களும் (Indigenous Bankers) லேவாதேவிக்காரர்களும் (Money Lenders) ஆவார்கள். மொத்த விவசாயக் கடன்களில் 7% மட்டுமே கடன் நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளது என்று அகில இந்திய கிராமியக் கடன் ஆற்வுக் குழு (All India Rural Credit Survey) தீர்மானித்துள்ளது எனவே, மீதியுள்ள 93% கடனும் கிராமப்புற லேவாதேவிக் காரர்களிடம் அநியாய வட்டிக்கு வாங்கப்பட்ட கடன்களாகும். இதனால் நாளுக்கு நாள் விவசாயிகளின் கடன் சுமை ஏறிக்கொண்டே போகின்றது.

**2. பூர்வீகக் கடன்கள் (Ancestral Debts) :** பல விவசாயிகள் தாங்கள் பட்ட கடனை அடைக்காமலேயே இறந்து போய் விடுகின்றனர். இந்தக் கடன்களை அவர்களுடைய வாரிசுகளும் அடைக்க முடியாமல் பெரும் அவதிக்கு ஆளாகி விடுகின்றனர். நாளடைவில் அசலோடு வட்டியும் சேர்ந்து பெரும் தொகையாகிக் கடனுக்காகத் தம் நிலத்தை லேவாதேவிக்காரர்களிடமே விற்று விடவேண்டியக காட்டாயத்துக்கும் ஆளாகி விடுகின்றனர். இதன் மூலம் சிறுவிவசாயிகள் நாளடைவில் விவசாயக் கூலிகளாகி விடுகின்றனர்.

**3. நிலம் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிவு பட்டிருப்பதும் பல இடங்களில் பரவி இருப்பதும் (Sub - division and Fragmentation of Holdings) :** நமது விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் சிறு விவசாயிகள் இவர்களது நில உடைமையும் மிகச் சிறிய அளவே ஆகும். அதுவும், ஒரே இடத்தில் இல்லாமல் பல இடங்களில் பரவலாகச் சிதறிக் கிடக்கின்றது. இதனால் சிக்கனமாக விவசாயம் செய்ய இயலவில்லை. மேலும், விவசாயத்தில் கிடைக்கும் இலாபமும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகின்றது.

**4. வழக்குகள் (Litigation) :** சிறிய விஷயங்களுக்கு மிகவும் சுகமான ஒரு விஷயமாகி விட்டது. இதனால், ஏற்படும் பொருட்செலவையும், வீண் அலைச்சலையும், காலதாமதத்தையும் அவர்கள் பொருட்படுத்துவதே இல்லை. சிறு விஷயங்களை எல்லாம் கௌரவப் பிரச்சனையாக எடுத்துக் கொண்டு பெருமளவில் கடன் வாங்கி வழக்கு நடத்துவது நமது விவசாயிகளின் வாடிக்கையாகி விட்டது.

**5. அநியாய வட்டி (Higher Rate of Interest) :** தங்கள் தேவைகளுக்குக் கிராமப்புற லேவாதேவிக்காரர்களிடம் அநியாய வட்டிக்குக் கடன் வாங்குகின்றனர். இவ்வட்டி விகிதம் 50% வரை உள்ளது. இதனால் கடன் சுமை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருப்பதால் விவசாயிகளால் தாங்க இயலாத சூழ்நிலை உள்ளது.

**6. விவசாயிகளின் ஊதாரிச் செலவுகள் (Extravagance of the Cultivators) :** திருமணம் போன்ற சடங்குகளுக்கு நமது விவசாயிகள் நிலத்தை விற்றோ அல்லது பெருமளவில் கடன் வாங்கியோ ஊதாரிச் செலவுகள் செய்கின்றனர் . இதனால் இவர்கள் நாளுக்கு நாள் ஏழைகளாகிக் கொண்டே உள்ளனர்.

**7. இயற்கையின் சீற்றங்கள் (Natural Calamities) :** நமது விவசாயம் பருவ மழையையே நம்பியுள்ளது. பல காலங்களில் பருவமழை பொய்த்து விவசாயம் பாதிக்கப்பட்டு விளைச்சல் குறைந்து விடுகின்றது. அதனால், விவசாயிகள் பழைய கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையில் மீண்டும் மீண்டும் புதிய கடன்களை வாங்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகி விடுகின்றனர்.

**8. விற்பனை செய்வதில் உள்ள சிரமங்கள் (Difficulties in selling the Agricultural Produce) :** உற்பத்தியான விவசாய விளை பொருள்களையும் உள்ளூரிலேயே குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது.

பெரும்பாலும் லேவாதேவிக்காரர்களே வியாபாரிகளாகவும் இருப்பதால், அவர்களிடைமே மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டியுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு (RegulatedMarket) எடுத்துச் சென்று இலாபகரமான விலையில் விற்கும் நிலையில் நமது விவசாயிகளின் நிலைமை இல்லை. மேலும், அறுவடை காலங்களில் விலையும் பெருமளவு சரிந்து கொண்டே இருக்கும். எனவே, விலை ஏறும் வரை தம்முடைய விளை பொருள்களைப் பாதுகாத்து வைக்கவும் இயலாத அளவுக்கு அவர்களுக்கு பண நெருக்கடி உள்ளது. எனவே, கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த பொருள்களை இலாபகரமாக விற்பனை செய்ய இயலாத நிலையில் நமது விவசாயிகள் உள்ளனர்.

**கிராமப்புறக் கடன் தேவையின் மதிப்பீடு**

**(An Estimate of Rural Credit Needs)**

விவசாயிகளின் கடன் தேவைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. குறுகிய காலக் கடன் தேவைகள் (Short - term Credit Requirements)
2. மத்திம காலக் கடன் தேவைகள் (Medium - term Credit Requirements) மற்றும்
3. நீண்ட காலக் கடன் தேவைகள் (Long - term Requirements).

**1.குறுகிய காலக் கடன்கள் (Short - term Credit) :** விவசாயத்திற்குத் தேவையான நடைமுறை மூலதனத் தேவைகள் (Working Capital Requirements) இதில் அடங்கும். விதைகள், உரங்கள், பூச்சிமருந்துகள், கடனுக்கு வட்டி செலுத்துதல், விவசாயக் கூலி வழங்குதல் ஆகிய செலவினங்களுக்கு இக்கடன் தேவையாகும்.

**2.நீண்ட காலக் கடன்கள் (Long -term Credit) :** விவசாயத்திற்குத் தேவையான உழவு மாடுகள் (Live Stock), நிலத்தைச் சீரமைத்தல் போன்ற காரியங்களுக்குத் தேவையான கடன்கள் இதில் அடங்கும்.

**3. மத்திம காலக் கடன்கள் (Medium - term Credit) :** நிலங்களைப் புதிதாக வாங்குதல், விவசாயத்திற்குத் தேவையான எந்திரங்களை வாங்குதல், நீர்ப்பாசன வசதிக்குத் தேவையான கிணறுகளைத் தோண்டுதல் (Digging of Wells) முதலியவற்றிற்குத் தேவையான நிதிகள் இக்கடனில் அடங்கும்.

1969 ஆம் ஆண்டில் அகில இந்திய கிராமப்புறக் கடன் மறு ஆய்வுக் குழு All India Rural Credit Review Committee) விவசாயிகளின் குறுகிய காலக் கடன் தேவை மட்டும் ரூ. 2,000 கோடிகளுக்குக் குறையானது என்று மதிப்பிட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்தொகை இதற்காகவே ஒதுக்கப்பட்டது.மேலும், விவசாயத்தில் புதிய யுக்தினை (New Strategy) புகுத்தியதால் கிராமப்புறக் கடனுக்கான தேவை மேலும் அதிகரித்தது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயிகள் குறுகிய காலக் கடன் தேவைக்கென ரூ. 1,48,800 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இது இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையில் 18.65% ஆகும்.

**கிராமப்புற நிதிஉதவி பெறும் வழிகள்**

கிராமப்புறக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வழிகளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவைகளாவன : 1. தனியார் வழிகள் (Private Sources), **2. கடன் நிறுவனங்கள் (Credit Institutions).**

**1. நிறுவனமல்லாத தனியார் வழிகள் (Non - institutional Private Sources) :** விவசாயக் கடன் வழங்குவதில் நிறுவனமல்லாத தனியார்களே பெரும்பங்கு வகிக்கின்றனர்.

1. கிராமப்புற லேவாதேவிக்காரர்கள் (Village Money Lenders).
2. வியாபரிகள், கமிஷன் ஏஜண்டுகள்

3. உறவினர்கள் (Relatives).
4. மிராசுதார்களும் மற்றவர்களும் (Landlords and Others)
5. கிராமப்புற வங்கியர்கள் (Indigenous Bankers).

**1. கிராமப்புற லேவாதேவிக்காரர்கள் (Village Money Lenders) :**

கிராமப்புற விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் மிக முதன்மையான இடம் வகிப்பவர்கள்லேவாதேவிக்காரர்களே ஆவார்கள். இவர்களில் சிலர் விவசாயிகளாகவும் இருப்பதோடு துணைத் தொழிலாக (Side Business) லேவாதேவியும் செய்து வருகின்றனர். 1961 ஆம் ஆண்டுப் புள்ளி விபரப்படி கிராமப்புறக் கடன் தேவையில் 99. 2% இவர்களால் வழங்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இவர்களிடம் அநியாய வட்டிக்குக் கடன் வாங்குவதைக் குறைக்க அரசு பெருமுயற்ச்சி எடுத்துக் கொண்டிருந்தும் 1981-82 ஆம் ஆண்டு புள்ளி விபரப்படி கிராமப்புறக் கடன்களில் 38.8 % இவர்களாலேயே வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவர்களது முக்கியத்துவத்தைக் குறைப்பதற்கு மேலும் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. இவர்கள் கிராமப்புறங்களில் செல்வாக்கு பெற்று விளங்குவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

1. லேவாதேவிக்காரர்கள் எந்த அடமானச் சொத்துகளையும் கேட்காமல் சுலபமாகக் கடன் வழங்குகின்றனர். இரவு பகல் பாராமல் எந்த நேரத்திலும் இவர்களிடம் கடன்பெற இயலும்.

2. இவர்கள் கடன் வாங்குபவர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதாலும், குடும்ப நண்பர்கள் போன்று பழகுவதாலும் இவர்களிடம் கடன் வாங்குவதையே விவசாயிகளும் பெரிதும் விரும்புகின்றனர்.

3. இவர்களிடம் கடன் பெறும் முறை எளிமையானதும் சுலபமானதும் ஆகும்.

4. இவர்களுக்கு உள்ளூர்ப் பழக்க வழக்கங்கள் நன்கு தெரிவதால். பிராமிசரி நோட்டின் மீதும் நிலப் பத்திரங்களை வைத்துக் கொண்டும் சுலபமாகக்கடன் வழங்குகின்றனர்.

ஆனால், லேவாதேவிக்காரர்கள் கடன் வழங்கும் முறையில் பல்வேறு ஒழுங்கீனங்கள் உள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு.

1. உண்மையானக் கடன் கொடுத்த தொகையை விட அதிகத் தொகைக்கு பிராமிசரி நோட்டு எழுதி வாங்கிக் கொள்ளுகின்றனர்.
2. கடனைத் திரும்பச் செலுத்தும்போது அதற்காக எந்த இரசீதும் வழங்குவதில்லை.
3. இவர்கள் வசூலிக்கும் வட்டி அநியாய வட்டியாகும்.

எனவே, இத்தகைய கடன் வழங்குவோரால் நமது விவசாயிகள் பெருமளவில் சுரண்டப்படுகின்றார்கள். இவர்கள் உற்பத்திப் பெருக்கத்திற்குப் பெருமளவில் தடையாக உள்ளனர். என்று அகில இந்திய கிராமப்புறக் கடன் ஆய்வுக் குழுவும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

**2. வியாபாரிகளும் கமிஷன் ஏஜெண்டுகளும் (Traders and Commisssion Agents) :**

இவர்கள் விவசாயிகளுக்கு விவசாயம் செய்யத் தேவையான பொருள்களை வாங்கக் கடன் வழங்குகின்றனர். எனவே, அறுவடை முடிந்தவுடன் அவர்களிடமே விவசாயிகள் தமது மொத்த விளைச்சலையும் அவர்கள் கேட்கும் விலைக்கு விற்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். பணப் பயிர்களான பருத்தி, கடலை, புகையிலை போன்ற பொருள்களின் உற்பத்தியில் இவர்களின் செல்வாக்கு மிகவும் அதிகம். இவர்கள் வழங்கும் கடனின் அளவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என்பதை அரசின் புள்ளி விபரங்களே தெரிவிக்கின்றன.

**3. உறவினர்கள் (Relatives) :** சில விவசாயிகள் தனது உறவினர்களிடம் தற்காலிகமாகக் கடன் வாங்கும் வழக்கமும் உள்ளது. ரொக்கமாகவும், விதை போன்ற பொருள்களாகவும் கடன் வாங்குவதுண்டு இக்கடன்கள் பெரும்பாலும்

வட்டியில்லாக் கடன்களே. எனினும், உறவினர்களிடம் கடன் பெறும் வழக்கம் நாளடைவில் குறைந்து வருகின்றது.

**4. மிராசுதார்களும் மற்றவர்களும் (Landlords and others) :** பெருமளவில் நிலத்தைச் சொந்தமாக வைத்து விவசாயம் செய்பவர்களை மிராசுதார்கள் என்று குறிப்பிடுவது தஞ்சாவூர் மாவட்டத்தில் வழக்கம். இவர்கள் சிறு விவசாயிகளுக்கு அவ்வப்போது கடனும் வழங்கி வருகின்றனர். இவர்களிடம் சிறு விவசாயிகள் கடன் வாங்கி விவசாயம் செய்து அறுவடை முடிந்தவுடன் அவர்களிடமே தமது விளைச்சலையும் விற்று விடுகின்றனர். இதனால், விவசாயிகள் தமது விளை பொருள்களை கட்டுப்படியாகக் கூடிய விலையில் விற்க இயலாத நிலையில் உள்ளனர்.

**5. கிராமப்புற வங்கியர் (The Indigenous Bankers) :** இவர்கள் லேவாதேவிக்காரர்களுக்கு இணையாக கிராமப்புறங்களில் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதிலும் முக்கிய இடம் பெறுபவர்கள் ஆவார்கள். கிராமப்புறக் கடன் விசாரணைக் குழு (The Indian Rural Banking Enquiry Committee) ஆனது, ''கிராமப்புற வங்கியர் என்பவர்கள் தனிநபர்கள் அல்லது கூட்டு நிறுவனங்களாகும் ; இவர்கள் வணிக வங்கியைப் போலப் பொதுமக்களிடம் டெபாசிட்டுகள் பெறுதல், உண்டியல் வாங்குதல், கழிவு செய்து தருதல் ஆகிய பணிகளையும் ஆற்றுகின்றனர்'' என்று இலக்கணம் வகுத்துள்ளது. எனவே, லேவாதேவிக்காரர்களுக்கும், கிராமப்புற வங்கியர்களும் உள்ள வேறுபாடுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. லேவாதேவிக்காரர்கள் சொந்த மூலதனத்திலிருந்தே தொழில் நடத்துகின்றனர். கிராமப்புற வங்கியர் பொதுமக்களிடம் டெபாசிட் பெறுகின்றனர்.
2. லேவாதேவிக்காரர்கள் உண்டியல் வழங்குவது இல்லை. கிராமப்புற வங்கியர் உண்டியல் தொழிலும் செய்கின்றனர்.
3. கிராமப்புற வங்கியர் விவசாயிகளைத் தவிர, மற்ற வியாபாரிகள், தொழலில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவருக்கும் கடன் வழங்குகின்றனர். லேவாதேவிக்காரர்கள் இவ்வாறு உற்பத்தியோடு தொடர்புடைய தொழில்களுக்குப் பெரும்பாலும் கடன் வழங்குவதில்லை.
4. கிராமப்புற வங்கியர் வசூலிக்கும் வட்டி லேவாதேவிக்காரர்கள் வசூலிக்கும் வட்டியை விட மிகவும் குறைவு.
5. கிராமப்புற வங்கியர் தகுந்த பிணையம் (Securities) பெற்றுக் கொண்டே கடன் வழங்குகின்றனர். ஆனால், லேவாதேவிக்காரர்கள் வெண்ணிலைக் கடன்களே (Unsecured Advances) பெரும்பாலும் வழங்குகின்றனர்.

இவ்வேறுபாடுகள் தவிர, இவ்விருவரிடமும் சில ஒற்றுமைகளும் உள்ளன. எனினும், இவர்களது வரலாற்றை ஆராயும் பொழுது கிராமப்புற வங்கியரே நமது நாட்டில் முதன் முதலில் வங்கித் தொழிலின் ஆரம்பக் கர்த்தாக்கள் எனலாம். தமிழ்நாட்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், வங்காளத்தில் சேத் மற்றும் பணியாக்கள், உத்திரபிரதேசத்தில் மார்வாடிகள் ஆகியோர் இத்தகைய கிராமப்புற வங்கியர்களாக இன்றளவும் செயல்பட்டு வருகின்றனர். மேலும், தமிழ்நாட்டில் தஞ்சை ஜில்லாவிலுள்ள கல்லிடைக்குறிச்சி பிராமணர்களும் ஓரளவுக்கு இத்தொழில் ஈடுபட்டிந்தாலும், நாட்டுக்கோட்டை நகரத்தார் போன்று பரந்தளவில் இவர்கள் பணியாற்றவில்லை எனலாம்.

மற்ற வணிக வங்கிகளின் போட்டியின் காரணமாகவும், அரசாங்கக் கடன் நிவாரணச் சட்டங்களின் காரணமாகவும் இவர்களது வங்கித் தொழில் ஓரளவுக்கு இக்காலத்தில் பாதிக்கப்பட்டிருந்தாலும் இன்றளவும் கிராமப்புறங்களில் இவர்களது பங்கு முதன்மையாகவே உள்ளது என்பதும் கிராமப்புறக் கடன் வழங்குவதிலும் இவர்கள் ஆற்றிவரும் பணி மகத்தானது என்பதும் உண்மையாகும்.

## வணிக வங்கிகளும் விவசாயக் கடன்களும்

## COMMERCIAL BANKS AND RURAL FINANCE

விவசாயக் கடன் மீது வணிக வங்கிகள் கவனம் 1995 ஆம் ஆண்டில் பாரத ஸ்டேட் வங்கி ஆரம்பிக்கப்பட்ட பொழுதுதான் திரும்பியது எனலாம். பாரத ஸ்டேட் வங்கி ஆரம்பிக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் கூட்டுறவு நடை முறை மற்றும் சந்தையிடுகைச் சங்கங்களுக்கு கடன் வசதி அளிப்பதே ஆகும். பாரத ஸ்டேட் வங்கிகளும் அதன் துணை வங்கிகளும் கிராமப்புறங்களிலும் நடுத்தர நகரங்களிலும் தங்களின் கிளைகளை பெருமளவில் நிறுவின. ஆனால், பிற வணிக வங்கிகள் தங்கள் கிளைகளை நகரங்களில் நிறுவுவதையே விரும்பி வந்தன. வணிக வங்கிகளின் இப்போக்கத்திற்குக் காரணம் என்னவென்றால் அவை விவசாயம் சார்ந்த பிரச்சனைகளிலிருந்து விலகி இருந்தும் விவசாயம் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் நில அபிவிருத்தி போன்றவற்றிற்குரிய விவசாயகளின் கடன் தேவைகளைக் கருத்தில் கொள்ளாததுமே ஆகும். வங்கிகளை நாட்டுடைமையாக்கிய பிறகு நடுத்தர நகரங்கள் மற்றும் கிராமப்பகுதிகளில் அதிவேகமாக வங்கிக் கிளைகளின் வளர்ச்சி ஏற்பட்டது. 1969 ஜுு வரையில் வணிக வங்கிகள் விவசாயத்திற்கு அளித்த மொத்தக் கடன் தொகை ரூ. 162 கோடிகளாகவும் இக்கடனைப் பெற்ற கணக்குகள் 0.2 மில்லியனாகவுமே இருந்தது. ஆனால் தற்போதைய புள்ளி விபரப்படி பார்த்தால் இது அதிவேக வளர்ச்சி கண்டுள்ளது என்பது நமக்குக் கண்கூடாகத் தெரிகின்றது. 1992- 93 ஆம் ஆண்டில் வணிக வங்கிகள் (வட்டார கிராம வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் உள்ளிட்ட) விவசாயத்திற்கு அளித்த மொத்தக் கடன் தொகை ரூ. 13,933 கோடிகளாகும். தற்பொழுது இது ரூ.24,670 கோடிகளாக இருக்கின்றது. இக்கடனைப் பெற்றவர்களுள் பெரும் பகுதியினர் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களே ஆகும்.

### வணிக வங்கிகளின் நேரடி நிதியுதவி

### (Direct Financing By Commercial Banks)

வணிக வங்கிகளுக்கு விவசாயிகளுடன் நேரடித் தொடர்பு கொள்வதில் தேவையான அனுபவம் இல்லை என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே ஆகும். ஆனால், தற்பொழுது வணிக வங்கிகள் விவசாயிகளின் குறிப்பாக சிறிய விவசாயிகளின் நிதித் தேவைக்கு பெரிதும் உதவ வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. ஆரம்பகாலத்தில், நாட்டுமையாக்கப்பட்ட வங்கிகள் பேரளவு உழவர்களுக்கும் பேரளவு உணவு தானிய உற்பத்தியில் ஈடுபடும் பிற குறிப்பிட்ட பிரிவைச்சார்ந்த விவசாயிகளுக்கும் கடனளிப்பதிலேயே கவனம் செலுத்தி வந்தன. ஆனால், தற்பொழுது குறுகிய காலப் பயிர்க் கடனின் அளவு, வணிக வங்கிகளால் அளிக்கப்பட்ட மொத்தக் கடனின் அளவில் சுமார் 47% ஆக உள்ளது. பம்ப் செட்டுகள், டிராக்டர்கள் மற்றும் பிற விவசாயம் சார்ந்த எந்திரங்கள் போன்றவை வாங்குவதற்கும், கிணறுகள் மற்றும் ஆள்குழாய்க் கிணறுகள் வெட்டுவதற்கும், பழம் மற்றும் தோட்டப் பயிர்களை வளர்ப்பதற்கும், நிலத்தை சமப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும், எருதுகள் மிருகங்கள் போன்றன வாங்குவதற்கும் தேவையான பருவக் கடன்கள் பல்வேறு காலங்களில் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்களின் அளவு இவ்வங்கிகளின் மொத்தக் கடனில் 35% முதல் 37% ஆக உள்ளது. மேலும், இவை பால் பண்ணை, பறவைகள் வளர்ப்பு, தேனீ வளர்த்தல், மீன் பிடிப்புத் தொழில்கள் மற்றும் இது போன்ற பிற தொழில்களுக்கும் கடன் அளிக்கின்றன. இவ்வங்கிகளால் அளிக்கப்பட்ட இவ்வகைக் கடன்களின் அளவு 15% முதல் 16% ஆக உள்ளது.

இரண்டு ஹெக்டேருக்குக் குறையான நிலத்தை வைத்துள்ள 70 சதவீத விவசாயிகளுக்கு வங்கிக் கடன் கிடைப்பதில்லை பேரளவு நிலங்களை உடையவர்களே வங்கிக் கடன்களைப் பெறுவதற்கு தகுந்தவர்களாகவும் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால், இந்நிலை நீண்ட

காலத்திற்குத் தொடர இயலாது. திட்டக் குழுவின் இயக்குதலின்படி, வணிக வங்கிகளும் கூட்டுறவு வங்கிகளும் இணைந்து பணிபுரியும் வகையில் சில விவசாயிகளை அடையாளம் காணவும், விவசாய வளர்ச்சிக்கு ஏற்ற சிக்கனமாக திட்டங்களைத் தீட்டவும் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் சிறு விவசாயிகள் வளர்ச்சி ஏஜென்ஸிகள் (Small Farmers Development Agencies) ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் கூட்டுறவு நிறுவனங்கள் ஏற்கனவே நன்முறையில் பணியாற்றி வருவதால், வணிக வங்கிகள் மிகவும் சுறுசுறுப்பாகவும் ஊக்கமுடனும் செயலாற்ற வேண்டியுள்ளது. சிறு விவசாயிகளைக் கண்டுணர்ந்த பிறகு அவர்கள் வளம் பெறக் கூடிய உழவர்களாவதற்கு ஏற்ற வகையில் வங்கிகள் கடனளிப்பதற்காக அவர்களை பலதரப்பட்ட பிரிவினர்களைப் பிரிக்கின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில், வணிக வங்கிகள், சிறு விவசாயிகள் வள்ச்சி ஏஜென்ஸிகள் (Small Farmers Development Agency (SFDA)) மற்றும் சுமாரான விவசாயிகள் மற்றும் விவசாயிகக் கூலிகள் முன்னேற்ற ஏஜென்ஸிகளால் (Marginal Farmers and Agricultural Labourers Development Agency (MFAL)) கண்டுபிடிக்கப்பட்ட பங்கேற்பாளர்களுக்கு (Participants) நிதியுதவி செய்ய ஆரம்பித்து விட்டன. மேலும், SFDA, MFAL பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு கடன் மற்றும் பிற பணிகளை அளிக்கும் வகையில் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை வணிக வங்கிகள் 1973 -74 ஆம் ஆண்டில் ஏற்படுத்தின. இத்திட்டத்தின் கீழ், இவை கடனுதவி மட்டுமின்றி அவர்களின் விளை பொருட்களுக்கு சந்தையிடுகை வசதி செய்து தருவது, உள்ளிடுகைகளை (Inputs) அளிப்பது போன்ற பிற பணிகளையும் மேற்கொள்கின்றன.

**ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டமும் வணிக வங்கிகளும்**
**(IRDP and Commercial Banks)**

1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தை நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் செயலாற்றும் வண்ணம் விரிவடையச் செய்து அத்திட்டத்திற்கு வணிக வங்கிகளை நிதியுதவி அளிக்குமாறு இந்திய அரசு கேட்டுக் கொண்டது. அதற்குரிய வங்கித் திட்டங்களைத் தயார் செய்து அடையாளம் காணப்பெற்ற பங்கேற்பாளர்களுக்கு கடன்களைத் தயார் செய்து அடையாளம் காணப்பெற்ற பங்கேற்பாளர்களுக்கு கடன் அளிக்கும் பொறுப்பை பல்வேறு வணிக வங்கிகளுக்கும் பிரித்த அளிக்கும் பணியை முன்னணி வங்கிகள் (Lead Banks) மேற்கொள்கின்றன. அரசு ஏஜென்ஸிகளால் அடையாளம் காணப்பட்ட பொருளாதார ரீதியாக பின்தங்கிய அனைத்து மக்களுக்கும் கடனளிக்கும் பொழுது அடையாளம் கண்டுணரப் பட்டதாகக் கூறப்படும் அனைவரும் உண்மையிலேயே பொருளாதார ரீதியாகப் பின் தங்கியவர்களாக இருப்பார்கள். எனச் சொல்ல முடியாது. அரசு ஊழியர்கள் அல்லது பிற அரசியல் சார்ந்தவர்களின் வற்புறுத்தல் காரணமாகப் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிறவர்கள் எனக் கூறிச் சேர்க்கப்பட்டவர்களும் கடன் வழங்குவதிலும் தமது முழு கவனத்தையும் செலுத்தவேண்டும்.

இரண்டாவதாக, வணிக வங்கிகள் கடன் பெற்றவர்கள் அனைவரும் தாம் பெற்ற கடனை முறையாகப் பயன்படுத்தவில்லை என்பதைக் கண்டுபிடித்தன. பல சமயங்களில் விவசாயிகள் தாம் பெற்ற கடனை உற்பத்தி சாராத நோக்கங் களுக்கும் கூட செலவிடுவதைக் கண்கூடாகக் காண முடிகிறது. ஆனால் பெற்ற கடனை எருதுகள் வாங்குதல் போன்றவற்றிற்குச் செலவிட்டதாகக் கூறி அதற்குரிய இரசீதுகளை போலி விற்பனையாளர்களிடம் இருந்து பெற்றுத் தந்து விடுகின்றனர். எனவே, வங்கிகள் கடன்களை அளிக்கும் முன்பு விற்றல் - வாங்கல் நடவடிக்கைகளின் நம்பத்தக்க தன்மையை உணர்ந்து கொள்தல் வேண்டும்.

மூன்றாவதாக, வங்கிக் கடனைப் பெறுபவர்களின் பட்டியலில் இடம்பிடிக்க வேண்டுமெனில், சிறிய மற்றும் படிப்பறிவில்லாத விவசாயிகளுக்கு கடைநிலை

அரசு ஊழியர்கள், கால் நடை மருத்துவர்கள் போன்றவர்களின் தயவு வேண்டி உள்ளது. இவர்கள் விவசாயிகளிடம் பணத்தைப் பறித்துக் கொண்டே அவர்களின் பெயரை பட்டியலில் இடம் பெறச் செய்கின்றனர். உள்ளூரில் உள்ள அரசியல் பிரமுகர்கள் மற்றும் பஞ்சாயத்து சமிதி உறுப்பினர்கள் கூட வங்கிக் கடனில் தலையிடுகின்றனர். ஆனால் இறுதியில், அதிகளவு கடன் நிலுவையினால் வங்கிகளே அவதியுற நேரிடுகின்றது. எனவே, வங்கிகள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடனளிப்பதில் ஊக்கம் குறைந்து காணப்படுகின்றன.

**சுயபரிசோதனை:**

1. விவசாயத்தின் மூலம் ___________, தொழிற்சாலைக்குத் தேவையான ___________ஆகியன கிடைப்பதோடு அல்லாமல் பலகோடி மக்களுக்கு வேலைவாய்ப்பும் ஏற்பட்டுள்ளது (உணவு, மூலப் பொருகள்).
2. நமது விவசாயத்தின் பெரும்பகுதி ____________________ நம்பியுள்ளது(பருவ மழையை).
3. மொத்த விவசாயக் கடன்களில் ____________________மட்டுமே கடன் நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளது (7% ).

ஆயினும் இவை தளர்ச்சியடையாமல் தமது பணியை செவ்வனே நிறைவேற்றி வருகின்றன என்பதை நமக்குப் பின்வரும் புள்ளி விபரங்கள் விளக்குகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1993 - 94 வரை பயன்பெற்ற நபர்களின் எண்ணிக்கை சுமார் 25.38 இலட்சங்களாகும். இத்திட்டத்தின் கீழ் வங்கிகள் ரூ. 1,408 கோடிகள் கடனாக அளித்துள்ளன. மானியமாக ரூ. 757 கோடிகள் அளித்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த 25.38 இலட்சம் பேர்களில் பயனடைந்த தாழ்த்தப் பட்ட மற்றும் மலை ஜாதி வகுப்பைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 8.54 இலட்சங்களாகவும் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் இவ்வங்கிகளால் அளிக்கப்பட்ட கடன் தொகையின் மீட்பு பற்றிய புள்ளி விபரங்களை நாம் பின்வரும் அட்டவணையின் மூலம் அறியலாம்.

**ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கடன் மீட்பு விபரம்**

| ஜுன் கடைசிவரை | தேவை | மீட்பு | தேவை மீதான மீட்பின் சதவிகிதம் |
|---|---|---|---|
| 1991 | 1,272 | 526 | 41.4 |
| 1992 | 1,439 | 457 | 31.8 |
| 1993 | 1,657 | 505 | 30.3 |

ஆண்டு செல்ல கடனின் தேவை அதிகரித்து வருவதும் ஆனால் அத்தேவை மீதான மீட்பின் சதவீதம் குறைந்து வருவதும் நமக்கு மேற்கண்ட அட்டவணை மூலம் தெளிவாகத் தெரிகின்றது. எனவே, வணிக வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் கடனளிப்பதில் ஊக்கம் குறைந்து காணப்படுவதில் தவறொன்றும் இல்லை. ஆயினும், கிராமப் பொருளாதாரத்தின் ஏற்றத் தாழ்வை சரிப்படுத்துவதற்கான ஒரு முன்னோடித் திட்டமாகவும் இத்திட்டம் கருதப்படுவதால், வணிக வங்கிகள் இதிலுள்ள குறைபாடுகளை களைந்து ஊக்கமுடன் செயலாற்றி மீட்பின் சதவீதத்தையும் அதிகரிக்கச் செய்தல் வேண்டும். அப்பொழுதுதான், இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெற்றியை அவை அடையமுடியும்.

## முதனிலை விவசாயம் சார்ந்த கடன் சங்கங்களுக்கு நிதியுதவி
## (Credit Facilities to Primary Agricultural Credit Societies)

முதனிலை விவசாயம் சார்ந்த கடன் சங்கங்கள் என்ற ஒரு திட்டத்தை வணிக வங்கிகள் 1970 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தின. தற்பொழுது,சுமார் 3,000 சங்கங்கள் நாட்டின் 13 மாநிலங்களில் உள்ள 142 மாவட்டங்களில் வணிக வங்கிகளின் நிதியுதவியுடன் பணியாற்றி வருகின்றன. வணிக வங்கிகளின் கிளைகளுக்கும் அதன் பணியாளர்களுக்கும் விவசாயிகளுடன் நேரடித் தொடர்பு இல்லை என்ற ஓர்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இவை விவசாயக் கடன்களை இச்சங்கங்களின் மூலமாக அளிக்கின்றன. ஆனால், இத்திட்டம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. முதலாவதாக, வணிக வங்கிகளும், முதனிலை விவசாயம் சார்ந்த கடன் சங்கங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாத இரண்டு பிரிவுகளைச் சார்ந்தவைகளாகும். எனவே, இவை இரண்டையும் ஆற்றல் மிக்கதாக இணைப்பது இயலாத காரியமாகும். இரண்டாவதாக, மத்திய, மாநிலக் கூட்டுறவு வங்கிகள் முதனிலை விவசாயம் சார்ந்த சங்கங்கள் தம் பிடியில் இருந்து வணிக வங்கிகளின் பிடிக்குச் செல்வதை விரும்பவில்லை. ஆயினும், முதனிலை விவசாயம் சார்ந்த சங்கங்களுக்கும் வணிக வங்கிகளின் கிளைகளுக்கும் இடையே நல்ல ஓர் ஒருங்கிணைப்பிற்கு வாய்ப்புள்ளது. அவற்றிற்கான காரணங்களாவன.

1. முதனிலை விவசாயம் சார்ந்த கடன் சங்கங்களிடம் இருந்து கடனுதவி பெறத் தகுதியுடைய ஆனால் அச்சங்கத்திடம் பண உதவி செய்யத் தேவையான நிதி இல்லாததால் கடன் உதவி பெற முடியாத விவசாயிகளுக்கு வணிக வங்கிகளின் கிராமக் கிளைகள் நிதியுதவி செய்யலாம்.

2. மேலாண்மையின் அறிவுறுத்தலின் பேரில் வணிக வங்கிகளின் கிராமக் கிளைகள், முதனிலை விவசாயம் சார்ந்த சங்கங்களுடைய கணக்குப் புத்தகங்களின் முறையான நிர்வாகம், கணக்கு சார்ந்த நடைமுறை போன்றவற்றிற்கு உதவி புரியலாம்.

3. கடன் பெற விரும்பும் விவசாயிகளுள் தகுதியுடையவர்களைக் கண்டு பிடித்து கடன் அளிக்கவும் பின் அவர்களிடம் இருந்து கடனைத் திரும்பப் பெறவும் வணிக வங்கிகளுக்கு முதனிலை விவசாயம் சார்ந்த கடன்சங்கங்கள் உதவலாம்.

## வணிக வங்கிகளின் மறைமுக நிதியுதவி
## (Indirect Financing By Commercial Banks)

வணிக வங்கிகளின் நேரடிக் கடனளிப்பிற்கு குறைந்தவளே வாய்ப்பு இருப்பினும் அவைகளின் மறைமுகக் கடனுக்குரிய வாய்ப்பு கணிசமான அளவிலேயே உள்ளது. உதாரணமாக, விவசாயிகளுக்கு உற்பத்தி சார்ந்த கடனை அளிக்கும் வகையில் இவை, கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி செய்கின்றன. குறிப்பாக இவை, விவசாய விளை பொருட்களின் சந்தையிடுகை மற்றும் நடைமுறைக்கு கடனுதவி செய்யும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பால் பண்ணை, பறவைகள் வளர்ப்பு போன்ற விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளுக்கு கடனுதவி அளிக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடனுதவி செய்கின்றன. இரண்டாவதாக, விவசாய விளை பொருட்களின் உற்பத்தி மற்றும் சந்தையிடுக்கைக்குத் தேவையான உள்ளிடுகைகளின் (Inputs) அளிப்பில் ஈடுபடும் ஏஜென்ஸிகளின் மூலமும் இவை உழவர்களுக்கு மறைமுகக் கடன்களை வழங்குகின்றன. மூன்றாவதாக, வாடகைக் கொள் முதல் முறை அல்லது பிற முறையில் பம்ப் செட்டுகள் மற்றும் பிற விவசாயம் சார்ந்த எந்திரங்களின் அளிப்பில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் மற்றும் ஏஜென்ஸிகளுக்கும் இவை கடனுதவி செய்கின்றன.

நான்காவதாக, உணவு தானியங்களை வாங்குதல், சேமித்து வைத்தல் மற்றும் அவற்றின் பகிர்ந்தளித்தலில் ஈடுபடும் இந்திய உணவுக் கழங்கள், அரசு மற்றும் பிற அமைப்புகளின் நடவடிக்கைகளுக்கும் இவை நிதியுதவி செய்கின்றன.

இறுதியாக, மத்திய நில வள வங்கிகளின் கடன் பத்திரங்களில் முதலீடு செய்வது மட்டுமல்லாது அவைகளுக்கு இவை நிதியுதவி செய்கின்றன. இதனால், நில வள வங்கிகளால், விவசாயிகளுக்கு அவர்களின் நில அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்கத் தேவையான நடுத்தரக் கால மற்றும் நீண்ட காலக்கடன்களை அளிக்க முடிகின்றது.

**வணிக வங்கிகளின் இணை கூட்டான பங்கு**

**(Supplementary Role of Commercial Banks)**

இனி வரக்கூடிய காலங்களில் விவசாயத் துறையின் ஆண்டுக் கடன் தேவையானது ரூ. 15,000 கோடிகளாக உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தேவைகளை நிறைவேற்ற வேண்டுமெனில், கூட்டுறவு அமைப்புக்களிடமே விவசாயக் கடன் தொடர்பான தேவையான பொறுப்பும் கடமைப் பொறுப்பும் தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும். வணிக வங்கிகளிடம் உள்ள விவசாயத்திற்குத் தேவையான வள ஆதாரம் மிகவும் குறைந்தளவினதாக இருக்கின்றது.எனவே, ஒவ்வொரு வணிக வங்கியும் தன்னிடம் உள்ள வள ஆதாரத்தை மிகச்சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

விவசாயத் துறைக்கு நிதியுதவி செய்வதில் உள்ள பிரச்சனை கடனளிக்கத் தேவையான நிதி அளவோடு மட்டும் தொடர்புடையதாக அல்லாமல் வணிக வங்களிடம் உள்ள அதன் பணியாளர்கள் மற்றும் அதன் அமைப்புமுறையோடும் தொடர்புடையதாக உள்ளது. கிராம மக்கட் தொகையில் பெரும்பகுதியினர் சிறு விவசாயிகளாக உள்ளனர். மேரும், நம் நாடு முழுவதிலும் மொத்தம் 5,50,000 கிராமங்கள் உள்ளன. 35,404 கிராம வங்கிக் கிளை அலுவலகங்களோடு இவை அனைத்தையும் சென்று அடைவது என்பது வணிக அலுவலகங்களோடு இவை அனைத்தையும் சென்று அடைவது என்பது வணிக வங்கிகளைப் பொருத்த அளவில் சந்தேகமே இல்லாமல் ஒரு மிகப் பெரிய பணியே ஆகும். வணிக வங்கிகளால் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் கிராமப்புற வங்கிக்கிளைப் பெருக்கத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகும் கூட அல்லது இதைப்போல் இன்னும் 5 அல்லது 10 வருடங்களில் இன்னும் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பிறகும் கூட இவ்வனைத்து கிராமங்களையும் சென்றடைவது என்பது இவைகளுக்கு மிகவும் கடினமான ஓர் செணலாகவே இருக்கும். எனவே விவசாய அபிவிருத்தி, நிதித் தேவையினால் பாதிப்படையாமல் இருக்க வேண்டுமெனில், விவசாய நிதித் திட்டங்களுக்கு புதிய உருவளவுகளை (Dimensions) அளித்தல் அவசியம்.

**<u>வினாக்கள்</u>**

**1. கிராமப்புற வங்கியின் நோக்கங்கள் யாவை?**

**2. கிராமபுற நிதி உதவிக்கு தேவையான காரணம் என்ன?**

**3. கிராமப்புறக் கடன் தேவையின் மதிப்பிடுதல் எவ்வாறு?**

**4. கிராமப்புற நிதிஉதவி பெறும் வழிகள் யாவை?**

**5. வணிக வங்கிகளும் விவசாயக் கடன்கள் பற்றி கூறுக?**

**6. வணிக வங்கிகளின் மறைமுக நிதியுதவி எவ்வாறு பெருவது?**

**7. வணிக வங்கிகளின் நேரடி நிதியுதவி எவ்வாறு பெருவது?**

## குறிப்பு

……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..

## அலகு- II

## கிராமப்புறக் கடன் வழங்கும் நிறுவனங்கள்
## INSTITUTIONS FOR RURAL CREDIT

மேலே குறிப்பிட்ட கிராமப்புற லேவாதேவிக்காரர்களிடம் சிக்கி மீள இயலாம் தவிக்கும் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படச் செய்யும் நோக்கத்துடன் 1950 ஆம் ஆண்டில் கிராமப்புற வங்கி விவசாரணைக் குழுவை (Rural Banking Enquiry Committee) ரிசர்வ் வங்கி நியமித்தது. இக்கமிட்டியை நியமித்ததன் நோக்கம் வங்கி வசதிகளை கிராமப்புறங்களில் வளர்ப்பதற்கான வழிவகைகளை (Ways and Means) ஆராய்வதேயாகும். இக்கமிட்டி கிராமப்புறக் கடன் தேவையில் 45% கிராமப்புற வங்கியராலும், லேவாதேவிக்காரர்களாலும் 25% மற்ற கடன் வழங்குவோர்களாலுமே பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதனைக் கண்டுபிடித்தது. அரசு கிராமப்புறக் கடன் தேவைகளில் 6 சதவிகிதம் கூடப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் உள்ளது என்பதையும் சுட்டிக் காட்டியது. மேலும், மத்திய, மாநில அரசுகள், கூட்டுறவு நிறுவனங்கள் இத்துறையில் ஆற்ற வேண்டிய பணிகளையும் குறிப்பிட்டது. இதன் சிபாரிசுகளின் அடிப்படையில் பல பணிகளை அரசு மேற்கொண்டது. அதுபற்றி பின்னர் ஆராற்வோம். மீண்டும் 1969 ஆம் ஆண்டு அகில இந்திய கிராமப்புறக் கடன் மதிப்பீட்டுக் கமிட்டியை (All India Rural Credit Review Committee) அமைத்து கிராமப்புறக் கடன் பற்றி தீவிர விவசாரணை நடத்தும்படி பணித்தது. இக்கமிட்டியால் பல சிபாரிகளையும்ச் செய்தது. அதன் பின்னர் 1979 ஆம் ஆண்டு பி. சீனிவாசன் கமிட்டி ( B.Srinivasan Committee) என்ற கமிட்டியை அமைத்து கிராமப்புறக் கடன் நிறுவனங்களின் பணிகளைப் பற்றியும், அந்நிறுவனங்களின் வளர்ச்சி பற்றியும் ஆராயும்படி பணித்தது. இவை பற்றி உரிய இடங்களில் ஆராய்வோம்.

### நிறுவனங்கள் மூலமாகக் கடன் வழங்குவதன் அவசியம்
### (Need for Lending Loans through Institutions)

நிறுவனங்கள் அல்லாத தனியார் மூலமாகக் கடன் வழங்குவதில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு .

1. இலாப நோக்கத்துடனேயே இக்கடன்கள் வழங்கப் பெறுவதால், விவசாயின் தமது வருமானத்தில் பெரும் பகுதியை வட்டியாகவோ செலுத்த வேண்டியுள்ளது. இதனால் விவசாயிகள் பெருமளவில் சுரண்டப்படுகின்றார்கள்.

2. இவர்களிடமிருந்து கடன் வாங்குவது சுலபாமாயினும் இவ்வகைக் கடன்கள் பெருமளவில் நட்டத்தை ஏற்படுத்துவதாக உள்ளன.

3. பல நேரங்களில் இக்கடன்கள் விவசாய உற்பத்தியோடு தொடர்பில்லாத காரியங்களில் பயன்படுத்தப்பட்டு விரயமாக்கப்படுகின்றன.

4. இக்கடன்கள் விவசாயிகளின் பல்வேறு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரப் பயன்படவில்லை.

எனவே, நிறுவனங்கள் மூலம் கடன் வழங்குவதன் மூலமே விவசாய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்பதை மத்திய அரசு உணர்ந்து பல்லேறு நிதி நிறுவனங்களின் மூலம் கடன் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளது. இவ்வாறு நிறுவனக் கடன்கள் மூலம் விவசாயிகள் பெறும் நன்மைகள் ஏராளமாகும். அவற்றுள் சில பின்வருமாறு.

1. இக்கடன்கள் விவசாயிகளைச் சுரண்டும் நோக்கோடு வழங்கப் படுவதில்லை. மாறாக அவர்களது உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்குடன் அளிக்கப்படுகின்றன.

2. குறுகிய காலக் கடன்களும், நீண்ட காலக் கடன்களும் உள்ள வேறுபாடுகளை இவை நன்கு உணர்ந்து அதற்கேற்பச் செயல்படுகின்றன.

3. இறுதியாக நிறுவனங்களின் வாயிலாக வழங்கப்படும் கடன்கள் விவசாயிகளின் தேவைகளை ஒருங்கினைத்து விவசாயம் வெற்றி பெறவும் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் உதவுகின்றன.

எனவே, விவசாயிகள் முறையாக திட்டமிட்டு, தமது விளைச்சலைப் பெருக்கி, தமது வருமானத்தை அதிகரிக்க நிறுவனம் மூலம் வழங்கப்படும் கடன்களே ஏற்றவையாகும்.

இனி, கிராமப்புறக் கடன் வழங்கும் நிறுவனங்கள் பற்றியும் அவற்றில் பணிகள் பற்றியும் ஆராய்வோம்.

**1.கூட்டுறவுக் கடன் சங்கங்கள்**

## CO – OPERATIVE CREDIT SOCIETIES

கிராமப்புறக் கடன் வசதிகளிலேயே சிறந்ததும், சிக்கனமானதும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் பெறும் கடன்களேயாகும். இவை வசூலிக்கும் வட்டியும் மிகவும் குறைவு. வணிக வங்கிகள் கிராமப்புற விவசாயிகளைப் புறகணித்து வந்ததனால், நாடு விடுதலையடைந்த பிறகு அரசு கிராமப்புறக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்ய கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதற்குப் பெருமளவில் ஆதரவு அளித்தது. நாடு சுதந்திரம் பெற்ற பிறகே இதன் வளர்ச்சி பல மடங்கு அதிகரித்தது.

கூட்டுறவுச் சங்கங்களைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். எனினும், நமது ஆய்வின் சுருக்கம் கருதி இவற்றை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. முதனிலைக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் (Primary Co – operative Credit Societies).
2. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (Co – operative Central Banks).
3. மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ( State Co – operative Banks).

மாநிலக் கூட்டுறவு வங்கி ரிசர்வ் வங்கியிடம் கடன் பெறும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்குகின்றது. மத்திறக் கூட்டுறவு வங்கி மாவட்ட அளவில் செயல்படும் வங்கியாகும். தஞ்சை போன்ற சில மாவட்டங்களில் இரண்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் உள்ளன. இவை முதனிலை கூட்டுறவு நாணயச் சங்கங்களுக்குக் கடன் வழங்குகின்றன.

**1. முதனிலைக் கூட்டுறவு நாணயக் சங்கங்கள் (Primary Co – operative Credit Societies)** : இவை கிராம அளவில் செயல்படும் சிறிய கூட்டுறவு வங்கிகளாகும். இவற்றின் நிர்வாகம் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழு (Board of Directors) வசம் உள்ளது. இவர்களில் ஒருவர் ஊதியமில்லாத கவுரவ செயலாளராக (Honorary Secretary) பணிபுரிபவர் ஆவார். இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன்கள் அளிக்கின்றன. இக்கடன்களும், விதைகள், உரம், பூச்சி மருந்து போன்ற விவசாயத்திற்குத் தேவையானப் பொருள்களாகவும், ரொக்கமாகவும் வழங்கப்படுகன்றன. இவைகளுக்கு பொதுமக்களிடமிருந்து டெபாசிட் பெறவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, இவை மத்திய கூட்டுறவு வங்கயிடமிருந்து கடன்களும், அரசிடமிருந்து மானியமும் பெறுகின்றன. இச்சங்கங்கள் குறுகிய கால கடன்களை மட்டுமே வழங்குகின்றன.

பொதுவாக இவை அறுவடை காலங்களில் விவசாயம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவே கடன்களை அழிக்கின்றன. இக்கடன்களுக்கு அழிக்கப்படும் வட்டி விகிதம் நிலையானதாகும் (Fixed). 9, 82, 20,000 மில்லியன் அங்கத்தினர்களைக் கொண்ட 91,720 முதனிலைக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் தற்பொழுது (31.03.1998 அன்றுள்ளபடி) நம் நாட்டில் இயங்கி வருகின்றன. இவை 1992 – 1993 ஆம் ஆண்டில் ரூ.6,401 கோடிகளைக் கடனாக அளித்துள்ளன. ஜுலை 1992 முதல் ஜுன் 1996 வரை இவைகளால் பெறப்பட்டவைப்பின் அளவு ரூ 3,450 கோடிகள் ஆகும்.

இச்சங்கங்களின் உபயோகம் சீராக அதிகரித்துக் கொண்டே வருகிறது. 1950 – 1951 இல் இவை அளித்த கடனின் மதிப்பு சுமார் 23 கோடி ரூபாய் ஆகும். இது 1960 – 1961 இல் 203 கோடி ரூபாயாக இருந்தது. 1992 - 1993 ல் இது 6,401 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இவை, சிறிய மற்றும் நடுதர விவசாயிகளுக்கும் கூட தமது கடன் திட்டத்தை விவரித்துள்ளன. இவற்றின் வளர்ச்சி வேகமானதாகத் தோன்றினாலும், விவசாயிகளின் நிதித் தேவையைக் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது இதன் வளர்ச்சி போதுமானதாகத் தோன்றவில்லை.

**2. கூட்டுறவு மத்திய வங்கிகள் (Co – operative Central Banks) :** ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கி செயல்படுகின்றது.( தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இரண்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன). கிராம முதல் நிலைக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பே (Federation) இம்மத்திய வங்கி எனலாம். இவ்வங்கிகள் பெரும்பாலும் மாவட்டத் தலைநகரங்களைத் தலை மையிடமாகக் கொண்டு செயல்பட்டாலும், தாலுகா தலைநகர்களிலும் தமது கிளைகளைத் திறச்துள்ளன. இவை பொதுமக்களிடமிருந்து தவணை வைப்புகள் (Fixed Deposists ) பெறுவதோடு ஓரளவுக்கு வணிக வங்கிகளின் பணிகளையும் ஆற்றுகின்றன.

இம்மத்திய வங்கிகளே கிராமக் கூட்டுறவுச் சங்களுக்குக் கடன் வழங்குகின்றன. நகர்ப்புறக் கூட்டுறவு வங்கியில் உபரியாகக் கிடைக்கும் இவை ஏற்பாடு செய்கின்றன. எனவே இவற்றின் பணி மகத்தானதாகும் இவை பொதுமக்களிடம் வணிக வங்கிகளை விடஅரை சதவீதம் அதிக வட்டி தந்து டெபாசிட் பெறவும் ரிசர்வ் வங்கி அனுமதித்துள்ளது. எனினும் , இவை தனிநபர்களுக்கு தங்க நகைகளின் ஈட்டின் பேரில் மட்டும் ஓரளவுக்குக் கடன் வழங்கி வருகின்றன.

தற்பொழுது (31-3-1998 அன்றுள்ளபடி) சுமார் 364 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 1,179 கிளைகளுடன் நம் நாட்டில் இயங்கி வருகின்றன. 1992 – 93 ஆம் ஆண்டில் இவ்வங்கிகள் அளித்த கடனின் மொத்த அளவு ரூ. 13, 572 கோடிகள் ஆகும். இது இதன் முந்தைய ஆண்டுக் கடனின் அளவை விட ( ரூ . 14,226 கோடிகள்) 4.8% குறைவானதாகும். இதன் வைப்பின் அளவு 1997 – 98 ஆம் ஆண்டில் ரூ. 33,931 கோடிகளாக உள்ளது. இது முந்தைய ஆண்டு இவ்வங்கிகள் பெற்ற வைப்பை ( ரூ. 30, 403 கோடிகள்) விட 11.6% அதிகமாகும்.

**3. மாநிலக் கூட்டுறவு வங்கிகள் (State Co – operative Banks) :** எல்லா மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் தலைமையாக மாநிலக் கூட்டுறவு வங்கி இயங்குகின்றது. இது ரிசர்வ் வங்கியிடம் கடன் பெற்ற மாவட்ட மத்திய வங்கிகளுக்குக் கடன் வழங்கி அதன் மூலமாக கிராமப்புறக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு கடன் வழங்குகின்றது. எனவே, இவை நேரடியாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதில்லை. தற்சமயம், இந்தியாவில் 28 மாநிலக் கூட்டுறவு வங்கிகள் போன்று பொதுமக்களிடம் டெபாசிட் பெற அதிகாரம் பெற்றுள்ளன. ஸ்டேட் வங்கியிடமும் இவ்வங்கிகள் கடன் பெறுகின்றன.

இவ்வங்கிகளுக்கு முக்கியமாகக் கடன் தருவது ரிசர்வ் வங்கியேயாகும். மேலும் ரிசர்வ் வங்கியிடமிருந்து மறு நிதி (Refinance) வசதி பெறவும் இவற்றிற்கு உரிமை உள்ளது. சமீபகாலங்களிலேயே இவை வளர்ச்சி பெற்றுள்ளதால், இவற்றின் நிதியாதாரம் மிகக் குறைவாகவே உள்ளது. மேலும் ரிசர்வ் வங்கியையே இவை முற்றிலும் சார்ந்துள்ளன.

1998 ஆம் ஆண்டு மார்ச் மாதக் கடைசி வரையில் இவ்வங்கிகளால் பெறப் பட்ட மொத்த வைப்பின் அளவு ரூ. 12,584 கோடிகளாகும். இது 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதக் கடைசி வரையில் ரூ. 17, 489 கோடிகளாக இருந்தது. 1993 ஆம் ஆண்டு வரையில் மார்ச் மாதக் கடைசி வரையில், இவைகளால் அளிக்கப்பட்ட கடனின் அளவு ரூ. 8,260 கோடிகளாகும். இது முந்தைய ஆண்டு இவ்வங்கிகள் கொடுத்த கடனின் அளவை விட (ரூ. 7,685 கோடிகள்) 7.5% அதிகமாகும்.

**சுயபரிசோதனை**

1. __________ஆம் ஆண்டில் கிராமப்புற வங்கி விவசாரணைக் குழுவை (Rural Banking Enquiry Committee) ரிசர்வ் வங்கி நியமித்தது (1950)

2. கிராமப்புறக் கடன் வசதிகளிலேயே __________ , __________ கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் பெறும் கடன்களேயாகும்( சிறந்ததும், சிக்கனமானதும்).

3. இந்தியாவில் __________ மாநிலக் கூட்டுறவு வங்கிகள் போன்று பொதுமக்களிடம் டெபாசிட் பெற அதிகாரம் பெற்றுள்ளன (28)

## 3. வட்டார கிராம வங்கிகள்
## REGIONAL RURL BANKS

மறைந்த இந்தியப் பிரதமா் திருமதி. இந்திராகாந்தி அறிவித்த 20 அம்சத்திட்டத்தில் கிராமப்புற மக்கள் மற்றும் சிறு விவாசயிகளைக் கடனிலிருந்து மீட்பது ஒரு முக்கய அம்சமாகும். மேலும், விவசாயிகளுக்கு நிறுவனக் கடன் (Institutional Credit) வழங்க ஏற்பாடு செய்வதும் இதில் அடங்கும். மேலும், கடன் நிவாரணத் சட்டத்தினால்கிராமப்புற வங்கியரும், லேவாதேவிக்காரா்களும், கடன் கொடுப்பதை நிறுத்திவிட்டனா். இதனால் கிராமப்புற விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க மாற்று ஏற்பாடு செய்வது அவசியம். எனவே, அப்போது நிதி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பரமணியம் அவா்கள் இதுபற்றி ஆராய்வதற்க்காக எம். நரசிம்மன் என்ற அறிஞா் தலைமையில் ஒரு குழுவை நியமித்தாா். இக்குழு கிராம வங்கிகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. எனவே, 1978 ஆம் ஆண்டு செப்டம்பா் மாதம் 26 ஆம் தேதியன்று நாடு முழுவதும் வட்டாக் கிராம வங்கிளை ஏற்படுத்துவதற்க்கான அவசரச் சட்டம் (Ordinance) பிறப்பிக்கப்பட்டு, பின்னா் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டுச் சட்டமாயிற்று. இவ்வங்கியைத் தொடங்கியதன் முக்கிய நோக்கம் கிராமப்புற சிறிய (small) , சுமாரன (Marginal) விவசாயிகளுக்கும், கிராமப்புறக் கைவினைஞா்களுக்கும் (Village Artisans) , விவசாயக் சுலிகளுக்கும் கடன் வசதி செய்து தந்து அதன் உற்பத்தியை பெருக்குவதோடு அவா்களது வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதாகும் .

தொடக்கத்தில், உத்திரப்பிரதேசம், ஹரியானா, இராஜஸ்தான், மேற்கு வங்களாம் ஆகிய மாநிலங்களில் வட்டார கிராம வங்கிகள் தொடங்கப்பட்டன. நம் மாநிலத்தில் பாண்டியன் கிராம வங்கி தொடங்கப்பட்டது.

### மூலதனம் (Capital)

ஒவ்வொரு வட்டார வங்கியும் ஒரு கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் இவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம் (Paid – up Captial ) 25 இலட்ச ரூபாய் ஆகும். இதில் 50 % மத்திய அரசும், 15 % சம்பந்தப்பட்ட மாநில அரசும், மீதியுள்ள 35 % இவ்வங்கியை ஏற்று நடத்தும் தேசியமயமாக்கப்பட்ட வங்கியும் செலுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

### வணிக வங்கிகளும் வட்டார கிராம வங்கிகளும் உள்ள வேறுபாடுகள்
### (Difference between Commercial Banks and RRBs )

ஒவ்வொரு வட்டார கிராம வங்கியும் ஒரு தேசியமாக்கப்பட்ட வங்கியால் முயற்சி எடுத்துத் தொடங்கப்பட்டு பின் நிா்வாகத்திலும் முயற்சி எடுத்த வங்கி, பங்கு வகிக்க வேண்டும் என்று ஆரம்பத்தில் முடிவு செய்யப்பட்டது. இவ்வட்டார வங்கிகள் ஓரளவுக்கு வண்க வங்கிகளின் பணிகளை ஆற்றினாலும் பல விதங்களில் வணிக வங்கிகளிடமிருந்து வேறுப்பட்டுள்ளன.

1. ஒவ்வொரு வட்டார வங்கியும் ஒன்று அல்லது இரண்டு மாவட்டகளில் மட்டுமே செயல்படும் சில அசாதாரணமான சூழ்நிலையில் ஐந்து மாவட்டங்களிலும் கூட செயல்படுவதுண்டு.

2. வட்டார வங்கிகள் 100 கிளைகளுக்கு மேல் திறக்கக் கூடாது. அதுவும் பெரும்பாலும் வணிக வங்கியோ அல்லது கூட்டுறவு சங்கமோ இல்லாத கிராமங்களிலேயே கிளைகளைத் திறக்க வேண்டும்.

3. கூட்டுறவு நாணயச் சங்கங்கள் வசூலிக்கும் வட்டியை விட இவ்வங்கிகள் அதிகமாக வட்டி வசூலிக்க இயலாது.

4. ஆதிவாசிகள், பின்தங்கிய வகுப்பினா், ஹரிஜனங்கள் ஆகியோா் அதிகமாக வசிக்கும் இடங்களிலும், வேறு வங்கி வசதியே இல்லாத இடங்களிலுமே கிளைகளைத் திறக்க வேண்டும்.

**வட்டார வங்கிகள் பெறும் சலுகைகள் ( Concessions to RRBs )**

வங்கி தொடங்கப்பட்டதில் இருந்து அதனை தொடங்கி வைத்த வங்கி (Sponsoring Bank ) தொடா்ந்து நிா்வாகம், நிதி உதவி முதலிய தேவையான உதவிகளைச் செய்து தரவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மேலும், மடன் வழங்குவதற்கு 8.5 வட்டி வசூலிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், வங்கியின் நிா்வாகத்தை கவனிக்க அனுப்பும் அதிகாரிகள், அலுவலா்கள் ஆகியோரின் சம்பளத்தையும், வட்டார வங்கி அலுவலா்களுக்குப் பயிற்சி அளிக்க ஆகும் செலவையும் (Cost of Training the RRBs Staff ) தொடங்கி வைக்கும் வங்கியே ஏற்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், மானியமாக ஆண்டு தோறும் சராசரி 2.30 இலட்சம் ரூபாய் தரும்படியும் கட்டளையிடப்பட்டது.

இச்சலுகைகள் தவிர, ரிசா்வ் வங்கியும் பல சலுகைகளை வட்டார வங்கிகளுக்கு வழங்கி வருகின்றது. மறு நிதி வசதியும் (Refinance facilities ) செய்து தருகின்ற விவசாய மறு நிதி வளா்ச்சிக் கழகமும் இவ்வங்கிகளுக்கு மறுநிதி வசதி செய்து தருகின்றது.

எனவே, மற்ற எந்த நிறுவனங்களுக்கும் கிடைக்காத அளவுக்கு பெருமளவில் வட்டார வங்கிகள் பல வழிகளில் சலுகைகளும் நிதி உதவிகளும் பெறுகின்றன எனலாம்.

**வட்டார வங்கிகளின் பணியும் வளா்ச்சியும்**
**(Functions and Progress of the RRBs)**

1998 ஆம் ஆண்டு மாா்ச் – மாதக் கடைசி வரையிலான புள்ளி விவரப்படி இவ்வங்கிகள் 45 மாவட்டங்களில் மொத்தம் 14, 475 கிளைகளைத் திறந்துள்ளன. இதனால், மற்ற வணிக வங்கிகள் கிராமப்புறங்களில் தமது கிளைகளை திறக்க இயலாத இடங்களில் கூட இவ்வங்கிகள் கிளைகளைத் திறந்து அவற்றின் சுமைகளைப் பெருமளவில் குறைந்துள்ளன எனலாம். இவ்வங்கிகள் 1993 செப்டம்பா் வரையில் 4,682 கோடி ரூபாய் கிராமங்களில் கடனாக வழங்கியுள்ளன. 1992 -93 ஆம் ஆண்டில் இவைகள் அளித்த கடனின் அளித்த கடனின் அளவு ரூ.1,197 கோடிகள் ஆகும். இக்கடனால் 23.83 இலட்சம் போ் பயனடைந்துள்ளாா். 31-3-97 அன்றுள்ளபடி, வட்டார கிராம வங்கிகளின் கிளைகள் மொத்த கிராமப்புறக் கிளைகளில் 43% ஆகவும், மொத்த கிராமப்புற வைப்புகளில் இவற்றின் வைப்பு 23% ஆகவும் மற்றும் கிராமப்புற கடனளிப்பில் இவற்றின் கடனளிப்பு 2.6% ஆகவும் உள்ளன. இவற்றின் வளா்ச்சியையும் வெற்றியையும் நாம் பின்கண்ட அட்டவணை மூலம் காணலாம்.

1977 ஆம் ஆண்டில் எம். எல். தந்த்வாலா (M.L. Dantwala) என்பவரது தலைமையில் இவ்வங்கிகளின் பணிகளைப் பற்றி ஆராய ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டது. இக்கமிட்டி வட்டார வங்கிகள் திறமையாகச் செயல்படப் பின்வரும் யோசனைகளைக் கூறியது.

1. இவ்வங்கிகளின் அமைப்புமுறையிலும், செயல்படும் விதத்திலும் பல மாற்றங்கள் தேவை.

2. பலகீனமான இடங்களில், அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தும் அவை சரியாகச் செயல்பட இயலாத இடங்களில் வங்கிக் கிளைகளை அவசியம் நிறுவ வேண்டும்.

3. சில இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களோடு இணைந்து வங்கியும் செயல்பட வேண்டும்.

4. அவ்வப்போது இதன் கடன் வழங்கும் கொள்கைகள், பணிகள் முன்னேற்றங்கள் போன்றன ஆய்வு செய்ப்பட வேண்டும்.

**வட்டார கிராம வங்கிகளால் சந்திக்கப்படுகின்ற பிரச்சனைகள்**

**(Problems Faced by RRBs)**

சமீபகாலம் வரை, வட்டார கிராம வங்கிகளில் சந்திக்கப்படுகின்ற பிரச்சனைகளாக நாம் பின்வருவனற்றைக் கூறலாம்.

1. 1997 -98 ஆம் ஆண்டில் 196 வட்டார கிராம வங்கிகளுள் 70 வட்டார கிராம வங்கிகள் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டில் இவை அடைந்த நட்டம் ரூ.230. 76 கோடிகளாகும். 31.3.1998 அன்று வரையிலான அனைத்து வட்டார கிராம வங்கிகளின் சிறுகச் சிறுகச் சேர்ந்த நட்டங்கள் ரூ.3,116 கோடிகளாகும். இதற்குக் காரணம் பேரளவு மேற் செலவுகள், வட்டி வீதங்களில் குறைப்பு, குறைந்த அளவு இலாப விடுமிகை, அதிகரிக்கப்பட்ட அலுவலர் சம்பளங்கள் மற்றும் படிகள் போன்றவையாகும்.

2. ஏனைய வங்கி வகைகளோடு ஒப்புடும் பொழுது இவற்றின் வளர்ச்சி எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. இதற்கு இவற்றின் இயக்கங்களின் மீது விதிக்கப்பட்டுள்ள வரையறைகளே காரணமாகும்.

3. இவை தம்மிடம் உபரியாக உள்ள பணத்தை தடைகள் ஏதுமின்றி விருப்பம்போல முதலீடு செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. இவை, நலிவுற்ற பிரிவினருக்கும், விவசாயிகளுக்கும் கடன் அளிக்க மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன.

4. இவை மத்திய அரசுடன் கூட நபார்டு, தன்னைத் தொடங்கிய நாட்டு உடைமையாக்கப்பட்ட வங்கி, இந்திய ரிசர்வ் வங்கி போன்ற பல்வேறு அமைப்புகளின் நேரடியான மற்றும் மறைமுகமான கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன. ஆகவே, மிக முக்கியமான விஷயங்களில் முடிவெடுப்பது கூட தாமதமாகின்றது. இது இவற்றின் வளர்ச்சியில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. ஆயினும், 1997 ஆம் ஆண்டு கடைசியில் இவற்றை இயக்குவதற்கான பொறுப்பு இவற்றைத் தொடங்கிய வங்கியிடமே அளிக்கப்பட்டுள்ளது.

5. இவற்றைத் தொடங்கிய வங்கிகளும் இதற்கும் இடையே ஒருங்கிணைப் பின்மையும் இதன் வளர்ச்சிக்கு தடைக்கல்லாக விளங்குகிறது.

6. இவை பணக்காரர்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஏழைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயலுகின்றன. ஆகவே இவைகளால், வாய்ப்பு வளம் மிக்க துறையில் இருந்து வைப்புகளை ஈர்க்க முடிவதில்லை.

7. இவை அளித்துள்ள கடனின் மீட்பு எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. இவற்றின் கடன் மீட்பு வீதம் 55% ஆகவே உள்ளது.

**வட்டார வங்கிகளின் எதிர்காலம் (Future of the RRBs)**

கிராமப்புறக் கடன் வழங்குவதில், வட்டார வங்கிகள் பெரும் பணியாற்றும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது. நாளடைவில் கிராமப்புற லேவாதேவிக் காரர்களின் பிடியிலிருந்து விவசாயிகளை முற்றிலுமாக விடுவித்து விடுலாம் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. ஹரிஜனங்களுக்கும், மலைசாதியினருக்கும், இவ்வங்கிகள் ஒரு வரப்பிரசாதம் எனலாம். சமுதாளத்தின் நலிவுற்ற பிரிவினரும், உடல் ஊனமுற்றோரும் இவ்வங்கியினால் பயன் அடைந்துள்ளனர்.

இவ்வங்கிகள் ரிசர்வ் வங்கியின் அறிவுரைகளையும் கட்டளைகளையும் அப்படியே பின்பற்றி நடந்து வருகின்றன.

இருப்பினும் நடைமுறையில் பல சிக்கல்கள் உள்ளன. நமது மாநிலத்தில் பாண்டியன் கிராம வங்கி ஒன்று மட்டுமே தொடங்கப்பட்டது. மற்ற மாநிலங்களில் இன்றளவும் கிராம வங்கிகள் தொடங்கப்படவில்லை. வங்கி அலுவலர்களின்

ஊதியமும் ஒரு பிரச்சனைக்குரிய அம்சமாக விளங்குகின்றது. கூட்டுறவுச் சங்கங்களில் அங்கம் வகிக்கும் உள்ளூர் அரசியல்வாதிகள் இவ்வங்கிகளின் வளர்சியை விரும்பவில்லை. மேலும், அவர்கள் இவற்றைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போட்டியாகவே கருதிச் செயல்பட்டு வருகின்றனர்.

**வணிக வங்கிகள்**

## COMMERICAL BANKS

### முன்னுரை (Introduction)

நாட்டினுடைய பெரும்பகுதியான கடனையும் வங்கியியல் நிறுவனங்களையும், வணிக வங்கிகளே கொண்டுள்ளன. எளிய முறையில் கூறின. வணிகர் பொருட்களைக் கையாளுவதைப் போல வங்கியர் பணத்தைக் கையாளுகின்றனர். இநதியாவில் வணிக வங்கிகள் கூட்டுப் பங்குக் கம்பெனிகள் அமைப்பில் அமைக்கப்பட்டு வங்கிக்கம்பெனிகள் என அழைக்கப்படுகின்றன.

வணிக வங்கிகளின் வகைப்பாடு (Claaification of Commercial Banks)

வணிக வங்கிகளை பட்டியலிடப்பட்ட வங்கிகள் மற்றும் பட்டியலிடப்படாத வங்கிகள் என இரண்டு வகைகளாகப் பாகுபடுத்தலாம். பட்டியலிடப்பட்ட வங்கிகளில், நாட்டுமையாக்கப்பட்ட வங்கிகள், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் துணை வங்கிகள், தனியாா் துறை வங்கிகள் மற்றும் அயல்நாட்டு வங்கிகள் போன்றன அடங்கும். ரிசா்வ் வங்கிச் சட்டத்தின் 2- வது பட்டயலில் சோ்க்கப்படாத வங்கிகள் பட்டயலிடப்படாத வங்கிகளாகும். இந்த இரண்டு வகைப்பாடுகளுள் முப்பியமானவற்றைப் பற்றி மட்டும் சுருக்கமாக கீழ்க்கண்டவாறு காணலாம்.

1. **பட்டியலிடப்பட்ட வங்கிகள் (Scheduled Banks )** :

இந்திய ரிசா்வ் வங்கிச் சட்டத்தின் 2 –வது **“ பட்டியலிடப்பட்ட வங்கிகள்”** என்று குறிப்பிடப்பட்ட வங்கிகளின் ஒரு பட்டியல் உள்ளது. ஒரு வங்கி பட்டியலிடப்பட்ட வங்கி என குறிப்பிடப்பட வேண்டுமெனில், அதனிடம் சட்டத்தால் குறிப்பிடப்பட்ட செலுத்தப்பட்ட மூலதனமும் காப்புகளும் இருத்தல் வேண்டும். ரிசா்வ் வங்கிச் சட்டம், 1934 – ன் பிரிவு 42 (6) – ன்படி குறிப்பிடப்பட்டுள்ள அத்தொகை ரூ.5 இலட்சங்களாகும். ஆயினும், தற்பொழுது ஒரு வணிக வங்கியைத் தொடங்க வேண்டுமெனில், குறைந்தபட்ச மூலதனமாக ரூ.100 கோடிகளை ரிசா்வ் வங்கி நிா்ணயித்துள்ளது. மேலும், அதன் வணிகம், அதனுடைய வைப்புதாரரின் நலன்களுக்கு பாதகம் விளைவிக்காத வண்ணம் இருக்கும் என ரிசா்வ் வங்கி கருதும் வகையில் அமைக்கப்பட வேண்டும். பட்டியலிடப்பட்ட வங்கிகள், அவற்றின் தேவை மற்றும் காலப் பொறுப்புகளின் அடிப்படையில் குறிப்பிட்ட வீதத்தில் ரொக்கக் காப்பு வீதம் என்ற வடிவில் ரிசா்வ் வங்கியில் ஒரு வைப்பை நிா்வகித்து வரவேண்டும்.

பட்டியலிடப்பட்ட வங்கிகள் பல்வேறு முன்னுரிமைகளையும் கொண்டு உள்ளன. பட்டியலிடப்பட்ட வங்கிகளில் தொடங்கப்பட்ட ஒரு கணக்கிற்கு, பட்டியலிடப்படாத வங்கி ஒன்றில் தொடங்கப்பட்ட கணக்கு ஒன்றிற்கு உள்ளதை விட பேரளவு பாதுகாப்பும் அந்தஸ்தும் மதிப்பும் இருக்கும். இவற்றினால் நாணய கருவூல வசதிகளையும் பெற முடியும். அவசரக் காலங்களில், இது இதனுடைய தற்காலிக நிதித் தேவைகளை பூா்த்தி செய்து கொள்ள ரிசா்வ் வங்கியிடம் இருந்து நிதியைப் பெறமுடியும். வங்கியரின் ‘’தீா்வக நடைமுறை’’ – ன் உதவியால் பட்டியலிடப்பட்ட வங்கிகளுக்கு இடையிலான கருத்துக்களை தீா்த்துக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. பட்டியலிடப்பட்ட வங்கிகள் இந்திய ரிசா்வ் வங்கியிடம் இருந்து பெறப்பட்ட கட்டளைகளை நிறைவேற்றிட வேண்டிய கடமையும் இவற்றிற்கு உண்டு. இவற்றுள் சில அறிக்கைகள் வாரம் ஒரு முறை அதாவது வெள்ளிக்கிழமை தோறும் சமா்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. ஒட்டுமொத்த வங்கித் தொழிலின் பொது நலத்தை பாதுகாக்கும் நோக்கோடு, பட்டியலிடப்பட்ட வங்கிகளின் அலுவல்கள் நெருக்கமாகவும் பேரளவிலும் இந்திய ரிசா்வ் வங்கியால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

2. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் (Nationalised Banks) : இவற்றுள் 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் நாள் நாட்டுடைமையாக்கப்பட்ட 14 வங்கிகளும் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள் நாட்டு உடைமையாக்கப்பட்ட 6 வங்கிகளும் அடங்கும். இவைகளும் பட்டியலில் இடப்பட்ட வங்கிகளே ஆகும். நாட்டுமையையாக்கப்பட்ட பிறகு இவ்வங்கிகள் சமூகப் பொறுப்புகளையும் ஏற்று பல்வேறு வகையான பணிகளை புரிந்து வருகின்றன. இவ்வங்கிகளின் மூலம் அரசு பல்வேறு நலத்திட்டங்களையும் நிதிசாா்ந்த கொள்கைகளையும் செயல்படுத்த முயலுகின்றது. இவ்வங்கிகள் இந்திய வங்கியியல் முறையின் மையப் பகுதியை வகிக்கின்றன. இவை பொதுத் துறை வங்கிகள் எனவும் அழைக்கப்படுகின்றன. பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் துணை வங்கிகளும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆற்றும் பணிகளை ஒத்த பணிகளைச் செய்யும் வணிக வங்கிகளே ஆகும்.

3. பட்டியலிடப்படாத வங்கிகள் (Non-scheduled Banks) : இந்திய ரிசா்வ் வங்கிச் சட்டத்தின் 2 வது பட்டியலில் சோ்க்கப்படாத வணிக வங்கிகள் பட்டியலிடப்படாத வஙகிகளாகும். இவை இந்திய ரிசா்வ் வங்கியிடம் இஐந்து மறு நிதி மற்றும் உண்டியல் மறு கழிவு போன்ற வசதிகளைப் பெற முடியாது. இவைகளுக்கு பட்டியலிடப்பட்ட வங்கிகளுக்கு உள்ளது போல எந்த அந்தஸ்தும் கிடையாது. இவை பணம் கடனளித்தல், உண்டியலைக் கழிவு செய்தல் மற்றும் வசூலித்தல் மற்றும் பல்வேறு முகவாண்மைச் சேவைகள் போன்றவற்றில் பெரிதும் ஈடுபடுகின்றன. இவை கடன்களை அளிக்க பேரளவு பிணையங்களைத் தரச் சொல்லி கட்டாயப்படுத்துகின்றன. 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அன்றுள்ள புள்ளி விபரப்படி, நம் நாட்டில் சிக்கிம் வங்கி லிமிடெட் என்ற ஒரே ஒரு பட்டியலிடப்படாத வங்கியே இயங்கி வருகிறது. தற்பொழுது, இந்திய ரிசா்வ் வங்கியே பட்டியலிடப்படாத வங்கிளைத் தொடங்க உற்சாகமூட்டவில்லை. ஒரே பட்டியலிடப்படாத வங்கியான சிக்கிம் வங்கி லிமிடெட்ஜயும் யூனியன் பாங்க் ஆ.்.ப் இந்தியாவுடன் இணைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**வணிக வங்கிகளின் பணிகள்**

## FUNCTIONS OF COMMERICAL BANKS

வங்கியா் ஆற்றும் பணிகள் நாள்தோறும் பெருகிக் கொண்டே இருக்கின்றன. இவைகள் அனைத்தையும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம் . அவையாவன.

I. முதன்மைப் பணிகள் (Primary Functions), மற்றும்

II. துணைப் பணிகள் (Subsidiary Functions).

ஒரு வங்கி மேற்கொள்ளும் இரண்டு தலையாய பணிகளுள் ஒன்று வைப்புகளைப் பெறுதல், மற்றொன்று கடனளித்தல் ஆகும். ஆகவே, ஒரு வங்கி ஒரே சமயத்தில் கடனளித்தோராகவும் இருத்தல் இயலும். இவற்றைப் பற்றி இப்பொழுது காணலாம்.

### 1. பொதுமக்களிடம் இருந்து வைப்புகளைப் பெறுதல் (Receiving Deposits from the Public)

பொதுமக்களிடம் இருந்து வைப்புகளைப் பெறுதல் என்பது வணிக வங்கிகள் ஆற்றும் முக்கியமான பணியாகும். பண இருப்பு அதிகமாக உள்ளவா்கள் மற்றும் தம்முடைய பணத்தை நன்முறையில் பாதுகாத்து வைக்க விரும்புகிறவா்கள் அப்பணத்தை இவ்விதமான வைப்புகளை வங்கியில் செலுத்தி வைக்கலாம். அவற்றை வாடிக்கையாளா்தாம் விரும்பும் நேரத்தில் காசோலை விடுத்துப் பெற்றுக் கொள்ளலாம். மேலும், தொகையை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பணவிடை மூலம் மாற்றவும் வங்கிகள் உதவி செய்கின்றன. வைப்புகளை நாம் 4 வகையாகப் பிரிக்கலாம். அவையாவன :

## 1. நடைமுறை வைப்புகள் (Current Deposits)

நடைமுறை வைப்பு என்பது, கேட்பு வைப்பு என்றும் அழைக்கப்படும். இவ்வைப்புக் கணக்குகள், தனிநபா் அல்லது நிறுவனங்கள் பெயரில், போதிய அறிமுகத்துடனும், கடன் தகுதி நிலை (Credit Worthiness) பற்றிய விசாரணைகளுக்குப் பிறகும் தொடங்கப்படும். சாதாரணமாக, ரூ.5,000 தொடங்க வைப்புடன் இக்கணக்குகள் தொடங்கப்படும். இவ்வகை வைப்புக் கணக்குகளில், எவ்வளவு தொகையும் (Any amount ) செலுத்திடலாம். காசோலைகளை வரைந்து பணத்தைத் திரும்பப் பெறலாம். இக்கணக்கிணைப் பொறுத்தமட்டில் பணத்தைத் திரும்பப் பெறுவதில் தொகை அல்லது எண்ணிக்கைக் கட்டுப்பாடுக் கிடையாது. இருப்பினும் வாடிக்கையாளா் தனது கணக்கில் செலுத்தியுள்ள வரவிருப்பிற்கு அதிகமாகத் திரும்பப் பெற இயலாது. இருப்பினும் வங்கியாருக்கு வாடிக்கையாளருக்கும் இடையே அதிகப்பற்று (Overdraft) குறித்த ஒப்பந்தமிருப்பின், அந்த ஒப்பந்த அளவிற்கு பணத்தைத் திரும்பப் பெறுதல் (Withdrawal) அனுமதிக்கப்படும். அக்கணக்கின் பெயரில், சிறிய அளவிலான கட்டணத்தை வங்கிகள் வசூலித்தலும் உண்டு. வங்கிகள், இக்கணக்கிலிருந்து வைப்புத் தொகையனைத்தையும், அனைத்துவைப்பாளா்களும் (Depositors) உடனடியாக ஒரே காலத்தில் திரும்பப் பெறமாட்டார்கள் உன்ற காரணத்தால் பெருமளவிலான தொகையினை ஆதாயமான நோக்கங்களுக்குப் பயன்படுத்து கின்றன. இந்திய ரிசா்வ் வங்கியும் இவ்வகைக் கணக்குகளுக்கு வட்டியளிப்பதைத் தடை செய்துள்ளது .

**நடைமுறைக் கணக்குகளுக்குள்ள சிறப்புச் சலுகைகளாவன :**

1. மூன்றாமவா் (Third Party) காசோலைகள் மற்றும் புறக்குறிப்பிடப்பட்ட (Third Party) காசோலைகளை, வசூலித்து கணக்கில் வரவு வைப்பதற்காகப் பெற்றுக் கொள்தல்.
2. அதிகப்பற்று வசதியளித்தல் ( பிற வைப்புகளின் பேரில் அல்லது பிறவகைக் கணக்குகளில் அதிகப்பற்று அனுமதிகப்படுவதில்லை.)
3. முன் பணங்களும் கடன்களும், வாடிக்கையாளா்க்கு ரொக்கமாகக் கொடுக்கப்பட்டாது, அவா்களது நடைமுறைக் கணக்கில் வரவு வைக்கப் பெறுதல்.

**2. சேமிப்பு வைப்புகள் (Savings Deposits) :** சேமிப்பு வைப்புக் கணக்கு குறைந்தபட்ச வைப்பாக ரூ. 500 உடன் துவக்கப்படலாம். சேமிப்புக் கணக்கைப் பொறுத்தமட்டில் பணம் செலுத்துதல், திரும்பப் பெறுதல் ஆகியவற்றின் தொகை மற்றும் எண்ணிக்கையில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் (ஒரு வாரம் அல்லது ஆறு மாதங்கள்) ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை திரும்பப் பெறல்கள் (Withdrawals) அனுமதிக்கப்படும் (வாரத்திற்கு இரண்டு, ஆறு மாதத்திற்குள் ஐம்பது) இவ்வகைக் கணக்குகளிலிருந்து திரும்பப் பெறுவதற்கு, திரும்பப் பெறும் சீட்டுகளை (Withdeawal Slip) பயன்படுத்திட வேண்டும். இருப்பினும் ஒரு குறிப்பிட்ட அளவு, குறைந்த அளவு இருப்பினை (Minimum Balance) வைத்திருக்க வாடிக்கையாளா் ஒப்புக் கொண்டால் காசோலைகளைப் பயன்படுத்தியும், பணத்தைத் திரும்பப் பெறலாம். தற்பொழுது, இத்தொகை ரூ. 1,000 ஆக உள்ளது. இக்கட்டுபாடுகளின் காரணமாக இக்கணக்கில் உள்ள வைப்புகளுக்கு அதிக வட்டியினை வங்கிகள் அளிக்கின்றன. தற்போது வங்கி சேமிப்பு கணக்கின் பேரில் $5\frac{1}{2}$ % வட்டி அளிக்கப்படுகிறது. இவ்வகை சேமிப்பு வைப்புகள் குறைந்த அளவு வருமானம் உடையவா்களிடையே சேமிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்திடும் நோக்குடன் இயக்கப்படுகின்றன (Operated). சிறு துளி பெருவெள்ளமெனும் வகையில் பல்வேறு நபா்களிடமிருந்து சிறு அளவில் சேமிப்பினைத் திரட்டி, தொழில் நிறுவனங்களுக்கும் பிற காரணங்களுக்கும் கடன் அளித்திட இவை மிகவும் பயனுள்ளனவாக உள்ளன. இவ்வகை வைப்புகளால்

மக்களிடையே சேமிக்கும் பழக்கமும், வங்கிப் பணிகளைப் பயன்படுத்திடும் வங்கிமுறைப் பழக்கமும் (Banking Habit) ஏற்படுகின்றன.

**3. தொடர் வைப்புக் கணக்கு (Recurring Deposit Account) :** சேமிப்பு வைப்பலிருந்தும், நடைமுறை வைப்பில் இருந்தும் மாறுபட்டதான, இவை இரண்டையும் விட அதிகம் வட்டி ஈட்டுவதும் வைப்பாளர்களிடையே தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒரு குறிப்பிட்ட தொகையைச் சேமித்திடும் வழக்கத்தினை ஏற்படுத்துவதுமான, தொடர் வைப்புக் கணக்குகள் வங்கிகளால் ஒன்றிலிருந்து 10 ஆண்டு கால அளவிற்கு சேமிப்பாளர்களின் வேண்டுகோளின் பேரில் துவக்கப்படுகின்றன. தொடர் வைப்புகளுக்கு ரிசர்வ் வங்கியின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு பிற வைப்புகளுக்கு அளிக்கப் பெறும் வட்டி விகிதத்தினை ஒத்து செல்வதான வட்டி அளிக்கப்படும். பொதுவாக, வைப்புக் கணக்குகளை ஒரு வங்கியின் ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு மாற்றிடலாம். அவ்வாறான மாற்றங்களுக்கு வங்கிகள் கட்டணம் எதுவும் வசூலிப்பதில்லை. இவ்வகை வைப்புகள் இளவர் (Minor) பெயர் உட்பட எவர் பெயரிலும், தனியாகவோ அல்லது கூட்டாகவோ தொடங்கப்படலாம்.

**4. நிலை வைப்புகள் (Fixed Deposits) :** வைப்புக் கணக்கு தொடங்கு முன்னரே ஒத்துக் கொள்ளப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலம் முடிந்த பின்னரே, இக்கணக்குகளில் பேரில் பெறப்பட்ட வைப்புகள் திரும்ப அளிக்கப் பெறும். எனவே, மற்ற வைப்புகளைப் போலன்றி இவ்வைப்புகளால் தோன்றிடும் பொறுப்புகள் அக்காலக்கெடு முடிந்த பின்னரே திருப்பியளிக்கப்பட வேண்டும் என்பதால், வங்கியர் இவ்வகை வைப்புகளின் பேரில் பெற்ற தொகைகளை குறிப்பிட்ட காலத்திற்கு ஆதாயமளிக்கக்கூடிய வகையில் இலாபகரமான முதலீடுகளில் முதலீடு செய்திடலாம். பிற எல்லா வகை வைப்புகளையும் விட அதிகமாக இருக்கும். வங்கி முறை ஒழுக்காற்றுச் சட்டத்தின் 21 மற்றும் 35 A பிரிவின்படி இந்திய ரிசர்வ் வங்கி இவ்வகை வைப்புகளின் மீது அளிக்கப்படும் வட்டி விகிதங்களை ஒழுங்குபடுத்திடும் அதிகாரம் பெற்றுள்ளது. நிலை வைப்புகளின் கால அளவினையொட்டி கால வைப்புகள் ஒன்பது வகைகளாகக் கொள்ளப்பட்டு காலவரைக்கேற்ற உயர்ந்த அளவு வட்டியும் அளிக்கப்படுகிறது. கூட்டுறவு வங்கிகளும் ரூ.25 கோடிக்கும் குறைவாக மொத்த கேட்பு மற்றும் காலப் பொறுப்புகளுடைய வணிக வங்கிகளும் ரிசர்வ் வங்கி நிலை வைப்புகளுக்கு குறித்திடும் வட்டியினை விட ¼ - லிருந்து 1% வரை அதிக வட்டி அளிக்க அனுமதிக்கப்கடுகின்றன. அது போன்றே அறநிலையங்கள், மருத்துவமனைகள், நலக் கட்டளைகள், முன்னாள் படை வீரர்கள் போன்றோர்க்கு வணிக வங்கிகள் குறிப்பிட்டுள்ள வட்டி விகிதத்திற்கு மேல் ½ % அதிகமாக அளித்திடுதலும் அனுமதிக்கப்படுகின்றன. நிலை வைப்புகள் பொதுவாக முதிர்வடைந்த பின்தான் திருப்பி அளிக்கப்படும். எனவே, நிலை வைப்பு வைத்திருப்போர் அவ்வமைப்பின் பேரில் கடன் பெறுதல் அனுமதிக்கப்படுகிறது. அவ்வாறு அளிக்கப்படும் கடன்களின் மீதான வட்டியானது வைப்பு யார் பேரிலிருக்கிறதோ அவரே கடன் கேட்டால் அவ்வைப்பின் மீது அளிக்கும் வட்டியை விட 2% அதிகமாகவும், வேறு யாரேனும் கடன் கேட்டால் வைப்பின் மீதான வட்டியை கவனத்தில் கொள்ளாது 15% -லிருந்து 19.5% வரை வட்டி விதிக்கப்படும். பிற வைப்புகளுக்கு அளிக்கப்படுவதில்லை. ஆனால், நிலை வைப்பு ரசீது அளிக்கப்படும். நிலை வைப்பு ரசீதுகள், மாற்று முறையாவணமாகாது. எனவே, நிலை வைப்பு உரிமையாளரைத் தவிர பிறர் யாரும் அவ்வைப்புத் தொகையினைப் பெறுதல் இயலாது. இவ்வகை வைப்புகளைத் திரும்ப அளிக்கும் போது வங்கிகள் ''**பெறுவோர் கணக்கு**'' (Account Payee) கீறலிடப்பட்ட காசோலை அல்லது பணவிடை (Draft) அளித்திட வேண்டும் என சட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**2. கடன் வழங்குதல் (Lending of Funds)**

மக்களிடம் இருந்து வைப்புத் தொகையாகப் பெற்ற பணத்தை கடனாகவும் முன் பணமாகவும் அளித்தல் வணிக வங்கிகளின் இரண்டாவது முக்கியப் பணியாகும். வணிக வங்கிகள் வழங்கும் கடன்களுடன் மிக முக்கியமானவை -

**1. மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்தல் (Discounting of Bills) :** வாக்குறுதிப் பத்திரம் (Promissory Note) அல்லது மாற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொண்டு அவற்றின் முதிர்வுத் தேதி வரையான வட்டியினைப் பிடித்து முன்பணம் அளிக்கும் நடைமுறையே மாற்றுச் சீட்டுக் கழிவு செய்தல் எனப்படும். எந்த வட்டி விகிதத்தில் கழிவு அளிக்கப்படுகிறதோ, அது கழிவு விகிதம் (Discount Rate) அல்லது தள்ளுபடி விகிதம் எனப்படும். இக்கடனின் சிறப்பியல்பானது முன்னதாகவே வட்டியினை வரவு வைத்திடுதல் ஆகும்.

**2. முன் பணம் (Advance) :** ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட வட்டி விகிதத்தில் கடன் வழங்குதலே முன் பணம் என அழைக்கப்படுகிறது. இக்கடன் ஒப்பந்தத்திலேயே வட்டித் தொகை செலுத்தப்படும் கால இடைவெளியும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். கடனளிக்கப்பட்டு விட்டால், கடன் பெற்றோர் அதனைத் தவணையிலோ அல்லமு முழுமையாகவோ, வட்டியுடன் திருப்பியளித்திடல் வேண்டும்.

**3. அதிகப் பற்று (Overdraft) :** வங்கியில் நடைமுறைக் கணக்க வைத்திருப்போருக்கு முன் ஏற்பாட்டின்படி இக்கணக்கில் உள்ள இருப்பிற்கு அதிகமாக ஒரு குறிப்பிட்ட தொகை வரை, திரும்பப் பெற்றிட அளித்திடும் அனுமதியே அதிகப் பற்றாகும். கடன் பெறுவோர் குறிப்பிட்ப்பட்ட தொகையளவுக்குள் தனக்கு வேண்டிய அளவு தொகையை எடுத்தக் கொள்ளலாம். தொகையைத் திருப்பி அளித்துவிடின் அக்காலக் கெடுவிற்குள் மீண்டும் திரும்பப் பெற்றுக் கொள்ளும் வசதியுண்டு. இச்சிறப்பியல்பே அதிகப்பற்றைக் கடனிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதாய் அமைகிறது. எவ்வளவு தொகை, எவ்வளவு காலத்திற்கு கடன் பெறுவோரால் பயன்படுத்தப்படுகிறதோ அந்த அளவிற்கு மட்டும் வட்டி செலுத்தினால் போதுமானதாகும். வங்கிக்குப் போதுமான வட்டி கிடைத்திட வேண்டுமெனும் காரணத்தால் **"குறைந்த வட்டிப் பிரிவு"**(Minimum Interest Clause) என்ற கூற்றின் மூலம், அதிகப் பற்று பெறுவோர் செய்து கொண்ட ஏற்பாட்டின்படி ஒரு குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாகவே பயன்படுத்தினார் எனினும், குறைந்த அளவு வட்டி எனக் குறிப்பிட்ட தொகையினை அளித்திடல் வேண்டும். கடன் பெறுவோர், கணக்கு வைத்திருப்பவர்களாய் இருக்க வேண்டுவதில்லை. ஆனால் அதிகப்பற்று, நடைமுறைக் கணக்கு உடையோருக்கு மட்டுமே அளிக்கப்படும்.

**4. ரொக்கக் கடன் (Cash Credit) :** ரொக்கக் கடன் வசதியின் கீழ், வங்கியிடம் துணைப் பிணையங்களை பிணையங்களாகச் செலுத்தித் தேவையான கடனைப் பெறுகின்றனர். இதில், அதிகப்பற்று போன்றே அனுமதியளிக்கப்பட்ட அளவிற்குள் தேவையான அளவு எடுத்து பின் திரும்பச் செலுத்தி, பின்னும் வேண்டுமெனில் அக்கால கெடுவிற்குள் திரும்பப் பெற்றிடும் வசதியுள்ளது. ஆனால், ரொக்கக் கடன் பெற்றிட நடைமுறைக் கணக்கு வைத்திருக்கத் தேவை இல்லை. இக்கடனும், பயன்படுத்தப் பட்ட அளவிற்கே வட்டி செலுத்தப்பட வேண்டும் என்னும் வசதி கொண்டதென்பதால், கடன் பெறுவோர் பயன்படுத்தினாலும் இல்லையென்றாலும் ஒரு குறைந்த அளவு வட்டி செலுத்திட வேண்டுமென்பது ஒப்பந்தத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கும்.

**II. துணைப் பணிகள் (Subsidiary Functions)**

வங்கிகள் ஆற்றும் துணைப் பணிகளை நாம் இரண்டு வகைகளாகக் காணலாம். அவைகளாவன.

1. முகமைப் பணிகள் (Agency Services), மற்றும்
2. பொதுநலப் பணிகள் (General Utility Services).

**1. முகமைப் பணிகள் (Agency Services)**

**1. வசூலித்தலும் செலுத்துதலும் (Collection and Payments) :** சில வாடிக்கையாளர் தொடர்ச்சியாகக் குறிப்பிட்ட சில நாட்களில் மாதம் ஒரு முறை அல்லது மூன்று மாதத்துக்கு ஒரு முறை சில நிறுவனங்களுக்குத் தொகைகள் அல்லது சந்தாப்பணம் (Subscription) செலுத்த வேண்டியிருக்கும். ஆயுள்காப்பீட்டுக் கழகத்திற்கு (L.I.C) செலுத்த வேண்டிய பிரீமியம் மற்றும் மின்கட்டணம் (Electric Bill) போன்றவை தவனை கடக்காமல் குறித்த தேதியில் செலுத்தப்பட வேண்டியவைகளாகும். பல்வேறு அலுவல்களில் ஈடுப்பட்டுள்ள வாடிக்கையாளர்கள் இவற்றையெல்லாம் நினைவில் வைத்துக் கொண்டு குறிப்பிட்ட தேதிகளில் செலுத்துவது சிரமம். எனவே, தமது சார்பில் இவ்வேலையைக் கவனிக்க வங்கியர் வசம் இப்பணியை ஒப்படைக்கும் வழக்கம் இந்நாளில் பெருகி வருகின்றது. இது போல் வாடிக்கையாளரின் சார்பில் கம்பெனிப் பங்குகளின் பங்காதாயம், வாடகை முதலியவற்றை வசூலித்தலும் வங்கியரால் மேற்கொள்ளப்படுகிறது. இப்பணிகளை ஆற்றுவதற்காக ஒரு சிறிய தொகை ஊதியமாகவும் வங்கியருக்குக் கிடைக்கின்றது. ஆயினும், இச்சிறு ஊதியத்தை விட வங்கியர் பெறும் நன்மதிப்பு பல மடங்கு உயர்ந்தாலும், மேன்மையானதும் ஆகும்.

இப்பணிகளை ஆற்ற வங்கியரைப் பணிக்கின்ற பொழுது தெளிவான உத்தரவு ஒன்றை எழுத்து மூலம் (A Clear Mandate in Writing) தர வேண்டியது வாடிக்கையாளரின் கடமையாகும். மேலும், அவ்வாறு தரப்படும் உத்தரவு குழப்பத்துக்கு இடமளிப்பமாக இருந்தால் வங்கியர் தம் செயல்களுக்குப் பொறுப்பாளியாக மாட்டார்.

வங்கியர் வாடிக்கையாளருக்காகப் பணம் பெற்றாலும், அல்லது செலுத்தினாலும் அவ்விபரத்தை வாடிக்கையாளருக்கு அறிவிக்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்க வேண்டியது சட்டப்படி கட்டாயம் இல்லை. எனினும் நடைமுறையில் தெரிவிக்க வேண்டியது சட்டப்படி கட்டாயம் இல்லை. எனினும் நடைமுறையில் தெரிவிக்கும் வழக்கத்தை வங்கியர் பின்பற்றுகின்றனர். தெரிவிக்காமல் இருந்தால், சில சமயங்களில் வாடிக்கையாளர் அதனால் நட்டத்துக்கு ஆளாக வாய்ப்பு உள்ளதால் அவ்வித இழப்பைத் தவிர்க்க இந்நடைமுறையை வங்கியர் பின்பற்றுகின்றனர்.

**2. கம்பெனிப் பிணையங்களை வாங்குதலும் விற்றலும் (Purchase and Sale of Corporate Securities) :** வாடிக்கையாளருக்காகக் கம்பெனிகளின் பங்குகளை வாங்குதலும், அவர்களிடம் உள்ள கம்பெனிப் பங்குகளின் விற்பனைக்கு ஏற்பாடு செய்வதும் நவீன வங்கியர் மேற்கொள்ளும் மற்றொரு முகமைப் பணியாகும். இந்நிலையில் செயல்படும் போது வங்கியர் சிறப்பு முகவராக (Special Agent) கருதப்படுகின்றார்.

ஜெர்மனி, ஹாலந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் ஒவ்வொரு பெரிய வங்கியும் உள்ளூர்ப் பங்கு மாற்றகங்களில் (Stock Exchanges) உறுப்பினராக உள்ளன. அவற்றின் நடவடிக்கைகளில் இவ்வங்கிகளும் முக்கியமான பங்கு பெறுகின்றன. அந்நாடுகளில் வங்கியர் வாடிக்கையாளருக்காக நேரடியாகப் பிணையங்களை வாங்குவதும் விற்பதும் செய்கின்றனர். ஆனால் நம் நாட்டில் நிலைமை முற்றிலும் மாறுபட்டுள்ளது. வங்கிகள் நேரடியாகப் பங்கு மாற்றக நடவடிக்கைகளில் ஈடுபடுவது நம் நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது. வங்கியரும் தரகர்கள் (Stock Brokers) மூலமே பங்குகளை வாங்கவும் விற்கவும் இயலும்.

**3. பொறுப்பாண்மையராகச் செயல்படுதல் (Banker Acting as a Trustee) :** மற்ற அனைவரையும் விட வங்கியர் பொறுப்பாண்மையராகப் பணி ஆற்ற முற்றிலும் தகுதி பெற்றவர் ஆவார். **எம். எல். டேனன்** தனது நூலில் வங்கியர் இப்பொறுப்பினை ஏற்க முழுமையான தகுதி பெற்றுள்ளனர் என்பதற்காக நான்கு வலுவான காரணங்களைக் கூறுகின்றார். அவையாவன.

1. தனிநபர்களைப் போல் அல்லாமல் வங்கிகள் கூட்டு அமைப்பு (Body Corporate) ஆகையால் அவை நீடித்த வாழ்வு உடையன. எனவே, தொடர்ச்சியாக வங்கிகள் இப்பணியை ஆற்ற இயலும்.

2. வங்கிகள் விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகமல் சரியான வழியில் நேர்மையாகச் செயல்படுவன ஆகும். ஆனால், தனிநபர்கள் விருப்பு வெறுப்புக்கு ஆளாகும் வாய்ப்பு உண்டு.

3. வங்கியர் தமது நிதிவசதியின் காரணமாக வல்லுநர்களை (Experts) வேலைக்கு அமர்த்த வாய்ப்பு உண்டு. எனவே சிறப்பான தகுதி, அனுபவம் தேவைப்படும் பணிகளைத் தனிநபர்களைவிட வங்கியரே ஊற்பது சுலபம்.

4. பல்வேறு டிரஸ்டுகளை ஒரே சமயத்தில் நிர்வகிக்க வங்கியரால் மட்டுமே இயலும். இதனால் நடைமுறைச் செலவுகளில் சிக்கனம் செய்ய இயலும். மேலும், இப்பணியை ஏற்றத் திறம்படச் செயலாற்றுவதன் மூலம் வங்கியரின் மதிப்பு வாடிக்கையாளரிடையே உயரும். இந்திய டிரஸ்டுகள் சட்டத்தின் 50 ஆம் பிரிவு டிரஸ்டுகள் தாம் ஆற்றிய பணிக்காக ஊதியம் அல்லது கமிஷன் பெற உரிமை இல்லை என்று தெளிவாகக் கூறுகின்றது. எனினும், பொறுப்புரிமைப் பத்திரத்தில் (Trust Deed) வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருந்தால் டிரஸ்டிகள் கமிஷன் அல்லது ஊதியம் பெறத் தடை எதுவும் இல்லை. எனவே, வங்கியா் டிரஸ்டியாகச் செயல்பட ஒப்புக் கொள்ளும் முன்பு, பொறுப்பாண்மைப் பத்திரத்தில் ஊதியம் பற்றிக் குறிப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்து கொண்டு, ஊதியம் அளிப்பதற்கு வாய்ப்பு இருந்தால் மட்டுமே இப்பணியை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

4. நிறைவேற்றாளா் அல்லது நிர்வாகியாகச் செயல்படுதல் (Letter of Administration) நிறைவேற்றாளா், நிர்வாகி ஆகிய இருவரது பணியின் தன்மையும், அதிகாரங்களும் ஒன்றே ஆகும். ஆனால் இவா்கள் நியமனம் செய்யப் பெறும் முறையில் அடிப்படையில் வேறுபாடு உள்ளதால் வெவ்வேறு பெயா்களில் குறிப்பிடப்படுகின்றனா்.

வங்கியா் இப்பொறுப்பை நிறைவேற்ற நியமிக்கப்பட்டால், கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. உயில் (Will) அல்லது நிர்வாக உரிமைக் கடிதத்தில் (Letter of Administration) குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறைக் கட்டளைக்கு ஏற்பவே வங்கியா் நடந்து கொள்ள வேண்டும்.

2. இறந்து போனவருக்குக் கடன் கொடுத்தவா்கள் (Creditors) அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் தமக்கு வரவேண்டிய பாக்கியை நிரூபிக்கும்படி அறிவிப்பு தரவேண்டும். இந்த அறிவிப்பு அப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஒரு தினசரி செய்தித்தாளில் வெளியிடப்பட வேண்டும்.

3. தமது பாக்கியை நிரூபிக்கத் தவறிய எவருக்கும் இறந்து போனவா் செலுத்த வேண்டிய கடன் தொகைக்கு வங்கியா் பொறுப்பாளியா மாட்டாா்.

4. கடன் பாக்கதாரா்கள் அனைவரது கடன்களையும் அடைத்த பின்னா் உயிலில் கண்டுள்ளபடி சொத்துக்களை அடைய உரிமை உள்ளவருக்கு மீதித் தொகை ஏதேனும் இருந்தால் அதனை வழங்கிவிட வேண்டும்.

5. வாடிக்கையாளருக்காக வேறு வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களோடு தொடா்பு கொள்ளுதல் (Bank as Correspondents of other Banks and other Financial Institutions) : வங்கியா்களுக்கு உள்நாட்டில் மட்டுமல்லாது உலகெங்கும் உள்ள வங்கிகள் மற்றும் மற்ற நிதிநிறுவனங்களோடு அடிக்கடி தொடா்பு கொள்ள வாய்ப்புகள் உள்ளன. இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்தி அந்நிறுவனங்களின் மூலம் தமது வாடிக்கையாளருக்குப் பல்வேறு உதவிகளை ஆற்றவும் வங்கியரால் இயலும். குறிப்பாக வெளிநாடு செல்லும் வாடிக்கையாளருக்கு, வங்கியா் தொடா்பாளராகச்

செயல்பட்டு, உலகெங்கும், தமது வாடிக்கையாளர் போகும் இடமெல்லாம், தாம் தொடர்பு வைத்துள்ள நிறுவனங்கள் மூலம் வாடிக்கையாளர் தமக்கு முற்றிலும் புதிய சூழ்நிலையில் அறிமுகம் இல்லாதவர்கள் நடுவே அவதியுறாமல் காப்பாற்றப்படுகின்றார். எனவே, இப்பணி வங்கியர் ஆற்றும் முகமைப் பணிகள் யாவற்றிலும் சிறப்பான முதன்மை இடம் பெறும் ஒரு பணியாகும்.

இப்பணிகளைத் தவிர, வங்கிகள் வாடிக்கையாளருக்காக பாஸ்போர்ட், விசா முதலியவற்றைப் பெற்றுத் தருதல், இரயில், விமான டிக்கட்டுகளை வாங்கித் தருதல், தங்கும் விடுதிகள் அல்லது ஹோட்டல்களில் இடவசதிக்கு (Acommodation) ஏற்பாடு செய்தல் ஆகிய முகமைப் பணிகளையும் மேற்கொள்கின்றன. இனி, எதிர்காலத்தில் வேறு பல முகமைப் பணிகளையும் மேற் கொள்ளலாம்.

**2. பல்வேறு பொது நலப் பணிகள்**

**(Miscellaneous or General Utility Services)**

மேற்குறிப்பிட்ட பணிகளைத் தவிர, பல்வேறு பொதுநலப் பணிகளையும் தமது வாடிக்கையாளர் பயன் பெறுவதற்காக வங்கியர் ஆற்றுகின்றனர். இப்பணிகளை ஆற்றும்போது வங்கியர், முகவர் என்ற நிலையில் செயல்படுவதில்லை. ஆற்றும் பணியின் தன்மைக்கு ஏற்ப அவ்விருவரிடையே நிகழும் உறவும் மாறுபடும்.

தற்கால வங்கியர் ஆற்றும் பல்வேறு பொது நலப் பணிகள் பின்வருமாறு.

**1. பாதுகாப்பு வசதி (Safe Custody of Customer's Valuables) :** விலை உயர்ந்த நகை முதலிய ஆபரணங்கள் முதலியவற்றை வாடிக்கையாளருக்காகப் பாதுகாப்பாக வைத்துக் காப்பாற்றும் பணி, நவீன வங்கியரின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும்.

இப்பாதுகாப்பு வசதியை இரு வழிகளில் வங்கியர் செய்து தருகின்றனர். வாடிக்கையாளர் தம்மிடம் உள்ள பொருள்களை ஒரு பெட்டி அல்லது மேலுறையில் (Cover) வைத்து அதன் மீது அரக்கு முத்திரை பதித்து வங்கியரிடம் தந்து வைப்பது ஒரு வகையாகும். வாடிக்கையாளருக்கு வங்கியர் ஓர் இரசீது வழங்குவார். இந்த இரசீது வங்கியர் பொருள்களைப் பெற்றுக் கொண்டதற்கு ஆதாரம் ஆகும். இதற்குப் பாதுகாப்பு வைப்பு இரசீது (Safe Deposit Receipt) என்று பெயர். இப்பாதுகாப்பு வைப்பைப் பொறுத்த வரையில் வங்கியர் உடைமை ஒப்படைக்கப் பெற்றவர் (Bailee) என்ற நிலையிலும் வாடிக்கையாளர் உடைமை ஒப்படைத்தவர் (Bailor) என்ற நிலையிலும் உள்ளனர். பாதுகாப்புப் பெட்டக வசதி (Safe Deposit Vault) செய்து தருவது இரண்டாவது வகையாகும். இதில் ஒவ்வொரு பாதுகாப்பு பெட்டகத்திற்கும் ஒரு எண் தரப்பட்டு இருக்கும். ஒவ்வொரு பெட்டகத்திற்கும் இரண்டு சாவிகள் உண்டு. இவ்விரண்டு சாவிகளையும் உபயோகப்படுத்தினால் மட்டுமே இதனைத் திறக்க முடியும். இவ்விரண்டில் ஒன்றை வங்கியரும் மற்றதை வாடிக்கையாளரும் வைத்துக் கொள்ள வேண்டும். இப்பாதுகாப்புப் பெட்டகத்தைப் பயன்படுத்த ஒரு சிறு தொகையை வாடகையாகத் தர வேண்டும். இதில் வாடிக்கையாளர் வாடகைதாரராகவும் (Lessee), வங்கியர் வாடகைக்கு விட்டவராகவும் (Lessor) உள்ளனர். பெட்டகத்தில் என்ன உள்ளது என்பதை வங்கியரிடம் பொதுவாக அறிவிப்பது இல்லை.

பெரும்பாலும் வங்கி அலுவல் நேரங்களிலேயே இப்பாதுகாப்புப் பெட்டகங்களைத் திறந்து பொருள்களை வைக்கவும், எடுத்துக் கொள்ளவும் வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்படுவர்.

**2. அந்நியச் செலாவணிப் பணிகள் (Foreign Exchange Service) :** அந்நியச் செலவாணி நிர்வாகச் சட்டப்படி (Foreign Exchange Management Act), நம் நாட்டில் உள்ள பெரும்பாலான வங்கிகள் அந்நியச் செலவாணி நடவடிக்கைகளில் பங்கேற்க அங்கீகாரம் பெற்றுள்ளன. வெளிநாடுகளில் அதிக அளவில் கிளை அலுவலகங்கள் இல்லாத வங்கிகள் கூட, அந்நிய வங்கிகள்

தொடர்போடு இப்பணியை மேற்கொண்டுள்ளன. மேலும், வெளிநாட்டு வர்க்கத்தில் (ஏற்றுமதி, இறக்குமதி) ஈடுபட்டுள்ளவர்கள், வங்கிகள் மூலமாகவே தமது எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி உற்சாகப்படுத்தப்படுகின்றனர். இவை வெளி நாட்டு உண்டியல்களைக் கழிவு செய்கின்றன. இது தவிர வெளிநாட்டு வாணிபத்துக்குத் தேவையான கீழ்க்கண்ட முக்கியப் பணிகளையும் வங்கிகள் ஆற்றுகின்றன.

1. ஏற்றுமதி நிதியுதவி அளித்தல் (Financing of Export).

2. கடன் பொறுப்புறுதிக் கடிதம் வழங்குதல் (Issuing Letter of Credit).

3. பயணிகள் காசோலை, சுழல் காசோலை, பணவிடை முதலியன வழங்குதல் (Issuing of Travellers' Cheques and Circular Cheques, Drafts etc.) : வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் நீண்ட பயணங்களை மேற்கொள்ளும் போது பெருந்தொகையை ரொக்கமாக எடுத்துச் செல்வது பயணிகளுக்குப் பாதுகாப்பானது அல்ல. திருடர்களால் பணத்துக்கும் உயிருக்கும் அபாயம் ஏற்படும் சூழ்நிலைகளும் உருவாகலாம். மேலும், பயணம் செய்பவரும் எப்போதும் விழிப்போடு இருக்க வேண்டியது இருக்கும். எனவே, இத்துயர்களைக் களைய பயணக் காசோலைகள், (Travellers' Cheques), சுழல் காசோலைகள் (Circular Cheques) முதலியனவற்றைப் பயணம் செய்பவரும் எப்போதும் விழிப்போடு இருக்க வேண்டியும் இருக்கும். எனவே, இத்துயர்களைக் களைய பயணக் காசோலைகள், (Travellers' Cheques), சுழல் காசோலைகள் (Circular Cheques) முதலியனவற்றைப் பயணம் றேகொள்ளும் வாடிக்கையாளரின் நன்மையைக் கருதி நவீன வங்கியர்கள் வழங்குகின்றனர்.

பயணக் காசோலை என்பது வங்கியரால் குறிப்பிட்ட முழுத் தொகைகளுக்கு வழங்கப்படும் காசோலையாகும். ரூ.100, ரூ.200, ரூ.500 என்று பெரும்பாலும் ரூ.100 -க்கும் அதன் மடங்குகளுக்கும் இக்காசோலை வழங்கப்படும். காசோலையைப் பெறும்போது அதில் வாடிக்கையாளர் வங்கியின் அதிகாரி அல்லது கிளை மேலாளர் முன்னிலையில் கையொப்பம் இட வேண்டும். வாடிக்கையாளர் தாம் விரும்பும் ஊரில் அவ்வங்கியரின் கிளையில் காசோலையில் கையொப்பமிட்டு அதனைச் சமர்ப்பித்தால் அங்கே காசோலையைச் சமர்ப்பித்தவருக்குப் பயணம் வழங்கப்படும். காசோலை வழங்கப்பட்ட கிளையின் மேலாளர் முன்னிலையில் போடப்பட்ட கையொப்பமும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். நமது நாட்டில் பயணிகள் காசோலைகள் வழங்கும் பணியில் பாரத ஸ்டேட் வங்கி முதன்மையிடம் வகிக்கின்றது. இக்காசோலைகளைப் பயணிகள் காசோலைகள் வழங்கும் பணியில் தாம் தங்கியுள்ள விடுதிகளிலேயே மாற்றிக் கொள்ளவும் இக்காலத்தில் வசதிகள் ஏற்பட்டு உள்ளன. பெரிய பெரிய ஹோட்டல்கள், நட்சத்திர விடுதிகள் (Star Holtels) முதலியவற்றில் தங்குபவர்கள் ஹோட்டலிலேயே இக்காசோலையை சமர்ப்பித்துப் பணம் பெற்றுக் கொள்ள இயலும். பயண முகவர்களும் (Travelling Agents) இக்காசோலையை ஏற்றுக் கொள்கின்றனர்.

சுழல் காசோலைகள் (Circular Cheques) வெளிநாட்டுப் பயணிகளுக்கும் பெரிதும் உதவிகரமானவை. இதுபோல் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பணத்தைச் சுலபமாக அனுப்புவதற்கு வங்கியர் பணவிடைகளை (Demand Drafts) வழங்குகின்றனர். இதனால் வாடிக்கையாளர்கள் மட்டுமல்லாமல் பொதுமக்களும் பயன் அடைகின்றனர். இப்பணிகளைச் செய்ய வங்கியர் பெறும் ஊதியம் மிகக் குறைவேயாயினும் வங்கியர் பெறும் நற்பெயரும் வாடிக்கையாளர் பெறும் நன்மைகளும் மிகமிக அதிகம் எனலாம்.

**4. வாடிக்கையாளர் பற்றிய தகவல் தருதல் (Acting as a Referee of the Customer) :** வாணிபத்தில் ஈடுப்பட்டுள்ள வாடிக்கையாளர்கள் புதிய புதிய வணிகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் பொழுது, தம்முடைய நிதி

நிலையைப்பற்றி புதியவர்களுக்குத் தகவல் தரும்படி தமது வங்கயரைக் கேட்கலாம். அச்சூழ்நிலைகளில் வங்கியர், தமது வாடிக்கையாளரோடு புதிதாகத்தொடர்பு கொள்வபர், தம்மிடம் கேட்டால், தமது வாடிக்கையாளரின் நிதிநிலை பற்றிய விபரங்களைத் தெரிவிக்கலாம். இவ்வாறு தெரிவிப்பது வாடிக்கையாளரின் முன் அனுமதியுடனும், அவருடைய வேண்டுகோளின்படியும் செய்யப்படுவதாகையால், இரகசியத்தை வங்கியர் வெளியிட்டதாக (Disclosure of Secret ) கருதப்படமாட்டாது .

**5. விற்பனை உத்தரவாதம் அளித்தல் (Underwriting of Shares, Debentures and Bonds) :** அரசு வெளியிடும் கடன் பத்திரங்கள், காப்பீட்டுக் கம்பெனிகள் வெளியிடும் பங்குகள் (Shares), கடன் பத்திரங்கள் (Debentures) ஆகியவற்றின் விற்பனைக்கு உத்தரவாதம் அளிக்கும் பணியையும் இக்கால வங்கியர் மேற்கொள்கின்றனர். நகராட்சிகள் (Municipal Authorities), அரசு நிறுவனங்கள் (Public Bodies), அரசுக் கம்பெனிகள் (Government Companies), தன்னாட்சிக் கழகங்கள் (Autonomous Corporations) ஆகியவை வெளியிடும் கடன் பத்திரங்களின் விற்பனைக்கு உத்தரவாம் அளிக்கும் பணியை வங்கிகள் மேற்கொள்கின்றன. இவ்வழக்கம் இன்று உலகெங்கும் பரவலாகக் காணப்படுகின்றது.

**6. பணத்தை கைமாற்றுதல் (Transfer of Money) :** பணத்தை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கு வங்கிகள் உதவி செய்கின்றன. இதற்கு காசோலை மற்றும் வங்கிப் பணவிடை போன்றவை மிகவும் உபயோகமாக உள்ளன.

வாடிக்கையாளர், பணம் பெறுபவர் (Payee) சார்பாக வங்கியிலிருந்து ஒரு வங்கிப் பணவிடையைப் பெறலாம். வங்கியிலிருந்து பணவிடையைப் பெறும் நடைமுறை மிகவும் எளிமையான ஒன்றாகும். அதற்கென்று உரிய ஒரு படிவத்தை வங்கியிலிருந்து பெற்று அதில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை நிரப்ப வேண்டும். பின் அப்படிவித்துடன் பணம் பெறுபவருக்கு அளிக்கப்பட வேண்டிய பணம் மற்றும் வங்கிக் கமிஷன் ஆகியவற்றையும் வங்கியில் செலுத்த வேண்டும். அதன் பின் வங்கியர், பணம் பெறுபவரின் பெயரில் ஒரு வங்கிப் பணவிடையை அளிப்பார். வங்கிப் பணவிடை என்பது ஒரு வங்கியரால் தமது வங்கியரின் மற்றறொருகிளைக்கு அப்பணவிடையில் குறிப்பிட்டுள்ள தொகையை பணம் பெறுபவரிடம் (Payee) அளிக்குமாறு ஆணை பிறப்பிக்கும் ஓர் ஆவணம் ஆகும். வாடிக்கையாளர் இப்பணவிடையைப் பெற்று அதை பணம் பெறுபவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவார். அதைப் பெற்றுக் கொண்ட பணம் பெறுபவர் தமது கணக்கின் மூலம் அதற்குரிய பணத்தை வசூலிக்கச் செய்து பெற்றுக் கொள்வார். அப்பணவிடை கீறலிடப்படவில்லை எனில் அதற்குரிய தொகையை அவர் அப்பணவிடையை வசூலிக்க அனுப்பாமலேயே உடனடியாகப் பெற்றுக் கொள்ள இயலும்.

**7. அஞ்சல் மாற்றம் மற்றும் தந்தி முறை மாற்றம் (Mail Transfer and Telegraphic Transfer) :** அஞ்சல் மாற்றம் அல்லது தந்தி முறை மாற்றத்தின் மூலமும் வாடிக்கையாளர் தொகையை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றியனுப்பலாம். அஞ்சல் மாற்றம் என்பது வாடிக்கையாளர் தமது வங்கிக் கணக்கிலிருந்து குறிப்பிட்ட ஓர் தொகையை வேறொரு இடத்தில் உள்ள அதே வங்கியின் மற்றொரு கிளையில் உள்ள பணம் பெறுபவரின் வங்கிக் கணக்கிலிருந்து குறிப்பிட்ட ஓர் தொகையை வேறொரு இடத்தில் உள்ள அதே வங்கியின் மற்றொரு கிளையில் உள்ள பணம் பெறுபவரின் வங்கிக் கணக்கிற்கு, சிறியதொரு தொகையைக் கமிஷனாகப் பெற்றுக் கொண்டு மாற்றியனுப்பக் கோரும் ஓர் மாற்ற முறையாகும். வாடிக்கையாளரின் அறிவுறுத்தலைப் பெற்ற பிறகு வங்கியர் தொடர்புடைய வங்கி மேலாளருக்கு ஓர் தகவலை அனுப்பி தமது

வாடிக்கையாளரின் அறிவுறுத்தலின்படி அவர் கேட்டுக் கொண்டுள்ள ஓர் தொகையை பணம் பெறுபவரின் கணக்கில் வரவு வைக்கச் சொல்லிக் கேட்பார். தந்தி முறை மாற்றத்தில், ஓரிடத்தில் உள்ள வங்கியர் மற்றொரு இடத்தில் இருக்கும் ஒரு வங்கி மேலாளருக்கு அவர் வங்கியின் குறிப்பட்ட வாடிக்கையாளரின் கணக்கில் குறிப்பிட்ட ஓர் தொகையை வரவு வைக்கச் சொல்லித் தந்தி மூலம் தகவல் அளிப்பார். தந்தி முறை மாற்றத்தில் மாற்றம் தொடர்பான தகவல் அதிவேகமான முறையில் தரப்படுவதால், பணம் பெறுபவரால் அப்பணத்தை மிகக் குறைந்தளவு காலத்திலேயே உபயோகப்படுத்த முடிகின்றது.

**8. வணிகர் வங்கியியல் (Merchant Banking) :** சில வணிக வங்கிகள் புதிய தொழில் நிறுவனங்களுக்கு பலதரப்பட்ட தகவல்களை பெறுவதற்கும் முன்னேற்றப் பணிகளைத் திட்டமிடுவதற்கும் உதவி செய்யும் வகையில் வணிகர் வங்கியியல் பிரிவுகளைத் தொடங்கியுள்ளன. சந்தைத் தேவை மற்றும் உகந்த தகவல்களைப் பெறுவதற்கு இவ்வங்கிகள் தோற்றுவிப்பாளர்களுக்கு உதவி செய்கின்றன.

**9. பணப் பொறுப்பாளர் முறை (Teller System) :** வங்கியின் நன்மதிப்பு, வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தும் அதன் திறமையையே பெரிதும் நம்பியுள்ளது. பணத்தைப் பெறுதல் மற்றும் காசோலைகளை அளித்தல் ஆகிய இரண்டு பணிகளே வங்கியர் ஆற்றும் மிக முக்கியமான பணிகளாகும். இச்சமயங்களில் வாடிக்கையாளர்கள் மிக நீண்ட நேரம் வரிசையில் காத்துக் கிடக்க நேரிட்டால் மிகவும் எரிச்சலடைகின்றனர். இவ்வாறு காத்திருக்கும் நேரத்தைக் குறைப்பதற்காகவே அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் திட்டமே பணப் பொறுப்பாளர் முறையாகும். இம்முறையின் கீழ், பணப் பொறுப்பாளரே தம்மிடம் அளிக்கப்பட்ட காசோலையை ஆய்வு செய்து அதற்குரிய தொகையையும் செலுத்தி விடுகின்றனர். ஏதேனும், சந்தேகம் எழும் பட்சத்தில் பதிவுகளை எடுத்துப் பார்த்து அவரே உறுதியும் செய்து கொள்கிறார்.

இம்முறையில், காசோலைக்குரிய பணத்தை அளிக்க இசைவு கூறுதல் (Passing the Cheque) மற்றும் அதற்குரிய பணத்தை அளித்தல் ஆகிய இரண்டு பணிகளுமே பணப் பொறுப்பாளரால் மேற்கொள்ளப்படுகின்றன. பல வங்கிகள் இம்முறையின் கீழ், வங்கியில் அளிக்கப்படும் தொகைக்கு ஒரு உச்சபட்ச தொகையை நிர்ணயித்து உள்ளன. அவ்வாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அத்தொகையளவிற்கு மட்டுமே பணப் பொறுப்பாளரால் காசோலைகளுக்கு பணம் வழங்க முடியும்.

**10. தானியங்கி பணப் பொறுப்பு இயந்திரங்கள் (Automatic Teller Machines) :** கடந்த சில வருடங்களில் தானியங்கி பணப் பொறுப்பு இயந்திரங்கள் நாட்டின் வங்கியியல் முறையிலேயே ஓர் புரட்சியையே ஏற்படுத்தி விட்டன என்று நாம் கூறினால் அது மிகையாகாது. பல வங்கிகள், தமது வாடிக்கையாளர்கள், வரிசையில் காத்திராமல் உடனடியாகப் பணத்தைச் செலுத்துவதற்கும் பணத்தைப் பெறுவதற்கும் ஏதுவாக தானியங்கி பணப் பொறுப்பு இயந்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளன. கடன் அட்டைதாரர்களும் (Credit Card Holders) கூட நாட்டின் பல்வேறு இடங்களில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கி பணப்பொறுப்பு இயந்திரங்களின் மூலம் எந்நேரமானாலும் (இரவிலும் கூட) தங்களுக்குத் தேவையான தீடீர்த் தேவை ரொக்கத்தை (Emergency Cash) பெற முடியும். இவ்வித இயந்திரங்கள் ஒரு கணிப்பொறியைப் போல பணிபுரிகின்றன.

**11. கடன் அட்டைகள் (Credit Cards) :** நமது நாட்டில் பெரும்பாலான வங்கிகள் கடன் அட்டைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. இவை தங்களுடன் கடன் ஏற்பாட்டை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் ஒரு கடன் அட்டையை வழங்குகின்றன. இவ்வித அட்டைகள் கடன் கருவி போலச் செயல்படுகின்றன. கடன் அட்டைதாரர்கள் வெளியே செல்லும் பொழுது பணம் கொண்டு செல்ல வேண்டியதில்லை. இவர்கள் கடன் அட்டைகளுக்குப் பொருள் வழங்கும் அதிகாரம் பெற்ற முகவர்களிடம் இருந்து தமக்கு வேண்டிய

பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். இந்த அட்டைகளை பெட்ரோல் பங்குகள், ஹோட்டல்கள் போன்ற இடங்களில் கூட பயன்படுத்த முடியும். மேலும், ஒரு குறிப்பிட்ட தொகை அளவிற்கு **“ தீடீர்த் தேவை ரொக்கம்”** என்ற பெயரில் இந்த அட்டைகளை வழங்கிய வங்கிகளில் தானியங்கி பணப் பொறுப்பு இயந்திரங்கள் இருக்கும் பட்சத்தில் இந்த ரொக்கத்தை, இரவு, பகல் என்று பாராமல் எந்த நேரத்திலும் அவ்வித இயந்திரங்களின் உதவியால் பெற முடியும். இவ்வசதிகள் அளைத்தும் மக்களை அதிகப்பணத்தைக் கையிருப்பாக வைப்பதிலிருந்தும் அதிகப் பணத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வதிலிருந்தும் தவிர்க்கின்றன. குறிப்பாக அவற்றில் உள்ள அபாயத்தி லிருந்து காப்பாற்றுகின்றன. இந்த அட்டைகள், வாடிக்கையாளர் களுக்கு, தாம் வழங்கிய பொருட்களுக்குரிய தொகையை சுலபத் தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் திட்டமிட்டுச் செயல்பட உதவுகின்றன. இவ்வசதிகளைப் பெறுவதற்காக வாடிக்கையாளர்கள் தமது கணக்கில் நிலுவையாக உள்ள தொகைக்கு வட்டி கட்டுவதுடன், சிறியதொரு தொகையைச் சேவைக் கட்டணமாகவும் (Service Charge) செலுத்த வேண்டும்.

பல வங்கிகள் கடன் அட்டைதாரர்களுக்கு தனி மனிதருக்குரிய விபத்துக்காப்பீடு மற்றும் தொலைந்த கடன் அட்டைகளின் மீது வரையறுக்கப்பட்ட பொறுப்பு போன்ற தந்நிகரில்லாத பல நன்மைகளையும் அளிக்கின்றன. கடன் அட்டைதாரர்களுக்கு பாதுகாப்பு மற்றும் மன அமைதி போன்ற பல நன்மைகளும் உண்டு.

1994 ஆம் ஆண்டு ஜுன் கடைசி வரையிலான புள்ளி விபரப்படி 6 தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகளும், பாரத ஸ்டேட் வங்கியும் அதன் துணை வங்கிகளும், மற்றும் 5 அந்நிய நாட்டு வங்கிகளும் நமது நாட்டில் கடன் அட்டைகள் தொழிலில் ஈடுப்பட்டுள்ளன. மேலும், தற்பொழுது, 20 இந்திய வங்கிகள் (10 பொதுத் துறை வங்கிகள் மற்றும் 10 தனியார் துறை வங்கிகள்) பிற வங்கிகளுடன் கொண்ட ஏற்பாட்டின் (Tie -up Arrangement) அடிப்படையில் இத்தொழிலில் இறங்கியுள்ளன.

**12. கொடைக் காசோலைகள் (Gift Cheques) :** திருமணம், பிறந்த நாள், மதச் சார்புடைய மற்றும் பிற பண்டிகை நாட்கள் போன்ற முக்கியமான தறுவாய்களில், தங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு பரிசளிப்பதற்கு ஏதுவாக வணிக வங்கிகள் கொடைக் காசோலைகளை வழங்குகின்றன. இக்காசோலைகள் பலதரப்பட்ட தொகைகளில் (Denominations) வாடிக்கையாளர்கள் விரும்பும் வகையில் அளிக்கப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட பணிகளைத் தவிர வாடிக்கையாளருக்கு தேவை ஏற்பட்டால், சிறப்பு ஆலோசனைகளை வழங்கும் பணியையும் (Speical Consultancy Services) வங்கிகள் மேற்கொள்கின்றன. நமது வங்கிக் கம்பெனிகள் சட்டத்தின் (Banking Companies Act) மூலமாகவும் வங்கியர் மேற்கொள்ளக் கூடிய துனைணப் பணிகளும் நெறிமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

**13. ஏட்டுக் கடன் தரகு வணிகம் (Factoring) :** இன்று, வணிக வங்கிகள், தமது வாடிக்கையாளர்களுக்கு ஏட்டுக் கடன் தரகு வணிகச் சேவைகளையும் ஆற்றுகின்றன. இது உடனடி ரொக்க ஓட்டத்திற்கும் கடனாளர் கணக்குகளின் நிர்வாகித்திற்கும் வழி வகுத்து நாட்டின் வணிகம் மற்றும் தொழில் அபிவிருத்திக்கு உதவிகரமாக உள்ளது.

முன்னோடி வங்கி திட்டம் (Loan Bank Schem) :

தேசிய கடன் குழு ஒன்று நமது அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பகுதியை எடுத்து, அந்த பகுதிகளுக்கு தேவையான கடன் உதவியை செய்து அதன் மூலம் அந்த பகுதியை வளர்ச்சி அடைய செய்கின்றனர்.

ஆகஸ்ட் மாதம் 1969, ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா நரிமன் குழுவிடம் ஒரு குறிப்பிட்ட மாவட்டம் ஒப்படைக்கப்பட்டு அந்த மாவட்டத்திற்கு தேவையான கடன் உதவி மற்றும் வளர்ச்சி நிவாரணங்களையும் செய்கின்றது.

முன்னோடி வங்கியின் திட்டப் பணிகள் :

முன்னோடி வங்கிகள் திட்டக்குழு ஒவ்வொரு மாவட்டத்தையும் ஒவ்வொரு பொது நிறுவன வங்கியிடம் அல்லது தனித்துறை வங்கியடம் ஒப்படைக்கின்றனர்.

முன்னோடி வங்கிகள் பல தரப்பட்ட சூழ்நிலைக்கு தகுந்தாற்போல், குறிப்பிட்ட மாவட்டத்தின் வங்கிகள் பொறுத்து அமைந்துள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட வங்கிகள், அந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்கு தேவையான கடன் தேவைகளையும், வளர்ச்சிக்கு தேவையான பல தரப்பட்ட கடன்களையும் ஒருகிணைந்த வளர்ச்சியை செய்கின்றன.

முன்னோடி வங்கியின் முக்கியத்துவம் :

வங்கிகளை நன்கு கணக்கிட்டு அதன்படி வங்கியை வளர்ச்சிடைய செய்கின்றனர். அவ்வாறு செய்யும் போது முக்கிய வளர்ச்சி மையங்கிகள் கண்டு பிடித்து அமையும் வளர்ச்சியடைய செய்கின்றனர்.

முன்னோடி வங்கிகள் கடன் இடைவெளியை கணக்கிட்டு, அதன் படி போதிய கடன் தேவையை திட்டமிடுகின்றனர்.

முன்னோடி வங்கிகள், பிற்படுத்தபட்ட மற்றும் மதல் தரப்பட்ட பிரிவுகளை கண்டு, அதில் விவசாய பொருள்கள் விற்பதற்கும் தகுந்த வசதிகள் உள்ளவர் அல்லது விவசாய பொருட்கனை பதப்படுத்தும் உறவிடம் ஆகியவை கண்டு அறியவேண்டும்.

கடன் திட்டங்கள் (Credit Planning) முதல் சுற்று - (1975 -78) :

முன்னோடி வங்கிகள் மூலம் மாவட்டத்தின் கடன் திட்டத்தை வகுக்கப்பட்டது. இதன் மூலம் அந்த மாவட்டத்தில் தொழில் நுட்பம் இயற்கை வளம், பொருளாதார வளர்ச்சி ஆகியவை கணக்கிட்டு அதன் மூலம் கடன் திட்டத்தை அமுலாக்கப்பட்டது.

இரண்டாவது சுற்று : 1980 - 82 :

முன்னோடி வங்கிகள், மாவட்டத்தில் உள்ள பலதரப்பட்ட பகுதிகள் திட்டவாரியாக, நிறுவனவாரியத்தை பிரித்து அதன் தேவைகளை பூர்த்தி செய்கின்றனர். அவ்வாறு செய்யும் போது பின்தங்கப்பட்ட பகுதிகள் நன்கு வளர்ச்சியடைகின்றன.

மூன்றாவது சுற்று : 1983 - 87 :

இந்த சுற்றில் மாவட்ட கடன் திட்டத்தின் மூலம் பலதரப்பட்ட அரசாங்க உதவியுடன் எடு IRDp திட்டத்தின் மூலம் கடன் உதவிகள் செய்கின்றனர். அவ்வாறு செய்யும்போது அரசாங்கம் தருக்கின்ற எல்லா நலத்திட்டங்களின் மாற்றத்திற்கு நேரடியாக சேர்க்கின்றனர்.

**<u>வினாக்கள்</u>**

**1. நிறுவனங்கள் மூலமாகக் கடன் வழங்குவதன் அவசியங்கள்?**

**2. வணிக வங்கிகளும் வட்டார கிராம வங்கிகளும் உள்ள வேறுபாடுகள் என்ன?**

**3. வட்டார கிராம வங்கிகளால் சந்திக்கப்படுகின்ற பிரச்சனைகள் ?**

**4. வணிக வங்கிகள் பற்றி கட்டுரை வரைக?**

**5. வணிக வங்கிகளின் பணிகள் ?**

**6. நடைமுறை வைப்புகள் பற்றி சிறு குறிப்பு வரைக ?**

## குறிப்பு

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

## அலகு- III

**கிராம புற வங்கியில்**

இந்திய பொருளாதரம் ஒரு வளர்ச்சி அடைகின்ற பொருளாதாரம். இதில் கிராமப்புற பகுதிகளின் உள்ள கிராம்புற மக்கள் தரத்தை உயர்த்த கிராமப்புற வங்கியில் பயன்படுகிறது. நாட்டின் வளர்ச்சிக்கு மனித விழிப்புணர்வும் , மனித அறிவு வளர்ச்சிக்கும் கிராமபுற வங்கியியல் பயன்படுகிறது. கிராமப்புற வங்கியியல் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய கருவியாகும்.

நாட்டின் வளர்ச்சியை முக்கியத்தை உணர்த்து கிராமப்புற வங்கிகள் வளர்ந்த கூட்டுறவு வங்கியை உபயோகித்து வளர்ச்சியடைய செய்கின்றனர். இந்த கூட்டுறவு வங்கிகள் மூலமாக கிராமப்புற கடன் கொடுத்து கிராமப்புற வளர்ச்சி அடைய செய்கின்றனர்.

**கிராமப்புற வங்கியின் நோக்கங்கள் :-**

1. இந்திய கிராமப்புற பொருளாதாரத்தில் பகுதிகள் அறிய பளன்படுத்துகிறது.
2. இந்திய கிராமபுற பொருளாதாரத்தில் முக்கிய அங்கங்களை விரிவுபடுத்தி கூறுகிறது.
3. கிராமபுற நிதி ஆதாரத்தை அறிய உதவுகிறது.
4. கிராமப்புற நிதி அமைப்புக்கு தேவைகளை நிதி ஆதாரத்தை விரிவுபடுத்தி செய்கின்றது.

**இந்திய கிராமப்புற பொருளாதாரம்**

இந்தியாவின் வளர்ச்சி மற்றும் அபி விர்த்தி கிராமபுற பொருளாதாரத்தை சார்ந்து அமைந்து உள்ளது. ஏனெனில் இந்தியாவில் முக்கிய வேலைவாய்ப்பு வேளாண்மை தொழிலை சார்ந்ததாகும் . அதுமட்டும் இல்லாமல் 70% t 75% மக்கள் வேளாண்மையுடைய அறை சார்ந்த தொழிலை சார்ந்ததாகும்.'' அதனால் இந்திய பொருளாதாரம் கிராமப்புற பொருளாதாரத்தை சார்ந்ததாகும்.

**விவசாய வங்கிகளும் வளர்ச்சியும்**

**RURAL BANKS AND DEVELOPMENTS**

இந்தியா முழுக்க முழுக்க விவாசயத்தையே நம்பியுள்ள ஒரு நாடு ஆகும். நமது ஜனத்தொகையில் பொரும்பகுதியினர் விவசாயத்தை நம்பி வாழும் மக்களாவர். விவசாயத்தின் மூலம் உணவு, தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருகள் (Raw Materials) ஆகியன கிடைப்பதோடு அல்லாமல் பலகோடி மக்களுக்கு வேலைவாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. எனவே, விவசாய வளர்ச்சியே இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் அடிப்படை என்றால் அது மிகையாகாது.

ஆயினும் , விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் இன்னமும் மோசமாகவே உள்ளது. பலர் வறுமைக் கோட்டிற்குக் கீழேயே இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வாழ்நாள் முழுவதும் கடனிலேயே மூழ்கி இருக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். இவர்கள் நலனுக்குப் பலவேறு திட்டங்களைத் தீட்ட வேண்டிய அவசியத்தையும் நாடு விடுதலை அடைந்த பிறகு மத்திய அரசு உணர்ந்தது.

நமது நாட்டு விவசாயிகள் கடனிலேயே பிறந்து கடனிலேயே வளர்ந்து கடனிலேயே இறக்கின்றனர். இது உலகில் வேறெங்கும் காணாத புதுமையாகும். இதற்கு முக்கியக் காரணம் நமது விவசாயிகள் வாங்குகின்ற கடனை விவசாயத்திற்குச் செலவிடாமல்,வேறு வேறு தேவைகளுக்கும் உற்பத்தியோடு தொடர்பற்ற காரியங்களுக்கும் பயன்படுத்துவதே ஆகும்.

**கிராமபுற நிதி உதவிக்கு தேவையான காரணம்**

நமது விவசாயத்தின் பெரும்பகுதி பருவ மழையை நம்பியுள்ளது. பருவ மழை அடிக்கடி பொய்த்து விடுவதால் விவசாயமும் கடன் வாங்க வேண்டிய

நிலைமைக்கு உந்தித் தள்ளப்படுகின்றனர். இந்நிலைமைகளுக்கான முக்கியக் காரணங்கள் பின்வருமாறு.

**1. போதுமான அளவு கடன் வழங்கும் நிறுவனங்கள் இல்லாமை (Inadequancy of Institutional Credit ) :** விவசாயங்களுக்குக் கடன் வழங்குவதில் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் கிராமப்புற வங்கியர்களும் (Indigenous Bankers) லேவாதேவிக்காரர்களும் (Money Lenders) ஆவார்கள். மொத்த விவசாயக் கடன்களில் 7% மட்டுமே கடன் நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளது என்று அகில இந்திய கிராமியக் கடன் ஆற்வுக் குழு (All India Rural Credit Survey) தீர்மானித்துள்ளது எனவே, மீதியுள்ள 93% கடனும் கிராமப்புற லேவாதேவிக் காரர்களிடம் அநியாய வட்டிக்கு வாங்கப்பட்ட கடன்களாகும். இதனால் நாளுக்கு நாள் விவசாயிகளின் கடன் சுமை ஏறிக்கொண்டே போகின்றது.

**2. பூர்வீகக் கடன்கள் (Ancestral Debts) :** பல விவசாயிகள் தாங்கள் பட்ட கடனை அடைக்காமலேயே இறந்து போய் விடுகின்றனர். இந்தக் கடன்களை அவர்களுடைய வாரிசுகளும் அடைக்க முடியாமல் பெரும் அவதிக்கு ஆளாகி விடுகின்றனர். நாளடைவில் அசலோடு வட்டியும் சேர்ந்து பெரும் தொகையாகிக் கடனுக்காகத் தம் நிலத்தை லேவாதேவிக்காரர்களிடமே விற்று விடவேண்டியக காட்டாயத்துக்கும் ஆளாகி விடுகின்றனர். இதன் மூலம் சிறுவிவசாயிகள் நாளடைவில் விவசாயக் கூலிகளாகி விடுகின்றனர்.

**3. நிலம் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிவு பட்டிருப்பதும் பல இடங்களில் பரவி இருப்பதும் (Sub - division and Fragmentation of Holdings) :** நமது விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் சிறு விவசாயிகள் இவர்களது நில உடைமையும் மிகச் சிறிய அளவே ஆகும். அதுவும், ஒரே இடத்தில் இல்லாமல் பல இடங்களில் பரவலாகச் சிதறிக் கிடக்கின்றது. இதனால் சிக்கனமாக விவசாயம் செய்ய இயலவில்லை. மேலும், விவசாயத்தில் கிடைக்கும் இலாபமும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகின்றது.

**4. வழக்குகள் (Litigation) :** சிறிய விஷயங்களுக்கு மிகவும் சுகமான ஒரு விஷயமாகி விட்டது. இதனால், ஏற்படும் பொருட்செலவையும், வீண் அலைச்சலையும், காலதாமதத்தையும் அவர்கள் பொருட்படுத்துவதே இல்லை. சிறு விஷயங்களை எல்லாம் கௌரவப் பிரச்சனையாக எடுத்துக் கொண்டு பெருமளவில் கடன் வாங்கி வழக்கு நடத்துவது நமது விவசாயிகளின் வாடிக்கையாகி விட்டது.

**5. அநியாய வட்டி (Higher Rate of Interest) :** தங்கள் தேவைகளுக்குக் கிராமப்புற லேவாதேவிக்காரர்களிடம் அநியாய வட்டிக்குக் கடன் வாங்குகின்றனர். இவ்வட்டி விகிதம் 50% வரை உள்ளது. இதனால் கடன் சுமை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருப்பதால் விவசாயிகளால் தாங்க இயலாத சூழ்நிலை உள்ளது.

**6. விவசாயிகளின் ஊதாரிச் செலவுகள் (Extravagance of the Cultivators) :** திருமணம் போன்ற சடங்குகளுக்கு நமது விவசாயிகள் நிலத்தை விற்றோ அல்லது பெருமளவில் கடன் வாங்கியோ ஊதாரிச் செலவுகள் செய்கின்றனர் . இதனால் இவர்கள் நாளுக்கு நாள் ஏழைகளாகிக் கொண்டே உள்ளனர்.

**7. இயற்கையின் சீற்றங்கள் (Natural Calamities) :** நமது விவசாயம் பருவ மழையையே நம்பியுள்ளது. பல காலங்களில் பருவமழை பொய்த்து விவசாயம் பாதிக்கப்பட்டு விளைச்சல் குறைந்து விடுகின்றது. அதனால், விவசாயிகள் பழைய கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையில் மீண்டும் மீண்டும் புதிய கடன்களை வாங்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகி விடுகின்றனர்.

**8. விற்பனை செய்வதில் உள்ள சிரமங்கள் (Difficulties in selling the Agricultural Produce) :** உற்பத்தியான விவசாய விளை பொருள்களையும்

உள்ளூரிலேயே குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது. பெரும்பாலும் லேவாதேவிக்காரர்களே வியாபாரிகளாகவும் இருப்பதால், அவர்களிடைமே மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டியுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு (RegulatedMarket) எடுத்துச் சென்று இலாபகரமான விலையில் விற்கும் நிலையில் நமது விவசாயிகளின் நிலைமை இல்லை. மேலும், அறுவடை காலங்களில் விலையும் பெருமளவு சரிந்து கொண்டே இருக்கும். எனவே, விலை ஏறும் வரை தம்முடைய விளை பொருள்களைப் பாதுகாத்து வைக்கவும் இயலாத அளவுக்கு அவர்களுக்கு பண நெருக்கடி உள்ளது. எனவே, கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த பொருள்களை இலாபகரமாக விற்பனை செய்ய இயலாத நிலையில் நமது விவசாயிகள் உள்ளனர்.

**சுயபரிசோதனை**

1. விவசாயத்தின் மூலம் ___________, தொழிற்சாலைக்குத் தேவையான ___________ஆகியன கிடைப்பதோடு அல்லாமல் பலகோடி மக்களுக்கு வேலைவாய்ப்பும் ஏற்பட்டுள்ளது (உணவு, மூலப் பொருகள்).
2. நமது விவசாயத்தின் பெரும்பகுதி ________________ நம்பியுள்ளது(பருவ மழையை).
3. மொத்த விவசாயக் கடன்களில் ___________________மட்டுமே கடன் நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளது (7% ).

## கிராமப்புறக் கடன் தேவையின் மதிப்பீடு (An Estimate of Rural Credit Needs)

விவசாயிகளின் கடன் தேவைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. குறுகிய காலக் கடன் தேவைகள் (Short - term Credit Requirements)
2. மத்திம காலக் கடன் தேவைகள் (Medium - term Credit Requirements)

மற்றும்

3. நீண்ட காலக் கடன் தேவைகள் (Long - term Requirements).

**1. குறுகிய காலக் கடன்கள் (Short - term Credit) :** விவசாயத்திற்குத் தேவையான நடைமுறை மூலதனத் தேவைகள் (Working Capital Requirements) இதில் அடங்கும். விதைகள், உரங்கள், பூச்சிமருந்துகள், கடனுக்கு வட்டி செலுத்துதல், விவசாயக் கூலி வழங்குதல் ஆகிய செலவினங்களுக்கு இக்கடன் தேவையாகும்.

**2. நீண்ட காலக் கடன்கள் (Long -term Credit) :** விவசாயத்திற்குத் தேவையான உழவு மாடுகள் (Live Stock), நிலத்தைச் சீரமைத்தல் போன்ற காரியங்களுக்குத் தேவையான கடன்கள் இதில் அடங்கும்.

**3. மத்திம காலக் கடன்கள் (Medium - term Credit) :** நிலங்களைப் புதிதாக வாங்குதல், விவசாயத்திற்குத் தேவையான எந்திரங்களை வாங்குதல், நீர்ப்பாசன வசதிக்குத் தேவையான கிணறுகளைத் தோண்டுதல் (Digging of Wells) முதலியவற்றிற்குத் தேவையான நிதிகள் இக்கடனில் அடங்கும்.

1969 ஆம் ஆண்டில் அகில இந்திய கிராமப்புறக் கடன் மறு ஆய்வுக் குழு All India Rural Credit Review Committee) விவசாயிகளின் குறுகிய காலக் கடன் தேவை மட்டும் ரூ. 2,000 கோடிகளுக்குக் குறையானது என்று மதிப்பிட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்தொகை இதற்காகவே ஒதுக்கப்பட்டது.மேலும், விவசாயத்தில் புதிய யுக்தினை (New Strategy) புகுத்தியதால் கிராமப்புறக் கடனுக்கான தேவை மேலும் அதிகரித்தது. எட்டாவது

ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயிகள் குறுகிய காலக் கடன் தேவைக்கென ரூ. 1,48,800 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இது இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையில் 18.65% ஆகும்.

கிராமப்புற நிதிஉதவி பெறும் வழிகள்

கிராமப்புறக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வழிகளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவைகளாவன : 1. தனியார் வழிகள் (Private Sources), **2. கடன் நிறுவனங்கள் (Credit Institutions).**

**1. நிறுவனமல்லாத தனியார் வழிகள் (Non - institutional Private Sources) :** விவசாயக் கடன் வழங்குவதில் நிறுவனமல்லாத தனியார்களே பெரும்பங்கு வகிக்கின்றனர்.

1. கிராமப்புற லேவாதேவிக்காரர்கள் (Village Money Lenders).
2. வியாபரிகள், கமிஷன் ஏஜண்டுகள்
3. உறவினர்கள் (Relatives).
4. மிராசுதார்களும் மற்றவர்களும் (Landlords and Others)
5. கிராமப்புற வங்கியர்கள் (Indigenous Bankers).

**1. கிராமப்புற லேவாதேவிக்காரர்கள் (Village Money Lenders) :** கிராமப்புற விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் மிக முதன்மையான இடம் வகிப்பவர்கள் லேவாதேவிக்காரர்களே ஆவார்கள். இவர்களில் சிலர் விவசாயிகளாகவும் இருப்பதோடு துணைத் தொழிலாக (Side Business) லேவாதேவியும் செய்து வருகின்றனர். 1961 ஆம் ஆண்டுப் புள்ளி விபரப்படி கிராமப்புறக் கடன் தேவையில் 99. 2% இவர்களால் வழங்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இவர்களிடம் அநியாய வட்டிக்குக் கடன் வாங்குவதைக் குறைக்க அரசு பெருமுயற்ச்சி எடுத்துக் கொண்டிருந்தும் 1981-82 ஆம் ஆண்டு புள்ளி விபரப்படி கிராமப்புறக் கடன்களில் 38.8 % இவர்களாலேயே வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவர்களது முக்கியத்துவத்தைக் குறைப்பதற்கு மேலும் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. இவர்கள் கிராமப்புறங்களில் செல்வாக்கு பெற்று விளங்குவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

1. லேவாதேவிக்காரர்கள் எந்த அடமானச் சொத்துகளையும் கேட்காமல் சுலபமாகக் கடன் வழங்குகின்றனர். இரவு பகல் பாராமல் எந்த நேரத்திலும் இவர்களிடம் கடன்பெற இயலும்.
2. இவர்கள் கடன் வாங்குபவர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதாலும், குடும்ப நண்பர்கள் போன்று பழகுவதாலும் இவர்களிடம் கடன் வாங்குவதையே விவசாயிகளும் பெரிதும் விரும்புகின்றனர்.
3. இவர்களிடம் கடன் பெறும் முறை எளிமையானதும் சுலபமானதும் ஆகும்.
4. இவர்களுக்கு உள்ளூர்ப் பழக்க வழக்கங்கள் நன்கு தெரிவதால். பிராமிசரி நோட்டின் மீதும் நிலப் பத்திரங்களை வைத்துக் கொண்டும் சுலபமாகக்கடன் வழங்குகின்றனர்.

ஆனால், லேவாதேவிக்காரர்கள் கடன் வழங்கும் முறையில் பல்வேறு ஒழுங்கீனங்கள் உள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு.

1. உண்மையானக் கடன் கொடுத்த தொகையை விட அதிகத் தொகைக்கு பிராமிசரி நோட்டு எழுதி வாங்கிக் கொள்ளுகின்றனர்.
2. கடனைத் திரும்பச் செலுத்தும்போது அதற்காக எந்த இரசீதும் வழங்குவதில்லை.
3. இவர்கள் வசூலிக்கும் வட்டி அநியாய வட்டியாகும்.

எனவே, இத்தகைய கடன் வழங்குவோரால் நமது விவசாயிகள் பெருமளவில் சுரண்டப்படுகின்றார்கள். இவர்கள் உற்பத்திப் பெருக்கத்திற்குப் பெருமளவில் தடையாக உள்ளனர். என்று அகில இந்திய கிராமப்புறக் கடன் ஆய்வுக் குழுவும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

**2.வியாபாரிகளும் கமிஷன் ஏஜெண்டுகளும்(Traders andCommisssion Agents):** இவர்கள் விவசாயிகளுக்கு விவசாயம் செய்யத் தேவையான பொருள்களை வாங்கக் கடன் வழங்குகின்றனர். எனவே, அறுவடை முடிந்தவுடன் அவர்களிடமே விவசாயிகள் தமது மொத்த விளைச்சலையும் அவர்கள் கேட்கும் விலைக்கு விற்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். பணப் பயிர்களான பருத்தி, கடலை, புகையிலை போன்ற பொருள்களின் உற்பத்தியில் இவர்களின் செல்வாக்கு மிகவும் அதிகம். இவர்கள் வழங்கும் கடனின் அளவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என்பதை அரசின் புள்ளி விபரங்களே தெரிவிக்கின்றன.

**3. உறவினர்கள் (Relatives) :** சில விவசாயிகள் தனது உறவினர்களிடம் தற்காலிகமாகக் கடன் வாங்கும் வழக்கமும் உள்ளது. ரொக்கமாகவும், விதை போன்ற பொருள்களாகவும் கடன் வாங்குவதுண்டு இக்கடன்கள் பெரும்பாலும் வட்டியில்லாக் கடன்களே. எனினும், உறவினர்களிடம் கடன் பெறும் வழக்கம் நாளடைவில் குறைந்து வருகின்றது.

**4. மிராசுதார்களும் மற்றவர்களும் (Landlords and others) :** பெருமளவில் நிலத்தைச் சொந்தமாக வைத்து விவசாயம் செய்பவர்களை மிராசுதார்கள் என்று குறிப்பிடுவது தஞ்சாவூர் மாவட்டத்தில் வழக்கம். இவர்கள் சிறு விவசாயிகளுக்கு அவ்வப்போது கடனும் வழங்கி வருகின்றனர். இவர்களிடம் சிறு விவசாயிகள் கடன் வாங்கி விவசாயம் செய்து அறுவடை முடிந்தவுடன் அவர்களிடமே தமது விளைச்சலையும் விற்று விடுகின்றனர். இதனால், விவசாயிகள் தமது விளை பொருள்களை கட்டுப்படியாகக் கூடிய விலையில் விற்க இயலாத நிலையில் உள்ளனர்.

**5. கிராமப்புற வங்கியர் (The Indigenous Bankers) :** இவர்கள் லேவாதேவிக்காரர்களுக்கு இணையாக கிராமப்புறங்களில் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதிலும் முக்கிய இடம் பெறுபவர்கள் ஆவார்கள். கிராமப்புறக் கடன் விசாரணைக் குழு (The Indian Rural Banking Enquiry Committee) ஆனது, ‘‘கிராமப்புற வங்கியர் என்பவர்கள் தனிநபர்கள் அல்லது கூட்டு நிறுவனங்களாகும் ; இவர்கள் வணிக வங்கியைப் போலப் பொதுமக்களிடம் டெபாசிட்டுகள் பெறுதல், உண்டியல் வாங்குதல், கழிவு செய்து தருதல் ஆகிய பணிகளையும் ஆற்றுகின்றனர்’’ என்று இலக்கணம் வகுத்துள்ளது. எனவே, லேவாதேவிக்காரர்களுக்கும், கிராமப்புற வங்கியர்களும் உள்ள வேறுபாடுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. லேவாதேவிக்காரர்கள் சொந்த மூலதனத்திலிருந்தே தொழில் நடத்துகின்றனர். கிராமப்புற வங்கியர் பொதுமக்களிடம் டெபாசிட் பெறுகின்றனர்.
2. லேவாதேவிக்காரர்கள் உண்டியல் வழங்குவது இல்லை. கிராமப்புற வங்கியர் உண்டியல் தொழிலும் செய்கின்றனர்.
3. கிராமப்புற வங்கியர் விவசாயிகளைத் தவிர, மற்ற வியாபாரிகள், தொழலில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவருக்கும் கடன் வழங்குகின்றனர். லேவாதேவிக்காரர்கள் இவ்வாறு உற்பத்தியோடு தொடர்புடைய தொழில்களுக்குப் பெரும்பாலும் கடன் வழங்குவதில்லை.
4. கிராமப்புற வங்கியர் வசூலிக்கும் வட்டி லேவாதேவிக்காரர்கள் வசூலிக்கும் வட்டியை விட மிகவும் குறைவு.
5. கிராமப்புற வங்கியர் தகுந்த பிணையம் (Securities) பெற்றுக் கொண்டே கடன் வழங்குகின்றனர். ஆனால், லேவாதேவிக்காரர்கள் வெண்ணிலைக் கடன்களே (Unsecured Advances) பெரும்பாலும் வழங்குகின்றனர்.

இவ்வேறுபாடுகள் தவிர, இவ்விருவரிடமும் சில ஒற்றுமைகளும் உள்ளன. எனினும், இவர்களது வரலாற்றை ஆராயும் பொழுது கிராமப்புற வங்கியரே நமது நாட்டில் முதன் முதலில் வங்கித் தொழிலின் ஆரம்பக் கர்த்தாக்கள் எனலாம். தமிழ்நாட்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், வங்காளத்தில் சேத் மற்றும் பணியாக்கள், உத்திரபிரதேசத்தில் மார்வாடிகள் ஆகியோர் இத்தகைய

கிராமப்புற வங்கியர்களாக இன்றளவும் செயல்பட்டு வருகின்றனர். மேலும், தமிழ்நாட்டில் தஞ்சை ஜில்லாவிலுள்ள கல்லிடைக்குறிச்சி பிராமணர்களும் ஓரளவுக்கு இத்தொழில் ஈடுபட்டிந்தாலும், நாட்டுக்கோட்டை நகரத்தார் போன்று பரந்தளவில் இவர்கள் பணியாற்றவில்லை எனலாம்.

மற்ற வணிக வங்கிகளின் போட்டியின் காரணமாகவும், அரசாங்கக் கடன் நிவாரணச் சட்டங்களின் காரணமாகவும் இவர்களது வங்கித் தொழில் ஓரளவுக்கு இக்காலத்தில் பாதிக்கப்பட்டிருந்தாலும் இன்றளவும் கிராமப்புறங்களில் இவர்களது பங்கு முதன்மையாகவே உள்ளது என்பதும் கிராமப்புறக் கடன் வழங்குவதிலும் இவர்கள் ஆற்றிவரும் பணி மகத்தானது என்பதும் உண்மையாகும்.

**வணிக வங்கிகளும் விவசாயக் கடன்களும்**

## COMMERCIAL BANKS AND RURAL FINANCE

விவசாயக் கடன் மீது வணிக வங்கிகள் கவனம் 1995 ஆம் ஆண்டில் பாரத ஸ்டேட் வங்கி ஆரம்பிக்கப்பட்ட பொழுதுதான் திரும்பியது எனலாம். பாரத ஸ்டேட் வங்கி ஆரம்பிக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் கூட்டுறவு நடை முறை மற்றும் சந்தையிடுகைச் சங்கங்களுக்கு கடன் வசதி அளிப்பதே ஆகும். பாரத ஸ்டேட் வங்கிகளும் அதன் துணை வங்கிகளும் கிராமப்புறங்களிலும் நடுத்தர நகரங்களிலும் தங்களின் கிளைகளை பெருமளவில் நிறுவின. ஆனால், பிற வணிக வங்கிகள் தங்கள் கிளைகளை நகரங்களில் நிறுவுவதையே விரும்பி வந்தன. வணிக வங்கிகளின் இப்போக்கத்திற்குக் காரணம் என்னவென்றால் அவை விவசாயம் சார்ந்த பிரச்சனைகளிலிருந்து விலகி இருந்தும் விவசாயம் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் நில அபிவிருத்தி போன்றவற்றிற்குரிய விவசாயகளின் கடன் தேவைகளைக் கருத்தில் கொள்ளாததுமே ஆகும். வங்கிகளை நாட்டுடைமையாக்கிய பிறகு நடுத்தர நகரங்கள் மற்றும் கிராமப்பகுதிகளில் அதிவேகமாக வங்கிக் கிளைகளின் வளர்ச்சி ஏற்பட்டது. 1969 ஜு வரையில் வணிக வங்கிகள் விவசாயத்திற்கு அளித்த மொத்தக் கடன் தொகை ரூ. 162 கோடிகளாகவும் இக்கடனைப் பெற்ற கணக்குகள் 0.2 மில்லியனாகவுமே இருந்தது. ஆனால் தற்போதைய புள்ளி விபரப்படி பார்த்தால் இது அதிவேக வளர்ச்சி கண்டுள்ளது என்பது நமக்குக் கண்கூடாகத் தெரிகின்றது. 1992- 93 ஆம் ஆண்டில் வணிக வங்கிகள் (வட்டார கிராம வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் உள்ளிட்ட) விவசாயத்திற்கு அளித்த மொத்தக் கடன் தொகை ரூ. 13,933 கோடிகளாகும். தற்பொழுது இது ரூ.24,670 கோடிகளாக இருக்கின்றது. இக்கடனைப் பெற்றவர்களுள் பெரும் பகுதியினர் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களே ஆகும்.

**வணிக வங்கிகளின் நேரடி நிதியுதவி**

## (Direct Financing By Commercial Banks)

வணிக வங்கிகளுக்கு விவசாயிகளுடன் நேரடித் தொடர்பு கொள்வதில் தேவையான அனுபவம் இல்லை என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே ஆகும். ஆனால், தற்பொழுது வணிக வங்கிகள் விவசாயிகளின் குறிப்பாக சிறிய விவசாயிகளின் நிதித் தேவைக்கு பெரிதும் உதவ வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. ஆரம்பகாலத்தில், நாட்டுமையாக்கப்பட்ட வங்கிகள் பேரளவு உழவர்களுக்கும் பேரளவு உணவு தானிய உற்பத்தியில் ஈடுபடும் பிற குறிப்பிட்ட பிரிவைச்சார்ந்த விவசாயிகளுக்கும் கடனளிப்பதிலேயே கவனம் செலுத்தி வந்தன. ஆனால், தற்பொழுது குறுகிய காலப் பயிர்க் கடனின் அளவு, வணிக வங்கிகளால் அளிக்கப்பட்ட மொத்தக் கடனின் அளவில் சுமார் 47% ஆக உள்ளது. பம்ப் செட்டுகள், டிராக்டர்கள் மற்றும் பிற விவசாயம் சார்ந்த எந்திரங்கள் போன்றவை வாங்குவதற்கும், கிணறுகள் மற்றும் ஆள்குழாய்க் கிணறுகள் வெட்டுவதற்கும், பழம் மற்றும் தோட்டப் பயிர்களை வளர்ப்பதற்கும், நிலத்தை சமப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும், எருதுகள் மிருகங்கள் போன்றன வாங்குவதற்கும் தேவையான பருவக் கடன்கள் பல்வேறு காலங்களில் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்களின் அளவு இவ்வங்கிகளின் மொத்தக்

கடனில் 35% முதல் 37% ஆக உள்ளது. மேலும், இவை பால் பண்ணை, பறவைகள் வளர்ப்பு, தேனீ வளர்த்தல், மீன் பிடிப்புத் தொழில்கள் மற்றும் இது போன்ற பிற தொழில்களுக்கும் கடன் அளிக்கின்றன. இவ்வங்கிகளால் அளிக்கப்பட்ட இவ்வகைக் கடன்களின் அளவு 15% முதல் 16% ஆக உள்ளது.

இரண்டு ஹெக்டேருக்குக் குறையான நிலத்தை வைத்துள்ள 70 சதவீத விவசாயிகளுக்கு வங்கிக் கடன் கிடைப்பதில்லை பேரளவு நிலங்களை உடையவர்களே வங்கிக் கடன்களைப் பெறுவதற்கு தகுந்தவர்களாகவும் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால், இந்நிலை நீண்ட காலத்திற்குத் தொடர இயலாது. திட்டக் குழுவின் இயக்குதலின்படி, வணிக வங்கிகளும் கூட்டுறவு வங்கிகளும் இணைந்து பணிபுரியும் வகையில் சில விவசாயிகளை அடையாளம் காணவும், விவசாய வளர்ச்சிக்கு ஏற்ற சிக்கனமாக திட்டங்களைத் தீட்டவும் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் சிறு விவசாயிகள் வளர்ச்சி ஏஜென்ஸிகள் (Small Farmers Development Agencies) ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் கூட்டுறவு நிறுவனங்கள் ஏற்கனவே நன்முறையில் பணியாற்றி வருவதால், வணிக வங்கிகள் மிகவும் சுறுசுறுப்பாகவும் ஊக்கமுடனும் செயலாற்ற வேண்டியுள்ளது. சிறு விவசாயிகளைக் கண்டுணர்ந்த பிறகு அவர்கள் வளம் பெறக் கூடிய உழவர்களாவதற்கு ஏற்ற வகையில் வங்கிகள் கடனளிப்பதற்காக அவர்களை பலதரப்பட்ட பிரிவினர்களைப் பிரிக்கின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில், வணிக வங்கிகள், சிறு விவசாயிகள் வள்ச்சி ஏஜென்ஸிகள் (Small Farmers Development Agency (SFDA)) மற்றும் சுமாரான விவசாயிகள் மற்றும் விவசாயிகக் கூலிகள் முன்னேற்ற ஏஜென்ஸிகளால் (Marginal Farmers and Agricultural Labourers Development Agency (MFAL)) கண்டுபிடிக்கப்பட்ட பங்கேற்பாளர்களுக்கு (Participants) நிதியுதவி செய்ய ஆரம்பித்து விட்டன. மேலும், SFDA, MFAL பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு கடன் மற்றும் பிற பணிகளை அளிக்கும் வகையில் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை வணிக வங்கிகள் 1973 -74 ஆம் ஆண்டில் ஏற்படுத்தின. இத்திட்டத்தின் கீழ், இவை கடனுதவி மட்டுமின்றி அவர்களின் விளை பொருட்களுக்கு சந்தையிடுகை வசதி செய்து தருவது, உள்ளிடுகைகளை (Inputs) அளிப்பது போன்ற பிற பணிகளையும் மேற்கொள்கின்றன.

**ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டமும் வணிக வங்கிகளும் (IRDP and Commercial Banks)**

1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தை நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் செயலாற்றும் வண்ணம் விரிவடையச் செய்து அத்திட்டத்திற்கு வணிக வங்கிகளை நிதியுதவி அளிக்குமாறு இந்திய அரசு கேட்டுக் கொண்டது. அதற்குரிய வங்கித் திட்டங்களைத் தயார் செய்து அடையாளம் காணப்பெற்ற பங்கேற்பாளர்களுக்கு கடன்களைத் தயார் செய்து அடையாளம் காணப்பெற்ற பங்கேற்பாளர்களுக்கு கடன் அளிக்கும் பொறுப்பை பல்வேறு வணிக வங்கிகளுக்கும் பிரித்த அளிக்கும் பணியை முன்னணி வங்கிகள் (Lead Banks) மேற்கொள்கின்றன. அரசு ஏஜென்ஸிகளால் அடையாளம் காணப்பட்ட பொருளாதார ரீதியாக பின்தங்கிய அனைத்து மக்களுக்கும் கடனளிக்கும் பொழுது அடையாளம் கண்டுணரப்பட்டதாகக் கூறப்படும் அனைவரும் உண்மையிலேயே பொருளாதார ரீதியாகப் பின் தங்கியவர்களாக இருப்பார்கள். எனச் சொல்ல முடியாது. அரசு ஊழியர்கள் அல்லது பிற அரசியல் சார்ந்தவர்களின் வற்புறுத்தல் காரணமாகப் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிறவர்கள் எனக் கூறிச் சேர்க்கப்பட்டவர்களும் கடன் வழங்குவதிலும் தமது முழு கவனத்தையும் செலுத்தவேண்டும்.

இரண்டாவதாக, வணிக வங்கிகள் கடன் பெற்றவர்கள் அனைவரும் தாம் பெற்ற கடனை முறையாகப் பயன்படுத்தவில்லை என்பதைக் கண்டுபிடித்தன. பல

சமயங்களில் விவசாயிகள் தாம் பெற்ற கடனை உற்பத்தி சாராத நோக்கங்களுக்கும் கூட செலவிடுவதைக் கண்கூடாகக் காண முடிகிறது. ஆனால் பெற்ற கடனை எருதுகள் வாங்குதல் போன்றவற்றிற்குச் செலவிட்டதாகக் கூறி அதற்குரிய இரசீதுகளை போலி விற்பனையாளர்களிடம் இருந்து பெற்றுத் தந்து விடுகின்றனர். எனவே, வங்கிகள் கடன்களை அளிக்கும் முன்பு விற்றல் - வாங்கல் நடவடிக்கைகளின் நம்பத்தக்க தன்மையை உணர்ந்து கொள்தல் வேண்டும்.

மூன்றாவதாக, வங்கிக் கடனைப் பெறுபவர்களின் பட்டியலில் இடம்பிடிக்க வேண்டுமெனில், சிறிய மற்றும் படிப்பறிவில்லாத விவசாயிகளுக்கு கடைநிலை அரசு ஊழியர்கள், கால் நடை மருத்துவர்கள் போன்றவர்களின் தயவு வேண்டி உள்ளது. இவர்கள் விவசாயிகளிடம் பணத்தைப் பறித்துக் கொண்டே அவர்களின் பெயரை பட்டியலில் இடம் பெறச் செய்கின்றனர். உள்ளூரில் உள்ள அரசியல் பிரமுகர்கள் மற்றும் பஞ்சாயத்து சமிதி உறுப்பினர்கள் கூட வங்கிக் கடனில் தலையிடுகின்றனர். ஆனால் இறுதியில், அதிகளவு கடன் நிலுவையினால் வங்கிகளே அவதியுற நேரிடுகின்றது. எனவே, வங்கிகள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடனளிப்பதில் ஊக்கம் குறைந்து காணப்படுகின்றன.

ஆயினும் இவை தளர்ச்சியடையாமல் தமது பணியை செவ்வனே நிறைவேற்றி வருகின்றன என்பதை நமக்குப் பின்வரும் புள்ளி விபரங்கள் விளக்குகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1993 - 94 வரை பயன்பெற்ற நபர்களின் எண்ணிக்கை சுமார் 25.38 இலட்சங்களாகும். இத்திட்டத்தின் கீழ் வங்கிகள் ரூ. 1,408 கோடிகள் கடனாக அளித்துள்ளன. மானியமாக ரூ. 757 கோடிகள் அளித்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த 25.38 இலட்சம் பேர்களில் பயனடைந்த தாழ்த்தப் பட்ட மற்றும் மலை ஜாதி வகுப்பைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 8.54 இலட்சங்களாகவும் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் இவ்வங்கிகளால் அளிக்கப்பட்ட கடன் தொகையின் மீட்பு பற்றிய புள்ளி விபரங்களை நாம் பின்வரும் அட்டவணையின் மூலம் அறியலாம்.

**ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கடன் மீட்பு விபரம்**

| ஜுன் கடைசிவரை | தேவை | மீட்பு | தேவை மீதான மீட்பின் சதவிகிதம் |
|---|---|---|---|
| 1991 | 1,272 | 526 | 41.4 |
| 1992 | 1,439 | 457 | 31.8 |
| 1993 | 1,657 | 505 | 30.3 |

ஆண்டு செல்ல கடனின் தேவை அதிகரித்து வருவதும் ஆனால் அத்தேவை மீதான மீட்பின் சதவீதம் குறைந்து வருவதும் நமக்கு மேற்கண்ட அட்டவணை மூலம் தெளிவாகத் தெரிகின்றது. எனவே, வணிக வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் கடனளிப்பதில் ஊக்கம் குறைந்து காணப்படுவதில் தவறொன்றும் இல்லை. ஆயினும், கிராமப் பொருளாதாரத்தின் ஏற்றத் தாழ்வை சரிப்படுத்துவதற்கான ஒரு முன்னோடித் திட்டமாகவும் இத்திட்டம் கருதப்படுவதால், வணிக வங்கிகள் இதிலுள்ள குறைபாடுகளை களைந்து ஊக்கமுடன் செயலாற்றி மீட்பின் சதவீதத்தையும் அதிகரிக்கச் செய்தல் வேண்டும். அப்பொழுதுதான், இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெற்றியை அவை அடையமுடியும்.

**முதனிலை விவசாயம் சார்ந்த கடன் சங்கங்களுக்கு நிதியுதவி**

**(Credit Facilities to Primary Agricultural Credit Societies)**

முதனிலை விவசாயம் சார்ந்த கடன் சங்கங்கள் என்ற ஒரு திட்டத்தை வணிக வங்கிகள் 1970 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தின. தற்பொழுது,சுமார் 3,000 சங்கங்கள் நாட்டின் 13 மாநிலங்களில் உள்ள 142 மாவட்டங்களில் வணிக வங்கிகளின் நிதியுதவியுடன் பணியாற்றி வருகின்றன. வணிக வங்கிகளின் கிளைகளுக்கும் அதன் பணியாளர்களுக்கும் விவசாயிகளுடன் நேரடித் தொடர்பு

இல்லை என்ற ஓர்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இவை விவசாயக் கடன்களை இச்சங்கங்களின் மூலமாக அளிக்கின்றன. ஆனால், இத்திட்டம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. முதலாவதாக, வணிக வங்கிகளும், முதனிலை விவசாயம் சார்ந்த கடன் சங்கங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாத இரண்டு பிரிவுகளைச் சார்ந்தவைகளாகும். எனவே, இவை இரண்டையும் ஆற்றல் மிக்கதாக இணைப்பது இயலாத காரியமாகும். இரண்டாவதாக, மத்திய, மாநிலக் கூட்டுறவு வங்கிகள் முதனிலை விவசாயம் சார்ந்த சங்கங்கள் தம் பிடியில் இருந்து வணிக வங்கிகளின் பிடிக்குச் செல்வதை விரும்பவில்லை. ஆயினும், முதனிலை விவசாயம் சார்ந்த சங்கங்களுக்கும் வணிக வங்கிகளின் கிளைகளுக்கும் இடையே நல்ல ஓர் ஒருங்கிணைப்பிற்கு வாய்ப்புள்ளது. அவற்றிற்கான காரணங்களாவன.

1. முதனிலை விவசாயம் சார்ந்த கடன் சங்கங்களிடம் இருந்து கடனுதவி பெறத் தகுதியுடைய ஆனால் அச்சங்கத்திடம் பண உதவி செய்யத் தேவையான நிதி இல்லாததால் கடன் உதவி பெற முடியாத விவசாயிகளுக்கு வணிக வங்கிகளின் கிராமக் கிளைகள் நிதியுதவி செய்யலாம்.
2. மேலாண்மையின் அறிவுறுத்தலின் பேரில் வணிக வங்கிகளின் கிராமக் கிளைகள், முதனிலை விவசாயம் சார்ந்த சங்கங்களுடைய கணக்குப் புத்தகங்களின் முறையான நிர்வாகம், கணக்கு சார்ந்த நடைமுறை போன்றவற்றிற்கு உதவி புரியலாம்.
3. கடன் பெற விரும்பும் விவசாயிகளுள் தகுதியுடையவர்களைக் கண்டு பிடித்து கடன் அளிக்கவும் பின் அவர்களிடம் இருந்து கடனைத் திரும்பப் பெறவும் வணிக வங்கிகளுக்கு முதனிலை விவசாயம் சார்ந்த கடன் சங்கங்கள் உதவலாம்.

**வணிக வங்கிகளின் மறைமுக நிதியுதவி**

**(Indirect Financing By Commercial Banks)**

வணிக வங்கிகளின் நேரடிக் கடனளிப்பிற்கு குறைந்தவளே வாய்ப்பு இருப்பினும் அவைகளின் மறைமுகக் கடனுக்குரிய வாய்ப்பு கணிசமான அளவிலேயே உள்ளது. உதாரணமாக, விவசாயிகளுக்கு உற்பத்தி சார்ந்த கடனை அளிக்கும் வகையில் இவை, கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி செய்கின்றன. குறிப்பாக இவை, விவசாய விளை பொருட்களின் சந்தையிடுகை மற்றும் நடைமுறைக்கு கடனுதவி செய்யும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பால் பண்ணை, பறவைகள் வளர்ப்பு போன்ற விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளுக்கு கடனுதவி அளிக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடனுதவி செய்கின்றன. இரண்டாவதாக, விவசாய விளை பொருட்களின் உற்பத்தி மற்றும் சந்தையிடுக்கைக்குத் தேவையான உள்ளிடுகைகளின் (Inputs) அளிப்பில் ஈடுபடும் ஏஜென்ஸிகளின் மூலமும் இவை உழவர்களுக்கு மறைமுகக் கடன்களை வழங்குகின்றன. மூன்றாவதாக, வாடகைக் கொள் முதல் முறை அல்லது பிற முறையில் பம்ப் செட்டுகள் மற்றும் பிற விவசாயம் சார்ந்த எந்திரங்களின் அளிப்பில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் மற்றும் ஏஜென்ஸிகளுக்கும் இவை கடனுதவி செய்கின்றன.

நான்காவதாக, உணவு தானியங்களை வாங்குதல், சேமித்து வைத்தல் மற்றும் அவற்றின் பகிர்ந்தளித்தலில் ஈடுபடும் இந்திய உணவுக் கழங்கள், அரசு மற்றும் பிற அமைப்புகளின் நடவடிக்கைகளுக்கும் இவை நிதியுதவி செய்கின்றன.

இறுதியாக, மத்திய நில வள வங்கிகளின் கடன் பத்திரங்களில் முதலீடு செய்வது மட்டுமல்லாது அவைகளுக்கு இவை நிதியுதவி செய்கின்றன. இதனால், நில வள வங்கிகளால், விவசாயிகளுக்கு அவர்களின் நில அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்கத் தேவையான நடுத்தரக் கால மற்றும் நீண்ட காலக்கடன்களை அளிக்க முடிகின்றது.

**வணிக வங்கிகளின் இணை கூட்டான பங்கு**

**(Supplementary Role of Commercial Banks)**

இனி வரக்கூடிய காலங்களில் விவசாயத் துறையின் ஆண்டுக் கடன் தேவையானது ரூ. 15,000 கோடிகளாக உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தேவைகளை நிறைவேற்ற வேண்டுமெனில், கூட்டுறவு அமைப்புக்களிடமே விவசாயக் கடன் தொடர்பான தேவையான பொறுப்பும் கடமைப் பொறுப்பும் தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும். வணிக வங்கிகளிடம் உள்ள விவசாயத்திற்குத் தேவையான வள ஆதாரம் மிகவும் குறைந்தளவினதாக இருக்கின்றது.எனவே, ஒவ்வொரு வணிக வங்கியும் தன்னிடம் உள்ள வள ஆதாரத்தை மிகச்சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

விவசாயத் துறைக்கு நிதியுதவி செய்வதில் உள்ள பிரச்சனை கடனளிக்கத் தேவையான நிதி அளவோடு மட்டும் தொடர்புடையதாக அல்லாமல் வணிக வங்களிடம் உள்ள அதன் பணியாளர்கள் மற்றும் அதன் அமைப்புமுறையோடும் தொடர்புடையதாக உள்ளது. கிராம மக்கட்தொகையில் பெரும்பகுதியினர் சிறு விவசாயிகளாக உள்ளனர். மேரும், நம் நாடு முழுவதிலும் மொத்தம் 5,50,000 கிராமங்கள் உள்ளன. 35,404 கிராம வங்கிக் கிளை அலுவலகங்களோடு இவை அனைத்தையும் சென்று அடைவது என்பது வணிக அலுவலகங்களோடு இவை அனைத்தையும் சென்று அடைவது என்பது வணிக வங்கிகளைப் பொருத்த அளவில் சந்தேகமே இல்லாமல் ஒரு மிகப் பெரிய பணியே ஆகும். வணிக வங்கிகளால் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் கிராமப்புற வங்கிக்கிளைப் பெருக்கத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகும் கூட அல்லது இதைப்போல் இன்னும் 5 அல்லது 10 வருடங்களில் இன்னும் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பிறகும் கூட இவ்வனைத்து கிராமங்களையும் சென்றடைவது என்பது இவைகளுக்கு மிகவும் கடினமான ஓர் செணலாகவே இருக்கும். எனவே விவசாய அபிவிருத்தி, நிதித் தேவையினால் பாதிப்படையாமல் இருக்க வேண்டுமெனில், விவசாய நிதித் திட்டங்களுக்கு புதிய உருவளவுகளை (Dimensions) அளித்தல் அவசியம்.

**விவசாய கிராமப்புற வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள்**

**NEW STRATEGY FOR DEVELOPMENT OF AGRICULTURAL AND RURAL AREAS**

கடந்த காலங்களில் எல்லா ஐந்தாண்டுத் திட்டங்களிலும் விவசாய வளர்ச்சிக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், அரசு போட்ட பல திட்டங்களாலும் விவசாயகள் குறிப்பாக சிறு விவசாயிகள் திருப்திகரமான அளவில் பயனடையவில்லை என்பதை மூன்றாவது திட்டத்தின் இறுதியில் அரசு உணர்ந்தது.

**இந்திய விவசாயத்தின் தேக்க நிலைக்குக் காரணம்**

**(Factors Responsible for the Stagnation of the Indian Agriculture)**

அமெரிக்காவின் போர்டு நிறுவனம் (Board Foundation) இந்நிலைமை பற்றி ஆராய விவசாய உற்பத்திக் குழு (Agriculture Production Team) என்ற ஒரு குழுவை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது. இக்குழு நமது விவசாயத்தின் தேக்க நிலைமைக்கு (Stagnated Stage) காரணங்களாகப் பின்வருவனவற்றைக் கண்டு பிடித்துச் சொல்லியது.

1. விவசாயத்தின் நிதிவசதி போதுமானதாக இல்லாததோடு நிலங்களும் ஒரே இடத்தில் இல்லாமல் பரவிக் கிடக்கின்றன. எனவே, உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்கு வளர்ச்சியடையவில்லை.

2. திட்டக் கமிஷன் நிர்ணயித்த இலக்குகளை எட்டிப்பிடிக்கும் வகையில் மாநில அரசுகளின் திட்டங்கள் அமையவில்லை.

3. அகில இந்திய அளவில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான இயக்கம் ஏதும் செயல்படவில்லை.

4. போதுமான அளவு உரம், பூச்சிமருந்து முதலான உற்பத்திச் சாதனங்கள் கிடைக்கவில்லை.

5. நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசுகள் மந்தமாகச் செயல்படுகின்றன.

6. தற்சமயம் இருக்கக் கூடிய நீர்ப்பாசன வசதிகளும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

7. கிராமப்புறங்களில் மின் இணைப்பு தருவதில் (Rural Electrification) மின்சார வாரியங்கள் போதுமான அளவு ஒத்துழைக்கவில்லை.

8. நிலச் சீர்திருத்தத் திட்டங்களை அரை மனதுடன் மாநில அரசுகள் நிறைவேற்றி வருகின்றன.

9. விவசாய விளை பொருள்களைக் கொண்டு இயங்கும் தொழிற்சாலைகள் மூலதனப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளன.

10. விவசாயிகளும் இன்னமும் பழைமை விரும்பிகளாகவே உள்ளனர். புதிய முறைகளைக் கையாளுவதில் ஆர்வம் காட்டுவதில்லை.

11. மாநில அரசுகளின் விவசாய இலாக்காக்கள் பழைமை விரும்பிகளாகவும், கடுமையான நிர்வாக முறையையே இன்னமும் விடாமல் பிடித்துக் கொண்டு விவசாய வளர்ச்சியைக் கெடுத்து வருகின்றன.

இக்குறைபாடுபகளை சுட்டிக் காட்டிய போர்டு நிறுவனத்தின் விவசாய வளர்ச்சிக்குக் குழு உடனடியாகப் போர்க் கால நடவடிக்கைகள் போன்று விவசாய உற்பத்திக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், விபரீதமான விளைவுகள் ஏற்படும் என்று எச்சரித்தது. மேலும், இக்குழு உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான பத்து அம்ச முன்னோடித் திட்டங்களையும் ( Ten Point Pliot Programmers to increase Food Production) மேற்கொள்ள வேண்டும் என்று சிபாரிசு செய்தது. அவற்றுள் முக்கியமான இரண்டு திட்டங்கள் பின்வருமாறு.

1. சிறிய விவசாயிகளின் வளர்ச்சி ஏஜென்ஸி (Small Farmers Development Agency).

2. சுமாரான விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் வளர்ச்சி ஏஜென்ஸி (Marginal Farmers and Agriculture Labourers Development Agency).

**1. சிறு விவசாயிகள் வளர்ச்சி ஏஜென்ஸி**
**(Small Farmers Development Agency)**

1996 ஆம் ஆண்டிலேயே அகில இந்திய கிராமப்புற விவசாய மதிப்பீட்டுக் கமிட்டி (All India Rural Credit Review Committee) இத்தகைய ஏஜென்ஸி ஒன்றை நிறுவ வேண்டியதன் அவசியம் பற்றி வலியுறுத்தியது. மேலும், கிராமப்புற ஜனத் தொகையில் மிகப் பெரும்பான்மையராக இருக்கும் சிறு விவசாயிகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு, வளர்ச்சித் திட்டங்களின் பலன்கள் அவர்களுக்குக் கிடைக்காமல் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்கும் நிலைமை தொடர்ந்தால் கிராமப்புற விவசாயிகள் கொதிப்படைந்து விடுவார்கள், அமைதியான வாழ்க்கை கெட்டு பதட்ட நிலைமையும், சமூகப் பொருளாதார வாழ்க்கையும் பாதிக்கப்பட்டு விடும் என்பதையும் எச்சரித்தது. எனவே, இத்தகைய ஏஜென்ஸி போன்ற முன்னோடித் திட்டங்களின் வடிவில் (In the form of Polit Project) சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியது. மேலும், போர்டு நிறுவனமும் இதே கருத்தை வலியுறுத்தியது.

இதன் அடிப்படையில், 1971 ஆம் ஆண்டு முதல் சிறு விவசாயிகள் வளர்ச்சி ஏஜென்ஸி செயல்படத் தொடங்கியது. இதுவரையில் இதன் பணிகளால் 188 பஞ்சாயத்து யூனியன்கள் பயனடைந்துள்ளன.

**பணிகள் (Functions)**

இதன் முக்கியமான பணி சிறு விவசாயிகளைக் கண்டுபிடித்து (Identify) இவர்களது மேம்பாட்டிற்கு வழி வகுப்பதேயாகும். இதன் மூலம் இவர்கள்

விவசாயம் செழிப்புற்று, வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வழிவகுப்பதேயாகும். இதன் முக்கியமான பணிகள் பின்வருமாறு.

1. சிறு விவசாயிகள் பிரச்சனைகளை ஆராய்ந்து, மாவட்ட அளவில் அவர்களது முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தீட்டுதல், அவற்றை ஏற்ற நிறுவனங்களின் மூலம் நிறைவேற்றல்.

2. அவர்களது விவசாயத்திற்குத் தேவையான உரம், பூச்சிமருந்து போன்றவை (Inputs) கிடைக்க ஏற்பாடு செய்தல்.

3. அவர்களது நிலங்களுக்குப் பாசன வசதிக்கு ஏற்பாடு செய்தல்.

4. கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும் மற்ற நிறுவனங்களிடமிருந்தும் கிணறு வெட்டக் கடன் பெற ஏற்பாடு செய்து தருதல்.

5. போதுமான அளவில் விவசாயத்தை முறைப்படி நடத்த தரமான விதை, உரம் போன்றவற்றை உரிய காலங்களில் கிடைக்க வழி வகுத்தல்.

6. விவசாயிகளின் பொருள்களை ஏற்றிச் செல்ல போக்குவரத்து வசதி (Transportation Facilities), சேமிப்பு வசதி (Storage) ஆகியவை செய்து தந்து அவர்கள் தமது விளைபொருள்களை இலாபகரமாகச் சந்தையில் விற்க ஏற்பாடு செய்தல்.

இவை தவிர, வேறுபல நோக்கங்களும் உண்டு. இதன் பணிகளில் முதன்மை ஆனது சிக்கனமாகவும். இலாபகரமாகவும் விவசாயிகளுக்கு நிதிவசதி செய்து தருவது எனலாம். மொத்தக் கடனில் 25% மானியமாக கூட்டறவு வங்கிகளுக்கு அளிக்கின்றது. மேலும், பல வழிகளில் மானியம் வழங்குவதோடு 6 சதவீதத்திற்கும் 3சதவீதத்திற்கும் முதனிலைக் கூட்டுறவு சங்கங்களுக்குக் கடன் வழங்குகின்றது.

**2. சுமாரான விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் வளர்ச்சி ஏஜென்ஸி (Marginal Farmers and Agriculture Labourers Development Agency)**

இந்நிறுவனமும், சிறு விவசாயிகள் வளர்ச்சி ஏஜென்ஸி தொடங்கப்பட்ட போதே தொடங்கப்பட்டதாகும். இதன் முக்கிய நோக்கம் சிறிய நிலங்களை உடைய, சுமாரான விவசாயிகள் தமது நிலத்தை பழத் தோட்டம், மாட்டுப் பண்ணை (Animal Husbandry) முதலியன நிறுவுவதன் மூலம், இவர்களது வருமானத்தை மேலும் பெருக்க வழி வகுக்கலாம். மேலும், கிராமப்புறங்களில் அதிகளவில் இவை வேலை வாய்ப்பையும் (Employment Opportunities) உருவாக்க வல்லவை ஆகும்.

**முக்கியமான பணிகள் (Principal Functions of MFALDA)**

1. தகுதியான விவசாயிகளை அடையாளம் கண்டு அவர்களுக்குத் தேவையான திட்டங்களை வகுத்தல்.

2. அவர்களது பிரச்சனைகளை ஆராய்தல்.

3. அவர்களுக்கு இலாபகரமான வேலை வாய்ப்புக்களை (Gainful Employment) உருவாக்கித் தரும் வகையில் திட்டமிடுதல்.

4. கிராமப்புறத் தொழில்களை (Rural Industries) வளர்த்தல்.

5. போதுமான அளவில் நிறுவனங்கள் வாயிலாகத் தீட்டப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துதல்.

6. விளைபொருள்கள் உற்பத்தி, பதனிடுதல் சேமிப்பு விற்பனை ஆகியவற்றுக்குப் பொதுவான வசதிகளை உருவாக்குதல்.

7. அவ்வப்போது திட்டங்களின் பயன்களை மதிப்பீடு செய்தல்.

எனினும் இந்நிறுவனம் நேரடியாகத் திட்டங்களில் பங்கு கொள்பவர்களுக்கு உதவி செய்வரில்லை. மறைமுகமாகவே கூட்டுறவுச்சங்கம். மற்ற நிறுவனங்கள் மூலம் இத்திட்டங்களை செயல்படுத்த உதவிபுரிந்து வருகிறது. ஆயினும், அரசின் முன் அனுமதி பெற்று சில திட்டங்களை நேரடியாகவே செயல்படுத்தவும் இயலும். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுதல் முதலிய பணிகள் இதில் அடங்கும்.

**இந்நிறுவனங்களின் பணிகள் பற்றிய மதிப்பீடு**
**(Assessment of SFDA and MFALDA)**

இந்த இரு நிறுவனங்களையும் இரட்டை நிறுவனங்கள் (Twin Institutions) எனலாம். இவை, ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் (Integrated Rural Development Programme) ஒரு பகுதியாக மாவட்டக் கிராம வளர்ச்சி ஏஜென்ஸி (District Kural Development Agency) என்று மறு பெயரிடப்பட்டு உள்ளன. எனினும், இவற்றின் பணிகள் பற்றிய பல குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக, விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவதற்கு (Income Generation) இந்நிறுவனங்கள் தவறிவிட்டன என்றும் குற்றம் சாட்டப்படுகின்றது. எனினும், இவை நிதி உதவி செய்வதில் மட்டுமே தமது இலக்கை (Target) எட்டிப்பிடித்துள்ளன. சமீபத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விபரப்படி 35% சிறு விவசாயிகள் இதன் நிதி வசதியைப் பெற்றும் தமது வருமானத்தைப் பெருக்க இயலாத நிலையிலேயே இன்னும் உள்ளனர் என்று தெரிகின்றது.

மேலும், அண்மையில் **டாக்டர் குல்தீப் மாத்தூர் (Dr. Kildeep Mathur)** என்பவரின் தலைமையில் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழு பம்புசெட்டுகள் அமைப்பதில் நடத்தப்படும் ஊழல்களைச் சுட்டிக்காட்டி நேரடியாகப் பணம் வழங்குவதில் பல முறைகேடுகளும், ஊழல்களும் நடத்து கொண்டிருக்கின்றன. என்றும் இதனால் ஏற்படும் அதிகப்படிச் செலவுகள் கடைசியாக விவசாயிகளின் தலைமேலேயே விழுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளது. இது உண்மை என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இரண்டு ஏக்கருக்கும் குறைவான நிலமுள்ள விவசாயிகள் மட்டும் 20 மில்லியன் பேர் நமது நாட்டில் உள்ளனர். ஒரு வருடத்திற்கு ஒரு மில்லியன் விவசாயிகளுக்குக் கூட இந்நிறுவனத்தால் போதுமான வசதி செய்து தர இயலாது. எனவே, விவசாய தேசிய கமிஷன் (National Commission for Agriculture) இவ்விரு நிறுவனங்களும் வட்டார வாரியாக வளர்ச்சிப் பணியை மேற்கொள்ள வேண்டும். என்றும் இவ்விரண்டு நிறுவனங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை நீக்கி விடவேண்டும் என்றும் சிபாரிசு செய்துள்ளது. இந்தச் சிபாரிசுகளை மத்திய அரசும் ஏற்றுக் கொண்டு இவ்விரண்டு நிறுவனங்களையும் ஒன்றாக்கி விட்டது.

**ஐ. ஆர். டி. பி. (IRDP) Integrated Rural Development Programme**

இதை வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் கிராமப்புற ஏழைகள் மேம்பாட்டுத் திட்டம் எனலாம். இது அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துக்காகவே தொடங்கப்பட்டது.

வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்பவர்கள் யார்? யார்? வருட வருமானம் 11,000 - ரூபாய்க்குக் கீழ் சம்பாதிப்பவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்களுக்கு, அதிகபட்சம் ரூ.8,500- வரை கடன்கள் வழங்கப்படுகின்றன.

தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர், ஊனமுற்றவர்கள் ஆகியோரும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், நில உச்சவரம்பில் பாதிக்கப் பட்டோர் ஆகியோருக்கும் IRDP கடன் பெறத் தகுதிகள் உண்டு.

இத்திட்டத்தில் குறைந்தபட்சம் 40% ஆவது பெண்களுக்கு கடன் வழங்கப்படுதல் வேண்டும். 3 சதவீதம் உடல் ஊன முற்றவர்களுக்குக் கடன் வழங்கப்படுதல் வேண்டும்.

ஐ. ஆர். டி. பி. யின் மூலம் வழங்கப்படும் கடன்கள் மாடுகள் ஆடுகள் வாங்க, கறவை மாடுகள், மாட்டு வண்டிகள் வாங்க, சாண எரிவாய்வுத் திட்டத்தின் கீழ் அடுப்பு அமைக்க, கிணறு வெட்ட, கிணறுகளை ஆழப்படுத்த, நிலங்களைச்

சீர்திருத்த, குளம் அமைக்க, மீன் பிடிக்க, மீன் வலைகள் வாங்க, டீக்கடை, இட்லிக்கடை, பலகாரக்கடை, சைக்கிள் கடை, ரேடியோ ரிப்பேர் கடைகள் வைக்க, காய்கறிகள், பழங்கள், மீன்கள், கட்பீஸ் துணிகள் விற்க, என ஏராளமான வழிகளில் IRDP கடன்கள் வழங்கப் படுகின்றன.

IRDP திட்டம் 1981 ஆம் வருடம் அக்டோபர் 2 ஆம் தேதி முதல் இந்தியா முழுவதும் சுமார் 5011 ஒன்றியங்களில் அமல்படுத்தப்பட்டது. இது முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் ஆட்சியில் தீட்டப்பட்ட 20 அம்சத் திட்டத்தின் கீழ் செயல்படுகிறது. IRDP கடன்களுக்கான மனுக்கள் Block Development அலுவலகளில் தரப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்கு 25 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு 50 சதவிகித மான்யமும், பெண்களுக்கு 33.33 சதவிகித மான்யமும், அதிகபட்ச மானியமாக ரூ .5, 000- மும் வழங்கப்படுகிறது. அதிகபட்ச வட்டி விகிதம் 12.5 சதவிகிதம். IRDP திட்டங்களைத் தீட்டி மனுக்கள் பெற்றுக் கடன்தாரர்களை தேர்வு செய்து கடன் வழங்கும் வேலைகளை DRDA அமைப்பு செய்கிறது.

**"டுவாக்ரா" (DWCRA) Development of Women and Children in Rural Area)**

ஐ. ஆர். டி.பி. திட்டத்தின் கீழ் செயல்படும் இத்திட்டமானது தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் மட்டுமே செயல்படுகிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் கிராமங்களிலுள்ள குடும்பப் பெண்களையும், குழந்தைகளையும் மேம்படுத்தும் திட்டமாகும்.

அந்தந்த வட்டாரங்களில் மக்கள் செய்யும் தொழில்களுள் தேர்ந்தெடுத்த தொழில்களுக்கான தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல். வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழும் பெண்களைத் தேர்ந்தெடுத்துக் குழுக்களாகப் பிரித்து பயிற்சி அளித்துக் கடன்கள் வழங்கப்படுகின்றன. மானியம் 50% ஆகும்.

டெய்லரிங், சாம்பார்ப் பொடி தயாரித்தல், செயற்கை வைரம் பட்டை தீட்டுதல், கூடைகள் பின்னுதல், எம்ப்ராய்டரி போன்ற தொழில்களில் பயிற்சி அளித்துச் சயவேலை செய்வதற்கான உதவிகள் செய்யப்படும்.

**பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் - பி . எம். ஆர். ஓய்**

**(Prime Minister's Rojgar Yojana)**

1993 ஆம் வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம், நகர்ப்புற படித்த இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டமாகும். வயது வரம்பு : 18 முதல் 35 வரையுள்ள வயதுக்குள் இருத்தல் வேண்டும். வருமானம் : ரூ. 24,000/- த்திற்கு மேல் வருட வருமானம் இருக்கக்கூடாது. குறிப்பிட்ட முகவரியில் கடந்த 3 வருடங்களாக வசிப்பவராய் இருக்க வேண்டும்.

SSLC/ITI தொழிற்கல்வி பயின்றிருக்க வேண்டும். குறைந்த பட்ச கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு. அரசாங்கப் பயிற்சி மையங்களில் ஆறுமாதங்களுக்கும் குறையாமல் பயிற்சி பெற்ற வர்களும் இவ்வகைக் கடன்கள் பெறத் தகுதியுடையவர்களாவர்.

அதிகபட்சம் இலட்சம் ரூபாய் வரை கடன்கள் வழங்கப் படுகின்றன. எந்தவிதமான பிணையத் தொகையும் (Security or Guarantee) கேட்கப்படுவதில்லை. 15% வரை மானியம் வழங்கப்படுகிறது. அதிகபட்ச மானியம் ரூ. 1500/-

5% மார்ஜின் கட்ட வேண்டும். ரூ.50,000த்திற்கும் மேற்பட்ட கடன்களுக்கு அசையாச் சொத்துகளை Fixed Assets (Land & Machines) காட்ட வேண்டும். கடன் மனுக்கள் மாவட்டத் தொழில் மையங்கள் (DIC) மற்றும் அரசு நிதி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

சரியான நபர்கள் கண்டறியப்பட்டு, அவர் குறிப்பிடும் வங்கிகளுக்கு மனுக்கள் அனுப்பப்படுகின்றன.

**நலிவடைந்த பிரிவினர் (Weaker Section Loans)**

முன்னுரிமைப் பிரிவின்கீழ் வரும் நலிவடைந்த பிரிவினர்களான இந்த நலிவடைந்த (Weaker Section) யார் என்று அறிவோம்.

1. சிறு விவசாயிகள், குத்தகைதாரர்கள், விவசாயக் கூலிகள், நிலமற்ற விவசாயிகள் ஆகியோர் (Marginal and Small Farmers, Land Labourers, Tenant Cultivators)
2. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர் (SC/ST)
3. IRDP திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர்.
4. கிராமப்புறக் குடிசைத் தொழில் மற்றும் கைவினைஞர்கள் (Village Cottage Industries and Artisans)
5. செபப் (SEPUP) மற்றும் சுமி (SUME) திட்டத்தின் கீழ் கடன் பெறுவோர்.
6. மேலே கண்ட எந்தப் பிரிவின் கீழும் வராத DRI திட்டத்தில் கடன் பெற்றவர்கள்.
7. கிராமப்புறங்களில் ரூ.11,000மும் நகர்ப்புறங்களில் ரூ. 11, 800க்கும் மேற்படாத வருட வருமானம் உள்ளவர்கள்.
8. பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்கள். இவர்களே நலிவடைந்த பிரிவினர்களாவார்கள் .

**சிறு சாலைப் போக்குவரத்து வாகனங்கள் வைத்திருப்போர்**
**(Small Road Transport Operators)**

வேன்கள், டெம்போக்கள், டிராக்டர் டிரெய்லர்கள் ஆகிய வாகனங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

**கடன் வழங்குவதற்கான வழிமுறைகளை கோட்டுபாடுகளை விவரி.**

கடன் வழங்குவதற்குப் பின்வரும் வழிமுறைகளை வங்கிகள் பின்பற்றுகின்றன.

1. பாதுகாப்பு கடன் அளிப்புப் பணியின் முதலாவது நெறிமுறை பாதுகாப்பு ஆகும். கடன்களைப் பாதுகாப்பாக அளிப்பதைப் பொறுத்தே வங்கியின் வாழ்வு அமைகின்றது. வங்கிகள், கடன் வழங்கும் போது கடன் முழுவதும் பத்திரமாகத் திருப்பிச் செலுத்தப்படும் என்ற நம்பிக்கையிலேயே வழங்குகின்றன. வங்கியர் கடன் வழங்கும் போது இலாபத்தை மட்டும் கருதாமல் பாதுகாப்பையும் கருத்தில் கொள்தல் வேண்டும். வங்கி, திடமான நிலையில் என்றும் இருக்க வேண்டுமெனில் வாடிக்கையாளர்களுக்கு அது வழங்கும் கடன்கள் பாதுகாப்பானவைகளாக இருத்தல் வேண்டும்.
2. ரொக்கத் தன்மை வங்கிகள் கொடுக்கும் கடன்கள் குறுகியகால வகையில் அமைய வேண்டும். அவை நீண்டகால வகையில் அமைதல் கூடாது. இல்லாவிடில் அவை ரொக்கத் தன்மை குறைந்தவையாக இருக்கும். மேலும், நெருக்கடி நிலையில் கடன்களைத் திரும்பப் பெற்று ரொக்கமாக்குதல் எளிதல்ல. வணிகத் தொழில் நிலையங்களுடைய சூழல் மூலதனத்தில் ஒரு பகுதியைக் கடனாக அளித்தல் உகந்தது. இதனால், வங்கியின் ரொக்கத் தன்மை பாதுகாக்கப்படும்.
3. நோக்கம் வங்கிகள் கடன் வழங்கும் போது வாடிக்கையாளர் அக்கடனை எந்த நோக்கத்திற்காகப் பெறுகின்றனர் என்பதை அறிய வேண்டும். உற்பத்தி நோக்கமுடைய, காரணங்களுக்கு வங்கியர் தாராளமாகக் கடன் வழங்கலாம். கடன் பெறும் நோக்கம் செம்மையான வணிகத்திற்கு அடிகோலினாலும் நாட்டின் நலனுக்கு வித்திட்டாலும் வங்கிகள் தாராளமாகக் கடன் வழங்கலாம்.
4. இலாபத் தன்மை வணிக வங்கிகள் பிற வியாபார நிறுவனங்களைப் போலவே இலாப நோக்குடன் செயல்படுகின்றன. ஆயினும், வணிக வங்கிகள் கடன் வழங்கும் போது இலாபத்தைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்ற

நோக்கத்தில் திரும்பப் பெற முடியாத கடன்களை அளிக்கக்கூடாது, அவை பாதுகாப்பையும் கருத்தில் கொண்டே கடன்களை அளித்தல் வேண்டும்.

5. பிணையம் கடனுக்கு எதிராக அளிக்கப்படும் பிணையங்கள் பல வகைப்பட்டன. கட்டடத்திலிருந்து கட்டித் தங்கம் வரையினதாக அவை அமையலாம். பிணையங்கள் எதுவாக இருப்பினும் அவை போதுமானவைகளாக, எளிதில் விற்கக் கூடியவைகளாக, வில்லங்கமற்றதாக, எளிதில் கையாளக் கூடியவைகளாக இருத்தல் வேண்டும். வங்கிகள் பொதுவாக கடன் பெறுவோர் அளிக்கும் பினைணயத்தைப் பொறுத்தே கடன் வழங்குகின்றன.

6. பரவலாகக் கடன் வழங்குதல் வங்கிகள் கடன் பணத்தை ஒரு தொழிலிற்கோ அல்லது ஒரே இனத்தைச் சார்ந்த தொழில்களுக்கோ வழங்கக்கூடாது. அவ்வாறு, வழங்குவது எல்லா முட்டைகளையும் ஒரே கூடையில் வைத்துப் பாதுகாப்பது போன்றதாகிவிடும். எனவே, வங்கியர், பல்வேறு தொழில்களுக்கும் பல்வேறு பிணையங்களின் அடிப்படையில் கடன் வழங்க வேண்டும்.

7. தேசிய நலன் வணிக வங்கிகள் நாட்டு நலனைக் கருத்தில் கொண்டு பொருளாதார வளர்ச்சிக்கேற்ற வகையில் கடன் வழங்க வேண்டும். முன்னுரிமைத் துறைகளும், நலிவுற்ற பிரிவினருக்கும், பின்தங்கிய பகுதிகளுக்கும் அதிகக் கடன் வழங்க வேண்டும். அப்பொழுதுதான், தேசிய நலன் பாதுகாக்கப்படும்.

8. பாதுகாப்பு எச்ச ஓரம் வங்கி கடன் பெறும் வீதத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடே அதனுடயை மொத்த இலாபமாகும். எனவே. போதுமான எச்ச ஓரத்தை இலாபமாகத்தர இயலாத கடனைப் பற்றி வங்கியர் எண்ணிப் பார்ப்பதில்லை. ஆனால், அதில் கூடும் விதிகளை விதிக்க முடியாது. கடனுக்காக பிணையங்களைப் பெறும்போது அதற்கு சந்தை மதிப்பு இருக்கின்றதா ? சட்ட ரீதியாக உரிமை இருக்கின்றதா ? என்பதைக் கவனிக்க வேண்டும்.

9. கடனைத் திருப்பி அளித்தல் கடன் பெறுவோர் பெற்ற கடனை வட்டியுடன் திருப்பி அளிக்க முடியுமா என்பதை வங்கியர் கவனிக்க வேண்டும். எந்த ஆதாரத்தின் மூலமாகக் கடனைத் திருப்பி அளிக்க முடியும் என்பதையும் கவனிக்க வேண்டும்.

10. காலவரைச் சட்டம் கடன்கள், பொதுவாகத் திருப்பிச் செலுத்துமாறு கேட்கக்கூடிய கடன்கள், திருப்பிச் செலுத்துமாறு கேட்கத் தேவையற்ற கடன்கள் என்ற வகையில் அமைகின்றன. ஈடுகளைப் பிணையமாக வைத்து, கடனைக் கேட்கும் பொழுது செலுத்துவதாக கடனாளி உறுதிமொழி அளித்திருந்தால் அவை திருப்பிக் கேட்க வேண்டியக கடன்களாகும். வெண்கடன். பத்திரங்கள் தாங்கியுள்ள கடன்கள், கடன் கொடுத்த தேதியிலிருந்தே அமுலுக்கு வருகின்றன. முதல் வகையான கடனில் கடனைத் திருப்பிச் செலுத்துமாறு கடன் தந்தவர் கேட்கும் வரை திருப்பி அளிக்கப்படுவதில்லை. ஆகவே, காலவரைச் சட்டத்தின் அடிப்படையிலேயே வங்கிகள் கடன் அளிக்க வேண்டும்.

மேற்கூறிய யாவும் கடன் வழங்குவதற்குரிய வழிகாட்டும் நெறிமுறைகள் ஆகும். இந்தியாவில் 1970ம் ஆண்டு நிறுவனச் சட்டம் மத்திய அரசு விதிக்கும் வழிமுறைகளுக்கேற்ப வணிக வங்கிகள் கடன் வழங்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றன. எனவே, அரசின் கொள்கைகளைப் பொறுத்து கடன் வழங்கும் வழிமுறைகள் அமைந்துள்ளன.

**கடன் அளவை எந்த சூழ்நிலையில் அனுமதிக்கலாம் ?**

கடன் அளவுகளை அனுமதிக்கின்ற பொழுது வங்கியர் பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. வாடிக்கையாளருடைய தொழிலின் பல்வேறு அம்சங்களையும் கவனத்தில் கொண்டு உடன் அளவானது வங்கியரால் அனுமதிக்கப்பட வேண்டும். கடன் அளவை பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கவனமாக நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

2. வங்கியர் வாடிக்கையாளரின் கடன் தீர்வுத்திறன் பற்றிய தகவல்களைப் பல்வேறு ஆதாரங்களிலிருந்து திரட்டிக் கொள்ள வேண்டும். கடன் பெறும்

நபர்களுக்கான கடன் அளவு அவர்களுடைய நிதி வலுவுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

3. மாற்று உண்டியல் எழுதப் பெறுபவர் பற்றியும் வங்கியர் தகவல்களைத் திரட்டிக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட நபர் மீது எழுதப்பட்ட மாற்று உண்டியல் தொகையும் நிலுவலையில் உள்ள உண்டியல் தொகையும் பாதுகாப்பு அளவிற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
4. கடன் அளவை நிர்ணயிக்கின்ற பொழுது தொழிலின் அளவை க் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது ஓர் ஆண்டின் மொத்த விற்றுமுதலைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். உயர்ந்த அளவு விற்பனை இருந்தால் அல்லது பல மையங்களுக்கும் சரக்குகள் அனுப்பட்டிருந்தால் உயர் கடன் வரம்பை நிர்ணயிக்கலாம்.
5. வங்கியர் வாடிக்கையாளரின் தொழிலின் மீது அரசு தடை விதித்துள்ளதா ? அல்லது குறுக்கீடுகள் உள்ளதா ? என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
6. ஒரு மாற்று உண்டியலின் மேலெழுதப் பெறுபவருக்கு கடன் அளவு அனுமதிக்கின்றபொழுது வங்கியர் அந்நபரின் கடன் தீர்வுத் திறனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
7. வங்கியர் சீராகவும் கவனமாகவும் பல்வேறு கடன் வசதிகளுக்குரிய அளவை நிர்ணயிக்க வேண்டும். புதிய வாடிக்கையாளர்களாயின், அவர்களுக்கு ஆவணத்தின் பேரில் கடன் அனுமதிக்க வேண்டும். பிறகு, அவர்களின் நடவடிக்கையைப் பொறுத்து கடனின் அளவை அனுமதிக்க வேண்டும். ஆரம்பத்தில், குறைந்த கடன் அளவை அனுமதித்து, பிறகு படிப்படியாகக் கடன் அளவை உயர்த்த வேண்டும்.

**வினாக்கள்**

**1. கிராம புற வங்கியில் பற்றி வரைக?**
**2. விவசாய வங்கிகளும் வளர்ச்சிகள் பற்றி கூறுக?**
**3. கிராமபுற நிதி உதவிக்கு தேவையான காரணங்கள் யாவை?**
**4. கிராமப்புறக் கடன் தேவையின் மதிப்பீடுகளை எவ்வாறு கணக்கிடுவது?**
**5. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டமும் வணிக வங்கிகளும் ?**
**6. முதனிலை விவசாயம் சார்ந்த கடன் சங்கங்களுக்கு நிதியுதவி?**
**7. விவசாய கிராமப்புற வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள் யாவை?**
**8. "டுவாக்ரா" விளக்குக?**
**9. பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் - பி . எம். ஆர். ஓய் விளக்குக?**
**10.கடன் வழங்குவதற்கான வழிமுறைகளை கோட்டுபாடுகளை விவரி. ?**
**11.கடன் அளவை எந்த சூழ்நிலையில் அனுமதிக்கலாம் ?**

## குறிப்பு

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

## அலகு- IV

கிராமப்புற வளர்ச்சிக்கு திட்டமிடுதல் முக்கியமானதாகும். அதை விட திட்டத்தை நடைமுறைப்படுத்துவது, நடைமுறைப்படுத்தும் போது அதன் பண சம்மந்தப்பட்ட எல்லா துறையின் திட்டமிட வேண்டும். இதில் அரசாங்க துறை மற்றும் அரசாங்க அல்லாத துறை சம்மந்தப்பட்டு உள்ளது.

**நோக்கங்கள்:**

- திட்டமிடுதலில் பலதரப்பட்ட கோணங்களை காண்க வேண்டும்.
- திட்டமிடுதலில் பலதரப்பட்ட வழிகளை அறிய வேண்டும்.
- திட்டமிடுதலில் எவ்வாறு மதிப்பீடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் போது அதை நடைமுறைப்படுத்த முடியும் என்று அறிய வேண்டும்.
- திட்டமிடுதலில் எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விவரிக்க வேண்டும்.
- திட்டமிடுதலை புரிந்து அதை மதிப்பீடு செய்ய வேண்டும்.

**1. திட்டமிடுதலில் கோணங்கள்:**

திட்டமிடுதலின் போது நாம் பலதரப்பட்ட கோணங்களை நன்கு ஆராய்ந்து, அதை கண்டுக் கொள்ள வேண்டும். அவை

**a. நடத்தை கூட்டம்:-**

இது தான் முதல் நோக்கம் இந்த நடத்தை நோக்கத்தில் பல வகைகளை நாம் காண்போம்.

1. பொருள் தயாரிக்கும் பகுதி.
2. பாதுகாப்பான உட்கட்டமைப்பு பகுதி.
3. சந்தையியல் உட்கட்டமைப்பு.
4. பொது சேவை கட்டமைப்பு பகுதி ஆகும்.

**2. தனிப்பட்ட மற்றும் சார்ந்த உடமம்.**

இந்த திட்டமிடுதலில், தனிப்பட்ட மற்றும் சார்ந்த நிகழ்வுகள் விரிவாக விளக்கப்படுகிறது. இதில் ஒரு திட்டத்திற்கும் மற்றும் வேறு திட்டத்திற்கும் ஏதாவது வேறுபாடு இருந்தால் அதை கண்காணிக்க வேண்டும்.

வெளிப்படை ஆற்றல் நன்மையடையும் கூட்டம்:

வெளிபடையும் ஆற்றல் நன்மையடையும் கூட்டம் என்பது பொது பணி பகுதி, குறிப்பிட்ட நேரத்தின் பகுதி மற்றும் வெளிப்படை ஆற்றல் பகுதி ஆகியவற்றை நன்கு விளக்கும் கூட்டமாகும்.

**மூலதனத்தின் பங்கு**

மூலதன அமைப்பில் தனியார் பங்கு திட்டமிடுதல் எவ்வாறு என்று நாம் அறிய வேண்டும். ஆதலால் மூலதன அமைப்பு முக்கியமான கோணமாக கருதப்படுகிறது. இந்த மூலதன அமைப்பின் பங்கு நன்மையடையும் கூட்டத்தில் முக்கிய பகுதியாகும்.

**பணத்தின் முக்கியத்துவம்:-**

பணத்தின் முக்கியத்துவம் திட்டமிடுதலில் முக்கிய பங்காகும். இவை பங்கு முதலீட்டாளரைப் பொறுத்து அமைந்து உள்ளது. இதில் ஒரு சில பங்கு முதலீட்டாளர்கள் நிறைய எதிர்பார்ப்புகளில் முதலீடு செய்வார்கள், சிலர் பங்கு வளர்ச்சியை சார்ந்து முதலீடு செய்வார்கள்.

**திட்டம் கண்டறிதல்**

திட்டம் கண்டறிதல் என்பது சிறந்த தொழில் வாய்ப்புகளை அதாவது உயர்ந்த விளைவைத் தொழில் முயல்வோருக்கு அளிக்கும் தொழிலைக்

கண்டறிவது ஆகும். இதற்காக பல்வேறு புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றன.

**திட்டம் கண்டறிவதற்கான ஆதாரங்கள் (Sources of Project) :**

1. திட்டம் கண்டறிவதற்கான முக்கிய செயல் உற்று நோக்குதல் (Observation) ஆகும். தொடர்ந்து ஒரு நடவடிக்கையை முடிக்கின்றது. உற்றுநோக்குதல் அவர் தொடர்ந்து பணியாற்றும் போது மேற்கொள்ளப்படுகிறது. உதாரணமாக ஒரு பொருளுக்கான தேவை மற்றும் அளிப்பை கடந்த பல ஆண்டுகாளக கவனித்து அதன்மூலம் வருங்கால தேவையை மதிப்பிட முடிகிறது.

2. எந்தத் தொழிலுக்கும் நுகர்வோரே அரசர். நுகர்வோர்தான் ஒரு தொழில் தொடர்ந்து நடக்க வழிவகுக்கின்றார். எனவே தொழில் முனைவோர் பண்டங்களின் சந்தை, நுகர்வோர் உரிமைகள் போன்றவற்றை ஒரு தொழிலைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு ஆய்வு செய்வது அவசியமாகும்.

3. அரசு சிறிய தொழில் முயல்வோருக்கு பல பொருட்களின் உற்பத்தியை ஒதுக்கியுள்ளது. இது வாய்ப்புடைய தொழில் கருத்துக்கள் கிடைப்பதை சுட்டிக் காட்டுகின்றது.

4. மத்திய மற்றும் மாநில அரசுகள், நிதி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் தொழில் வளர்ச்சித் திட்டங்களை நடத்தி வருகின்றன. சிற்றளவு தொழில் சேவை நிறுவனம் தொழில் நுணுக்க ஆலோசனை அமைப்பு, மாவட்ட தொழில் மையம் போன்றவைகளும் தொழில் முயல்வு திட்டங்களை நடத்தி வருகின்றன. இவைகள் தொழில் முனைவோருக்கு சிறுதொழில் வாய்ப்பைப் பற்றி எடுத்து உரைக்கின்றன.

5. வர்த்தகம் மற்றும் தொழில் இதழ்கள் மற்றும் சஞ்சிகைகள் திட்ட எண்ணங்களுக்கு நல்ல ஆராரமாக உள்ளன. இதில் வரும் செய்திகள் மற்றும் புள்ளி விவரங்கள் புதிய தொழில் வாய்ப்புகளை கண்டறிய உதவுகின்றன. இந்த இதழ்களைத் தொடர்ந்து படிக்கின்ற போது புதிய தொழில் எண்ணங்கள் வளர்கின்ற.

6. தொழில் மற்றும் தொழில் நுணுக்க ஆராய்ச்சி நிலையம் பல்வேறு விவரங்களைச் சேகரித்து புதிய கருத்துக்களை அளிக்கின்றது. ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தனிப்பட்ட தொடர்புகள் வைத்திருப்பவர்கள் சிறந்த தொழில் முயல்வோராக வர முடிகின்றது.

7. அரசின் பல்வேறு துறைகள் மற்றும் தனியார் அமைப்புகள் பல நூல்களை வெளியிடுகின்றன. இது திட்ட வாய்ப்புகளைக் கண்டறிய உதவியாக இருக்கின்றது. திட்டம் கண்டறிவதற்கு மேற்கூறிய ஆதாரங்கள் பயன்படுகின்றன.

**திட்ட கருத்துக்கள்:**

தொழில் நுணுக்க ஆலோசனை அமைப்புகள் பல்வேறு ஆலோசனை சேவைகளை அளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளன. இது சிறிய, மிகச்சிறிய, பேரளவு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ஆலோசனைகளை அளிக்கின்றது.

தொழில் நுணுக்க ஆலோசனை அமைப்புகள் பின்வரும் சேவைகள் அளிக்கின்றன.

1. திட்ட அறிக்கையைத் தயாரித்தல்.
2. வாய்ப்பு எளிமை ஆய்வு, சந்தை ஆய்வைத் தயாரித்தல்.
3. தொழில் முனைவோர்க்குப் பொருள் பற்றிய புலனாய்வை மேற்கொள்ளுகின்றது.
4. புதிய தொழில் முனைவோர்களுக்குத் திட்டத்தைக் கண்டறிதல், வளர்த்தல், செயல்படுத்துதல் மற்றும் நடத்துதல் தொடர்பாக வழிகாட்டி நெறிகளை அளிக்கின்றது.

5. தற்போதுள்ள தொழில் முனைவோர்களுக்கு தொழிலை விரிவாக்குதல், நவீனப்படுத்துதல் மற்றும் நடத்துதல் தொடர்பாக வழிகாட்டி நெறிகளை அளிக்கின்றது.

6. சந்தையைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆலோசனை சேவையை அளிக்கின்றது.

7. நலிவுற்ற அமைப்புகளுக்கு புத்துயிர் அளிக்க நிதி நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்துத் தருகின்றது.

8. தொழில் நுணுக்க ஆலோசனை அமைப்புகள் பல வகையான தொழில் முயல்வு வளர்ச்சி திட்டங்களை மத்திய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் ஏற்படுத்துகின்றது.

பொதுவாக திட்டம் அல்லது தொழில் எண்ணம் (Business or Project Ideas) பின்வரும் ஆதாரத்தில் இருந்து எழுகிறது.

1. வெற்றிகரமான திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கும் நண்பர்கள்.

2. தொழிலில் அதிக இலாபம் சம்பாதித்த உறவினர்கள்.

3. வர்த்தகக் கண்காட்சிகள், பொருட்காட்சிகள், தொழில் கருத்தரங்கங்கள் இவற்றில் கலந்து கொள்ளுதல்.

4. தகுதி வாய்ந்த தொழில் முனைவோருடன் கலந்து பேசுதல்.

5. பல்வேறு தொழில் நிதி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களில் பணியாற்றும் பல்வேறு அதிகாரிகளைச் சந்தித்தல்.

6. தொழில் நுணுக்க ஆலோசனை அமைப்பு மற்றும் தனிப்பட்ட ஆலோசகர்களிடம் கிடைக்கும் பல்வேறு திட்ட வரைப்படம் (Project Profiles) மற்றும் தொழில் தகுதி ஆய்வுகளை அறிதல்.

இவ்வகை ஆதாரங்கள் மூலம் திட்ட எண்ணங்கள் தோன்ற வாய்ப்புகள் உள்ளன.

**திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய காரணிகள்**

ஒரு திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட நேரத்தை அடைவதற்காக அறிவியல் ரீதியாக உருவாக்கப்பட்ட செயல் திட்டமாகும். மற்றொரு வகையில் கூறினால் பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக உட்படுகின்ற மூலதன முதலீட்டு செயல்முறை ஒரு திட்டமாகும். திட்டத்தைக் கவனமாகத் தேர்ந்தெடுக்காமல் தவறான திட்டமிடல், முறையற்ற மதிப்பீடு, தவறான கணக்கீடு (Mis-calculation) ஆகியவற்றிலிருந்து தொழில் முயல்வோர் தன்னை விடுவித்துக் கொள்ளலாம். எனவே, தொழில் முயல்வோர் ஒரு குறிப்பிட்டத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கின்ற போது வின்வரும் காரணிகளை அல்லது அளவுகோலைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. முதலீட்டு அளவு (Investment size) முதலீட்டு அளவு சிற்றளவு, நடுத்தர அளவு, பேரளவு என்ற மூன்று வகைகளில் உள்ளன. தொழில் முயல்வோர்கள் தங்களுடைய பரந்த அனுபவத்தினால் நடுத்தர அளவு அல்லது பேரளவு, நிறுவனங்களில் முதலீடு செய்கின்றனர். இவைகளில் முதலீட்டு அளவு ரூ.3 கோடியிலிருந்து ரூ.5 கோடி வரை ஆகும். தொழில் முனைவோர்கள் ரூ.2 கோடிக்குக் கீழ் திட்டத் தொகையைக் குறைத்துக் கொள்ளக் கூடாது. தொழில் முனைவோர்கள் அவர்களது திட்ட தேவைக்கு ஏற்றபடி மூலதன அளவைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

2. இட அமைவு (Location) திட்டத்தை உருவாக்குவதில் இடத்தைத் தேர்ந்தெடுத்தல், முக்கிய பங்கு வகிக்கின்றது. தொழிலுக்கான இடத்தை தேர்ந்தெடுக்கின்ற போது அதன் சுற்றுப்புறத்தில் கிடைக்கும் இட அமைவு நன்மைகளைக் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும். தொழில் முனைவோர்கள்

பின்வரும் வசதிகள் கிடைக்கின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

1) கச்சா பொருள்கள் கிடைப்பதற்கு அருகாமை (Proximity of Raw materials)

2) பல்வேறு சந்தை மற்றும் போக்குவரத்து வசதிகள் கிடைப்பது.

3) மின்சக்தி, எரிபொருள் மற்றும் தண்ணீர் வசதி கிடைப்பது.

4) தேர்ச்சி பெற்ற ஓரளவு, தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத தொழிலாளர்கள் கிடைப்பது.

5) நிதி மற்றும் பிற சாதனங்கள் (Resources) கிடைப்பது.

மேற்கூறிய எல்லா நலன்களையும் உடைய இடம் கிடைக்கும் வாய்ப்பு மிகக் குறைவாகும். எனவே தொழில் முனைவோர் அதிகளவு நன்மைகள் கொண்ட ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

3. தொழில்நுட்பம் (Technology) தொழிலுக்கான இடத்தைத் தேர்ந்தெடுத்த பிறகு கையாள வேண்டிய தொழில் நுட்பத்தைக் கண்டறிவது முக்கியமானதாகும். தேவைப்படும் தொழில் நுட்பத்தின் தன்மை மற்றும் தரம் கவனமாகத் தீர்மானிக்கப்பட வேண்டும். மற்றும் தரம் கவனமாகத் தீர்மானிக்கப்பட வேண்டும். மற்றும் அயல்நாட்டு ஒத்துழைப்பு (Colloboration) தேவைப்படும் தொழில்நுட்பத்தைத் தவிர்க்க வேண்டும். எனவே தொழில் முனைவோர் உள்ளூரில் (Indignous) நடைமுறையிலுள்ள தொழில் நுட்பத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உள்ளூர்த் தொழில் நுட்பத்தைத் தேர்ந்தெடுப்பது திட்ட வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றது.

4. எந்திர சாதனங்கள் மற்றும் கருவிகள் (Plant & Machinery) தொழில் முயல்வோர் தேவையான எந்திர சாதனங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் எந்திரக் கருவிகள் தேவையான அளவு பண்டங்கள் மற்றும் தரமுடைய பொருட்களை உற்பத்தி செய்ய உதவுமா என்பதை மதிப்பிட வேண்டும். தொழில் நுணுக்க ஆலோசகரின் அனுபவத்தின் அடிப்படையில் தொழில் முனைவோர்கள் எந்திரக் கருவிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது நல்லது. குறைந்த செலவிலான எந்திரங்களைத் தேர்ந்தெடுத்தல் தரமான பொருள்களை உற்பத்தி செய்ய முடியாமல் போகலாம். எனவே எந்திரங்களை வாங்குவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

5. சாதனங்கள் மற்றும் சந்தை (Materials and Markets) உற்பத்திக்கு அவசியமான உள்ளீடு கச்சாப்பொருளாகும். தொழில் முனைவோர்கள் கச்சாப் பொருள்கள் கிடைக்கும் அளவையும் தரத்தையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். தேவைப்படும் கச்சாப்பொருள்களை உறுதிசெய்து கொண்டவுடன் அதை எவ்வகையில் (Sources of Supply) பெறலாம் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

பொருள்களுக்கான சந்தையைப் பொறுத்தவரை நெருக்கடியான போட்டியாக (Cut throat competition) இருக்கக் கூடாது. தொழில் முயல்வோர் தங்களுடைய பொருள்களுக்கான வாடிக்கையாளர்களை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். பொருள்களை இறுதி நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்ய முயல வேண்டும்.

6. நீர் மற்றும் மின்சக்தி (Power and Water) தொழிலுக்கு எல்லா வகையிலும் மின்சக்தி மற்றும் நீர் தேவைப்படுகின்றது. இவ்விரண்டு உள்ளீடுகளும் போதுமான அளவில் கிடைக்கின்றதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். தொழில் முனைவோர் நீர் சார்ந்த (Water intenstive) மற்றும் மின்சக்தி சார்ந்த (intensive) திட்டங்கள் தவிர்ப்பது நல்லது. இவையிரண்டும்

பற்றாக்குறையாக இருப்பதுடன் அதிக செலவும் ஆகின்றது. பல மாநிலங்கள் மின்சாரவெட்டால் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே அதிக நீர் மற்றும் மின்சக்தி தேவைப்படும் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

7. நிதித் தேவை (Financial Requirement) திட்ட வளர்ச்சிக்கு நிதி ஒரு அடிப்படை உள்ளீடாகும். தொழில் முனைவோர் நிதி கிடைப்பதையும் அதன் அளவையும் உறுதிசெய்து கொள்ள வேண்டும். நிலை மூலதனம் மற்றும் அதிகமாக தேவைப்படாத திட்டத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நிதி நிறுவனங்கள் திட்டங்களுக்கு நிதி அளிப்பதில் ஒரே மாதிரியான (Uniform) கொள்கையைப் பின்பற்றுவதில்லை. அரசின் உண்டியல் (Government Bills) தொழில் முனைவோருக்கு உடனடியாக அளிக்கப்பட வேண்டும். எனவே நடைமுறை மூலதனத் தேவையை கணக்கிடுகின்ற போது உரிய நடைமுறை அணுகுமுறையை பின்பற்றுவது மிகவும் அவசியமாகும்.

8. தொழிலாளர்கள் (Labour) ஆரம்பத்தில் உழைப்புச் சார்ந்த திட்டத்தைத் தேர்ந்தெடுப்பதுஏற்றதல்ல. ஏனெனில் இந்தியாவில் தொழிலாளர் உற்பத்தித் திறன் (Labour productivity) மிகக் குறைவாக இருக்கின்றது, தேர்ச்சிபெற்ற, தேர்ச்சி பெறாத தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்து வேலையில் அமர்த்த அதிகம் செலவாகின்றது. தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் தகராறுகள் அதிகம் காணப்படுகின்றன. தொழிலாளர்களை அதிகமாக வேலைக்கு அமர்த்துவதால் பிரச்சனைகள் அதிகமாகின்றன. எனவே சிறந்த கருவிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு குறைந்த தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது சிறந்ததாக அமைகின்றது.

9. பொருளாதார வாய்ப்புநிலை (Economic Viability) ஒரு திட்டத்தின் வாய்ப்புநிலை, திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் தன்மையையும் தரத்தையும் பொறுத்திருக்கிறது. திட்டத்திலிருந்து இயல்பான இலாபம் கிடைக்குமா என்பதை கவனமாகபரிசீலிக்க வேண்டும். அவ்வப்போது நிதி மற்றும் எந்திரக் கோளாறுகளைக் கண்டுபிடித்து அவற்றை சரி செய்ய வேண்டும். தொழில் முனைவோர் அவர்களுடைய நிதித் தேவையின் உண்மை நிலையை நிதி நிறுவனங்களுக்கு அளித்து நிறுவனத்தின் வாய்ப்பு நிலையை உறுதிசெய்து கொள்ள வேண்டும். தொழில் முனைவோர் ஆரம்ப கட்டங்களின் நியாயமான இலாபத்தையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

10. இறுதி மதிப்பீடு (Final Evaluation) பல்வேறு உள்ளீடுகளை உறுதி செய்து கொண்டபிறகு தொழில் முனைவோர் திட்டத்தை எல்லாக் கோணங்களிலிருந்தும் மதிப்பிட வேண்டும். திட்ட வளர்ச்சி செயல்முறை வெற்றிகரமாக செல்கின்றதா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். திட்டத்தை மதிப்பிடுவதற்குத் தொழில் முனைவோர் பல்வேறு தொழில் நுணுக்க மற்றும் நிதி வல்லுநர்களை அணுக வேண்டும். இந்நடைமுறைகள் முடிந்தவுடன் தொழில் முனைவோர் திட்ட அறிக்கையைத் தயாரிக்க வேண்டும். இத்திட்ட அறிக்கை பல்வேறு காரணிகளுக்கான விவரமான விளக்கத்தைத் தருகின்றது.

**சுயபரிசோதனை**

1. திட்டம் கண்டறிவதற்கான முக்கிய செயல் ________________ ஆகும் (உற்று நோக்குதல்).

2. திட்டத்தைக் கவனமாகத் தேர்ந்தெடுக்காமல் தவறான திட்டமிடல், ________________, ______________ ஆகியவற்றிலிருந்து தொழில் முயல்வோர் தன்னை விடுவித்துக் கொள்ளலாம்.( முறையற்ற மதிப்பீடு, தவறான கணக்கீடு )

3. ________________, ______________ உற்பத்திக்கு அவசியமான உள்ளீடு கச்சாப்பொருளாகும். (சாதனங்கள் மற்றும் சந்தை)

**திட்ட வடிவமைப்பு:**

ஒரு முதலீட்டுத் திட்டத்தினை திட்டக் கருவை தேர்ந்தெடுத்த பிறகு முறையாக வடிவமைக்கும் முறையே திட்ட வடிவமைப்பு ஆகும். திட்ட எண்ணம் தோன்றியதிலிருந்து இத்திட்டம் செயல்படுத்த வேண்டுமா இல்லையா என்பதை முடிவு செய்து வரையிலான இறுதி ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக திட்டங்களை உருவாக்குதல் மிகவும் இன்றியமையாதது. திட்டம் நாட்டின் தற்கால நடிவடிக்கைகளை மட்டுமில்லாமல் எதிர்கால வளர்ச்சியையும் நிர்ணயம் செய்கிறது. திட்டத்தின் வெற்றி திட்டமிடலில் உள்ளது என்றால் அது உண்மையேயாகும். திட்டம் நடைமுறைக்கு உகந்ததாக இல்லாவிட்டால் செயல்படுத்துவது மிகவும் சிக்கலாக அமையும். எனவே திட்ட வடிவமைப்பைப் பற்றி தெளிவாக இருப்பது அவசியமாகும்.

பல்வேறு புள்ளிவிபரங்களைக் கொண்டு திட்ட வளர்ச்சியின் செயல்முறையின் பணியை ஆய்வு செய்யும் கருவியாக திட்ட வடிவமைப்பு பயன்படுத்தப்படுகிறது. திட்ட வடிவமைப்பு வளர்ச்சி செயல்முறையின் முதல் கட்டமாகும்.

**திட்ட வடிவமைப்பின் தேவைகள்**

1. குறிப்பிட்ட நோக்கை அடைய.
2. திட்ட வல்லுநர் குழு மற்றும் ஆலோசகர்களுடன் பயிற்று வழிகளை ஆராய.
3. பணி ஆய்வு செய்யும் கருவியாக பயன்படுத்த.
4. வரையறுக்கப்பட்ட கால அட்டவணைக்குள் நோக்கத்தை அடைய.
5. திட்ட வளர்ச்சியும் தொடர்பு கொண்டதாக இருத்தல் அவசியம்.
6. விரிவான கருத்தை அளிக்க திட்ட வடிவமைப்பு உதவுகிறது.

திட்டத்திற்கான முக்கிய உள்ளடக்கங்கள் பின்வருமாறு

அ) பருபொருள் சார் பகுதி (Physical)

ஆ) நிதி சார் பகுதி (Financial)

இ) திட்ட காலம் (Peroid)

ஈ) திட்டத்தின் அளவு (Capacity)

**2. திட்ட வடிவமைப்பின் உள்ளடக்கங்களை விவரி.**

தொழில் தொடங்க மற்றும் நடத்த, தொழில் முனைவோர் பங்கு இன்றியமையாததாகும். நிதி முதலீடு செய்வதற்கு தொழில் முனைவோர் செய்யும் ஆய்வு செயல்முறை திட்ட வடிவமைப்பாகும். திட்ட வடிவமைப்பு ஏழு நிலைகளைக் கொண்டதாக உள்ளது. அவைகள் பின்வருமாறு.

1. வாய்ப்பு எளிமை ஆய்வு (Feasibility Analysis) திட்ட வளர்ச்சியின் ஆரம்ப கட்டம் வாய்ப்பு எளிமை ஆய்வாகும். ஒரு திட்டத்தை செயல்படுத்துவதற்கான வாய்ப்பைக் கண்டறிவது இக்கட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பல்வேறு சாதனங்கள் மற்றும் உள்ளீடுகள் கிடைப்பது குறித்து திட்டக்கருத்து ஆய்வு செய்யப்பட்டு கவனமாக பரிசீலனை செய்யப்படுகின்றது. திட்டத்தின் இடையூறு களும் குறைகளும் தீவிரமாக ஆய்வு செய்யப்படுகின்றன. இறுதியாக திட்டக்கருத்து வாய்ப்புடையது என தெரிய வந்தால் தொழில் முனைவோர் முதலீடு செய்து தொழில் நுணுக்க பொருளாதார ஆய்வை மேற்கொள்ளுவர்.

2. தொழில் நுணுக்க பொருளாதார ஆய்வு (Techno-Econimic Analysis) தொழில் கருத்தை கண்டறிந்த பிறகு அடுத்த கட்டம் தேவை வாய்ப்புகளை (Demand

Potential) கண்டறிய வேண்டும். அத்துடன் திட்ட நோக்கத்தை அடைவதற்கு பயன்படுத்த வேண்டிய தொழில் நுட்பத்தையும் கண்டறிய வேண்டும். சந்தையில் திட்டத்திற்கான பங்கை அறிவதற்கு விரிவான ஆய்வை மேற்கொள்ள வேண்டும். சந்தை முன்கணிப்பு மூலம் தேவை வாய்ப்பைக் கணக்கிட்டுக் கொள்ளமுடிகின்றது. தொழில் நுணுக்க பொருளாதார ரீதியாகவும் வாய்ப்புடையதா? என்பதை அறிவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. திட்ட வடிவம் மற்றும் வளைவமைவு ஆய்வு (Project Design Network Analysis) திட்ட வடிவமைப்பு என்பது திட்டத்தின் பல்வேறு கூறுகளில் தனிப்பட்டவர் நடவடிக்கைகள் அவை ஒவ்வொன்றின் தொடர்பு என்று வரையறுக்கப்படுகின்றது. திட்டம் செயல்படுத்துவதற்கு முன்பு பல்வேறு தொடர் நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. வளைவமைவு வரைபடம் திட்டத்தின் பல்வேறு காரணிகளுக்கு இடையேயான தொடர்பை வளைவமைவு ஆய்வு காட்டுகின்றது.

4. உள்ளீட்டு ஆய்வு (Input Analysis) இவ்வாய்வின் முக்கிய நோக்கம் நிலம், உழைப்பு, மூலதனம், மின்சக்தி, தண்ணீர் போன்ற பல்வேறு உள்ளீடுகள் தொடர்ந்து கிடைக்குமா என்பதைக் கண்டறிவதாகும். இந்த உள்ளீடுகள் உற்பத்தித் திட்டத்திற்கு மிக முக்கியமானதாகும். பல்வேறு சாதனங்களின் தேவையைக் கண்டறிந்த பிறகு திட்டத்தை வளர்ச்சியடைய செய்ய வேண்டும். பல்வேறு உள்ளீடுகள் தேவையான அளவு மற்றும் தரத்தில் கிடைக்குமா என்பதை உறுதி செய்து கொள்வது மிக அவசியமாகும். உள்ளீடு ஆய்வு சாதனங்கள் கிடைக்குமா என்ற பார்வையில் திட்டத்தின் வாய்ப்பு எளிமையை மதிப்பிடுகின்றது.

5. நிதி ஆய்வு (Financial Analysis) நிதி ஆய்வு திட்டம் வகுப்பதில் ஒரு மிக முக்கிய அம்சமாகும். இவ்வாய்வின் முக்கிய நோக்கம் திட்டத்தை நிதிப் பார்வையில் அணுகி முதலீடு முன்னேற்பாட்டின் நிதி இயல்புகளைக் கண்டறிவதாகும். நிதி ஆய்வுத் திட்டக் கிரயம், செயல்முறைக் கிரயம், திட்ட நிதித் தேவை ஆகியவற்றைப் பற்றிய மதிப்பீட்டைத் தருகின்றது. இக்கட்டத்தில் தொழில்முனைவோர் பல்வேறு முதலீட்டுத் தீர்மானங்களின் ஒப்பீட்டு ஆய்வை செய்கின்றனர். நிதி ஆய்வில் அடக்கவிலை இலாபம் (Cost + Profit) மற்றும் முதலீட்டின் மீதான விளைவு (Return on Investment) ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டும். உரிய முக்கியத்தவமும், முன்னறிவும் (Foresight) செலுத்தி, துல்லியமான நிதித் தேவையைக் கண்டறிய வேண்டும். பல்ஆய்வு, கருவிகள் நிதி ஆய்விற்கு உதவுகின்றன. அதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அடக்கவிலை - விற்பனை - இலாப ஆய்வு (Cost volume profit analysis) மற்றும் விகித ஆய்வு (Ratio Analysis) ஆகும்.

6. கிரய ஆதார ஆய்வு (Cost Benefit Analysis) திட்டத்தின் நன்மைகள் சமுதாயத்திற்கு செல்கின்றதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். பிற ஆய்வுகள் திட்டத்தில் தொழில் முனைவோர் பார்வையில் மதிப்பிடுகின்றது. கிரய ஆதாய ஆய்வு திட்டத்தில் பல்வேறு கிரயம் மற்றும் ஆதாயங்களை பரிசீலனை செய்கின்றது. திட்டம் முழுவதற்கும் ஆகின்ற மொத்த கிரயத்தையும் பரிசீலிக்கின்றது. நிதி ஆய்வு ஒரு திட்டத்தின் இலாபத் தன்மையை மதிப்பிடுகின்றது. கிரய ஆதார ஆய்வு ஒரு திட்டத்தின் தேசிய வாய்ப்பு, எளிமையை மதிப்பிடுகின்றது.

7. திட்ட மதிப்பீடு (Project Appraisal) அல்லது முதலீட்டிற்கு முன்பாக மதிப்பீடு (Pre-investment Appraisal) திட்ட வடிவமைப்பின் இறுதிக் கட்டம் திட்ட மதிப்பீடு அல்லது முதலீட்டு முன் மதிப்பீடு எனப்படுகின்றது. இக்கட்டத்தில் வாய்ப்பு எளிமை ஆய்வு, தொழில் நுணுக்கப் பொருளாதார ஆய்வு, படிவம் மற்றும் வளைவமைவு ஆய்வு, உள்ளீடு ஆய்வு, நிதி ஆய்வு, கிரய ஆதாய ஆய்வு

ஆகிய பல ஆய்வுகளில் முடிவுகள் தொகுக்கப்பட்டு முதலீட்டுத் தீர்மானத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கப்படுகிறது. திட்ட மதிப்பீடு ஆய்வின் முக்கிய நோக்கம் தொழில் கருத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய வடிவத்தில் கொடுத்து அதை நிதி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுக்கு அளிப்பதாகும். இதன் அடிப்படையில் திட்டத்திற்கான முதலீட்டத் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

திட்ட வடிவமைப்பு நுணுக்கங்கள் மேற்கூறிய கூறுகள் அடிப்படையில் அமைகின்றன.

**மூலதனத் திட்டமும் அதன் முக்கியத்துவம்**

ஒரு வியாபார நிறுவனம் தான் திரட்டிய முதலை பயன்படும் வகையில் முதலீடு செய்தல் அவசியமாகும். மூலதனத் திட்டம் என்பது திரட்டிய முதலை எவ்வாறு மூலதனச் செலவு (Capital Expenditure) செய்வது அல்லது நிலைத்த சொத்துக்களில் (Fixed Assets) முதலீடு செய்வது என்பதைப் பற்றி முடிவு செய்வதாகும். பொதுவாக, எந்த ஒரு நிறுவனமும் தனது வியாபார நடவடிக்கைகளை கீழ்க்கண்டவாறு திட்டமிடுதல் அவசியமாகும்.

1. முதல் திரட்டும் முயற்சி (Raising of capital)
2. திரட்டப்படும் முதலை இலாபகரமான திட்டங்களில் முதலீடு செய்தல்.
3. ஈட்டப்படும் இலாபத்தினைப் பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்தல்.

**மூலதனத் திட்டத்தின் இலக்கணம்**

**(Definition of Capital Budgeting)**

மூலதனத் திட்டம் என்பது திட்டமிடப்பட்டுள்ள மூலதனச் செலவுகளைப் பற்றிய நீண்ட காலத் திட்டமாகும் என்று சார்லஸ் டி.ஹாங்கீரின் என்பவர் இதற்கு இலக்கணம் வரைந்துள்ளர்.

ஆர். எம். லைஞ்ச் என்பாரின் கருத்தப்படி, மூலதனத் திட்டம் என்பது நீண்ட கால இலாப அடிப்படையில் முதலீடு செய்வதற்கான திட்டமாகும்.

**மூலதனத் திட்டத்தின் தேவை மற்றும் முக்கியத்துவம்**

**(Need and Importance of Capital Budgeting)**

எந்த ஒரு நிறுவனத்தின் வெற்றியும் அந்த நிறுவனத்தால் தீட்டப்படும் மூலதனத் திட்டத்தினைப் பொறுத்தே அமைகிறது. எனவே, திட்டமிடாமல் செய்யப்படும் எந்த ஒரு முதலீடும் இலாபகரமாக அமையும் என்று உறுதியாகக் கூற முடியாது. எனவே, எந்த ஒரு மேலாண்மையும் சிறந்த முறையில் கீழ்க்கண்ட காரணங்களுக்காக சிறந்த அடிப்படையில் மூலதனத் திட்டத்தினைத் தீட்டுவது அவசியமாகும்.

1. பெரும் முதலீட்டுத் தொகை (Large Investment) பொதுவாக, மூலதனச் செலவிற்கு என மொத்த முதலில் பெரும் தொகையைச் செலவிட வேண்டியுள்ளது. உதாரணமாக போக்குவரத்து, மின்சாரம் மற்றும் இரும்புத் தொழில்களை எடுத்துக் கொண்டால் முதலில் பெருமளவு மூலதனச் செலவிற்கே சென்றுவிடுகிறது. எனவே, முதலீடு செய்வதற்கு முன்னரே திட்டமிடல் அவசியம்.

2. நிரந்தர முதலீட்டுத் திட்டம் (Permanent Investment Planning) முதலீட்டுச் செலவிற்கு பெரும் தொகையினைச் செலவு செய்வது மட்டுமின்றி நிரந்தரமாக முதலீடு செய்யவும் வேண்டியுள்ளது. உதாரணமாக நிலம், கட்டடம், இயந்திரம் போன்ற நிலைத்த சொத்துக்களை அடிக்கடி மாற்ற இயலாது. எனவே, நீண்ட கால முதலீடாக இருக்கும்பொழுது அதிக இடர் ஏற்படும் நிலையும் இருக்கும்.

3. இலாபத்தினை நிர்ணயித்தல் (Determination of Profit) எந்த ஒரு நிறுவனத்தின் இலாப அளவும் அந்நிறுவனத்தின் குறுகியகால மற்றும் நீண்ட கால முதலீட்டு திட்டங்களின் அடிப்படையிலேயே அமையும். நீண்டகால முதலீட்டுத்

திட்டம் தவறாகத் தீட்டப்பட்டால் நிறுவனத்தின் இலாப அளவு பெருமளவில் பாதிக்கப்படும். எனவே, சரியாகத் திட்டமிடுதல் அவசியமாகும்.

4. முதலீட்டுத் திட்டங்களின் சிக்கலான முடிவு (Complication of Investment Decision) நீண்டகால மூலதனத் திட்டங்களை முடிவு செய்தல் மிகவும் கடினமாக மற்றும் சிக்கலான ஒன்றாகும். இவை நிர்வாகத்தின் முடிவெடுத்தல் திறனைப் பொறுத்தே அமைகிறது.

5. பங்குதாரர்களுக்கு பங்குகளின் மதிப்பை உயர்த்துதல் (Maximum of share value to share holders) பொதுவாக, பங்குச் சந்தையில் பங்குகளின் மதிப்பு உயர்வது என்பது அந்நிறுவனத்தின் இலாபத்தினைப் பொறுத்தே அமைகிறது. ஒரு நிறுவனத்தின் இலாபமானது அந்நிறுவனத்தின் மூலதனச் செலவுத் திட்டத்தினைப் பொறுத்தோ அமையும்.

6. குறைவான நெகிழ்ச்சித் தன்மை மற்றும் ரொக்கத் தன்மை (Less flexibility and Liquidity) பெரும் முதலீட்டை மூலதனச் செலவில் இட்டு விடுவதால் நிறுவனத்தின் முதலீடு பற்றிய நெகிழ்ச்சித் தன்மை குறைவாகவே இருக்கும். மேலும், நிறுவனத்தின் ரொக்க ஓட்டமும் குறைவாகவே இருக்கும்.

7. சொத்து விரிவாக்கம். (Asst Expansion) மேலும் சொத்துக்களை வாங்குதல் மற்றும் முதலீடு செய்தல் என்பது நிறுவனத்தின் விற்பனை, இலாபம் மற்றும் முன்னரே இடப்பட்டுள்ள மூலதனச் செலவுகளிலிருந்து பெறப்படும் இலாபம் ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது.

8. நிதிப் பற்றாக்குறை (Scarcity of Funds) பெருமளவு, தொகையினை மூலதனச் செலவில் இட்டு விடுவதால் எதிர்வரும் நடவடிக்கைகளுகக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்புள்ளது. எனவே, சிறந்த முடிவெடுத்தல் அவசியமாகும்.

பொதுவாக, மூலதனச் செலவு அல்லது நிலைத்த சொத்துக்களில் இடப்படும் தொகையானது நிரந்தர முதலீடு (Permanent Investment) ஆகிவிடுவதால், மிகவும் எச்சரிக்கையாக மூலதனச் செலவுகளைத் திட்டமிடல் வேண்டும். ஏனெனில், இடப்பட்ட மூலதனச் செலவினை திரும்பப் பெறுதல் என்பது இயலாத காரியமாகும்.

**கீழ்க்கண்ட படிகளில் மூலதனச் செலவினைத் திட்டமிடலாம் (Steps for Planning capital expenditure decisions)**

1. இலாபகரமமான திட்டங்களை ஆய்வு செய்தல் (Searching for Profitable Investment Opportunities)
2. நீண்டகால மூலதனத் திட்டங்களைத் தயார் செய்தல் (Preparation of Long Range Capital Plans)
3. திட்டங்களின் மதிப்பை அளவிடுதல் (Measurement of worth of Investment)
4. ஆராய்தல் மற்றும் தேர்வு செய்தல் (Screening and Selection)
5. முன்னுரிமையை நிர்ணயித்தல் (Establishing priority for Investment purpose)
6. முதலீடு செய்ய அனுமதி பெறுதல் (Getting Final Approval)
7. படிவங்கள் மற்றும் வழிமுறைகள் (Forms and Procedures)
8. இலாபத்தினை அளவிடுதல் (Evaltaion of Projects)

மேற்கண்ட வழிமுறைகளின் அடிப்படையில் மூலதனச் செலவு பற்றிய திட்டங்களை முடிவு செய்தல் அவசியமாகும்.

**தொழில் நுட்ப வாய்ப்பு மற்றும் மேலாண்மை வாய்ப்பு எளிமை**

ஒரு திட்டம் நடைமுறையில் வெற்றி பெறுமா என்பதை முடிவு செய்ய தொழில் நுட்ப வாய்ப்பு எளிமை ஆய்வு பயன்படுகின்றது. நிறுவனம் உற்பத்தித் தொடங்கத் தேவையான தொழில் நுட்பம் கிடைக்க வாய்ப்புள்ளதா? தொழில்நுட்பம் நிறுவனத்தினத் அளவு உற்பத்தி முறை ஆகியவற்றிற்குப் பொருத்தமானதா என்பதை இந்த ஆய்வின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

தொழில் நுட்பங்களைப் பொறுத்தவரையில் வெவ்வேறு மாற்றுவழிகள் உள்ளன. ஒரே தொழில் நுட்பத்தையே கடைப்பிடிக்க வேண்டும் என்ற கட்டாயமான சூழ்நிலை தற்போது இல்லை, எனவே பல தொழில் நுட்பங்களை ஆராய்ந்து நிறுவனத்தின் சக்தி, நிதி வசதி மற்றும் பிற வசதிகளுக்கும் ஏற்ற பொருத்தமான தொழில் நுட்பத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வகையான தொழில் நுட்பத்தையும் ஆராயும் போது சுற்றுப்புற சூழ்நிலைக்கு இத்தொழில் நுட்பத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகள், மூலதன வசதி தொழில் நுட்பத்திற்கு உதவியாக உள்ள துணைத் தொழில்கள் (Anciliary Industries) ஆகியவற்றைத் தனித்தனியாக ஆய்வு செய்ய வேண்டும்.

1. முதல்நிலை ஆய்வுகளும் சோதனைகளும் (Preliminary and studies) பெரும்பாலான திட்டங்களில் முதல்நிலை ஆய்வு மிகமிக அவசியமாகக் கருதப்படுகிறது. முதல்நிலை ஆய்வில் மூலப்பொருள்களின் பௌதீக மற்றும் இரசாயன குணங்கள் (Physical and Chemical Properties) ஆராயப்படுகின்றன. உற்பத்திக்குப் பயன்படுத்தும் கனிவளங்கள், தண்ணீரின் அடர்த்தி (Density of Water) நிலத்தின் தன்மை, சீதோஷ்ண நிலை

ஆகியவை ஆய்வு செய்யப்படுகின்றன. இவ்வாய்வின் முடிவுகளின் அடிப்படையில் பல முக்கியத் தீர்மானங்கள் எடுக்கப்படுவதால் இது முதல்நிலை ஆய்வு எனப்படுகிறது.

2. அமைவிடம் (Location) தொழில் முனைவோர்கள் அவர்களுடைய திட்டத்தைத் தலைமையிடத்திற்கு அருகில் அமைத்துக் கொள்வது ஏற்றது. நகரத்தைச் சுற்றி பின்தங்கிய பகுதிகள் (Bakward Areas) இருந்தால் அவற்றில் தொழிலை அமைப்பது ஏற்றது. இதன் மூலம் மாநில மின்சார வாரியம் மாநில தொழில் வளர்ச்சிக் கழங்கள் மற்றும் பிற மையங்களுடன் எளிதில் தொடர்பு கொள்ள முடிகின்றது.

3. நிறுவனத்தின் அளவு (Scale of Operation) நிறுவனத்தை எந்த இயக்க அளவில் தொடங்கி நடத்த வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். இதற்கு பின்வரும் காரணிகளை ஆராய வேண்டும்.

    1. தொழில் நுட்பத்தின் தேவை
    2. தொழில் நுட்ப மாற்றம்
    3. நிதி மற்றும் நிர்வாக வசதிகள்
    4. சந்தையின் வலிமை
    5. பேரளவினால் கிடைக்கும் சிக்கனங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்ய வேண்டும்.

4. உற்பத்தித் தொழில் நுட்பம் (Production Technology) ஒரு பொருளை உற்பத்தி செய்ய பல தொழில் நுட்ப முறையைத் தேர்ந்தெடுக்கக் கொள்ள வேண்டும். பயன்படுத்த இருக்கும் தொழில்நுட்பம் பிற நிறுவனங்களில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும். தொழில் நுட்பம் உள்நாட்டில் கிடைக்கும் வாய்ப்பு உள்ளதா அல்லது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் உள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும். வெளிநாட்டு தொழில் நுட்பமாக

இருந்தால் அத்தொழில் நுட்பத்தை நம் நாட்டில் வளர்க்கும் வாய்ப்பு உள்ளதா என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

5. கருவிகளைத் தேர்ந்தெடுத்தல் (Selection of Equipment) நிறுவனத்திற்குத் தேவையான எந்திரக் கருவிகள் தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்களைத் தேர்ந்தெடுக்கும் போது பின்வரும் இயல்புகளை ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

1. தேர்ந்தெடுத்துள்ள உற்பத்தி முறைமை (Production System)
2. எந்திரமயமாக்கலுக்கான வாய்ப்பு
3. இயக்க அளவு (Scale of Operation)

இம்மூன்று இயல்புகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. தொழில் உற்பத்தி முறைமைக்கு ஏற்ப எந்திரங்களைத் தேர்ந்தெடுப்பது அவசியமாகும்.

6. கழிவுப் பொருட்கள் வெளியேற்றும் முறைமை (Effluent Disposal System)

சில உற்பத்தி நிறுவனங்கள் குறிப்பாக முதலானவை கழிவுப் பொருள்களை வெளியேற்றுகின்றன. இவை சுற்றுப்புற சூழ்நிலைகளைக் கேடுகளை விளைவிக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கான சாதனங்களை அமைக்க வேண்டும்.

7. பணிமனை அமைப்புத் திட்டம் மற்றும் கட்டடங்கள் (Layout and Buildings) பணிமனை அமைப்புத் திட்டம் (Layout) உற்பத்தி முறைமையின் அடிப்படையில் இருக்க கூடுமானவரை பணிமனைத்திட்டம் நெகிழ்ச்சித் திறன் உடையதாக இருக்க வேண்டும். பணிமனை அமைப்பு தொழிற்சாலைக்கான இடம் முழுவதையும் முறையாகப்பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புடையதாக இருக்க வேண்டும். பணிகளைத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக அமைக்கப்பட வேண்டும். தொழிற்சாலையை விரிவுபடுத்தவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

8. பணி நிகழ்ச்சி நிரல் (Work Schedule) தொழிற்சாலையை நிறுவும் போது அதன் ஆரம்பம் முதல் இறுதிவரை செய்து முடிக்க வேண்டிய எல்லாப் பணிகளையும் முறையாகத் திட்டமிட்டு நிகழ்ச்சி நிரல் உண்மையில் நிறைவேற்றக்கூடிய வகையில் நடைமுறைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

9. தொழில் நுட்பப் பொருத்தம்( Appropriate Technology) தொழில் நுட்பப் பொருத்தம் என்பது சமூக, பொருளாதார நிலைமைக்கு ஏற்ற பொருத்தமான தொழில் நுட்பத்தைக் குறிக்கின்றது. ஒரு தொழில்நுட்பம் நமது சூழ்நிலைக்குப் பொருத்தமானதா என்பதை ஆராய வேண்டும். பயன்படுத்துகின்ற தொழில்நுட்பம் மக்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். சுற்றுப்புற சூழ்நிலைகளைப் பாதிக்கக் கூடியதாக இருக்கக் கூடாது.

ஒரு திட்டத்திற்கான தொழில்நுட்ப வாய்ப்பு எளிமை மேற்கூறிய வகைகளில் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

**மேலாண்மைத் திறன் மற்றும் நிதியிடலில் உள்ள முக்கியத்துவம்**

**மேலாண்மை திறனின் முக்கியத்துவம்**

**(Signcificance of Managerial Competence of Skill)**

மேலாண்மை மதிப்பீடு செய்தல் காலவரை கடன் ஆய்வுக்கு உறைகல்லாகும். கடன் அளிக்கும் வங்கிகள் கடனைத் திரும்பப் பெறுவதற்கான நம்பிக்கையைக் கொண்டு தீர்மானிக்கிறது. மேலாண்மைத் தேர்ச்சி பெற்றதாக இருந்தால் தான் கடன் கொடுக்கும் வங்கிகள் நம்பிக்கையைப் பெற முடியும்.

தொழில் நுணுக்க வாய்ப்பு எளிமை, பொருளாதார வாய்ப்பு எளிமை மற்றும் நிதி வாய்ப்பு எளிமை நன்றாக இருந்தாலும் மேலாண்மையின் தேர்ச்சி முக்கியமானதாகும். மேலாண்மையின் தேர்ச்சி அவர்களுடைய தொழில் சார்ந்த அறிவிலிருந்து வெளிப்படுகிறது. மேலாண்மை கடைப்பிடிக்கும் கொள்முதல், உற்பத்தி, விற்பனை உழைப்பு, தனியார் கடன், மற்றும் நிதிக் கொள்கைகள் மேலாண்மையின் தேர்ச்சியை வெளிப்படுத்துகிறது.

**வாய்ப்பு எளிமை (Feasibility Report)**

திட்ட வடிவமைப்பு கட்டத்திற்குப் பிறகு அதன் தோற்றுவிப்பாளர்கள் (Promotors) வாய்ப்பு எளிமை அறிக்கையைத் தயாரிக்கின்றனர். இந்த அறிக்கைத் திட்டத்தின் வாய்ப்பு எளிமைக்குஉரிய எல்லாக் காரணிகளையும் அளிக்கின்றது. இது வாய்ப்பு எளிமை அறிக்கை என அழைக்கப்படுகிறது. ஒரு திட்டத்தைக் கண்டறிந்த பிறகு வாய்ப்பு எளிமை அறிக்கை தொழில் முனைவோரால் திட்ட அனுமதி கட்டத்திற்கு முன்பு தயாரிக்கப்படுகின்றது. இது தொழில் முனைவாருக்காக அவரது ஆலோசகர்களால் தயாரிக்கப்படுகிறது.

வாய்ப்பு எளிமை அறிக்கையின் உள்ளடக்கம் (Contents of Feasibiity Report) பொதுவாக வாய்ப்பு அறிக்கை பின்வருவனவற்றைக் கொண்டிருக்கிறது.

1. அறிமுகம் (Introduction) இப்பகுதியில் தொழிலின் அளவு மற்றும் தன்மை பற்றி பொதுவான விளக்கம் கொடுக்கப்படுகின்றது. தொழிலைப் பொறுத்த வரை பொதுக் கொள்கை, முதலான முதலீடு, உற்பத்தித் தன்மை, தொழில் நுட்ப வகை, அமைப்பு வடிவம் ஆகியவை பற்றி விரிவாக விளக்கப்படுகிறது.

2. திட்டத்தைத் தேர்ந்தெடுத்தல் (Market Research) திட்டத்திற்காகத்தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் நுட்பம் மற்றும் செயல்முறை தொடர்பான விளக்கம் வாய்ப்பு எளிமை அறிக்கையில் கொடுக்கப்படுகின்றது. திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியைப் பற்றிய விவரம், அப்பகுதியில் கிடைக்கும் வசதிகள் மற்றும் சுற்றுப்புற சூழல் நன்மைகள் அளிக்கப்படுகின்றன. உற்பத்திக்குத் தேவைப்படும் சாதனங்கள் அதன் பல்வேறு கிரயங்கள், தொடர்பான விரிவான கூற்று கொடுக்கப்படுகின்றன.

3. சந்தை ஆராய்ச்சி (Market Research) சந்தை ஆய்வில் பொருளின் அளிப்பு மற்றும் தேவைக் காரணி ஆய்வு செய்யப்படுகின்றது. கடந்த காலத்தில் விலைப்போக்கு, போட்டியாளர்கள் விலைகள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு பொருள் விலையிடுதல் பற்றி குறிப்பிடப்படுகின்றது. சந்தை ஆய்வில் பொருளின் போக்கு மற்றும் விலைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

4. நிதி ஆய்வு (Financial Analysis) இவ்வாய்வில் திட்டத்தின் நிதித் தொடர்பான தன்மைகள் விளக்கப்படுகின்றன. நிதி ஆய்வு பல்வேறு கிரயங்கள் பற்றிய மதிப்பீட்டைக் கொண்டிருக்கின்றது. சரிசமப்புள்ளி (Break Even Point) நடைமுறை மூலதனம், நிலை மூலதனம் ஆகியவை பற்றிய விவரங்கள் அளிக்கப்படுகின்றன. திட்டத்தின் நிதி எளிமையை மதிப்பிடுவதற்கு கணக்கீடு உதவிகளை (Accounting Aids) அளிப்பது இவ்வாய்வின் நோக்கமாகும், வழக்க முறைமை இருப்புநிலைக் குறிப்பு, தேய்மானங்கள் அனுமதிக்கப்பட்டது. வருமான வரி தள்ளுபடி, மற்றும் சலுகைகள் நிதி ஆய்வில் கொடுக்கப்படுகின்றன. நிறுவனம் முதலீட்டிற்கு ஈட்டும் இலாப எல்லை இவ்வாய்வில் கொடுக்கப்படுகிறது.

5. சமுதாய செலவு பயன் ஆய்வு (Social cost - benefit Analysis) வாய்ப்பு எளிமை ஆய்வில் இத்திட்டத்தின் மூலம் சமுதாயத்தில் கிடைக்கும் பலன் கொடுக்கப்பட வேண்டும். சமுதாய செலவு பயனாய்வுத் திட்டத்தை தேசிய வாய்ப்பு எளிமை பார்வையில் மதிப்பிடுகின்றது. திட்டத்திற்கான பல்வேறு

செலவுகளும் அதனுடைய பலன்களும் இவ்வாய்வில் அளிக்கப்பட வேண்டுதல்.

வாய்ப்பு எளிமை அறிக்கையில் மேற்கூறிய விவரங்கள் அடங்கியிருக்கின்றன.

**வாய்ப்பு எளிமை அறிக்கையின் பொது வடிவம்**

**(General Format of the Feasibility Report)**

1. அறிமுகம்
2. பொதுத் தகவல்கள்
3. தொழில் அலகின் திறன்
    அ) பொருளின் தொகுப்பு
    ஆ) பொருளின் குறிப்பிட்ட பண்புகள்
    இ) பொருள் நுட்பம் ஆகிய விவரங்கள்
4. சந்தை ஆய்வு (Marketing Analysis)
    அ) தொழில் அலகின் அமைப்புத் திறன்
    ஆ) பல்வேறு வட்டாரங்களில் பொருளுக்கான தேவை
    இ) பொருளின் வளர்ச்சி
5. தொழில் நுட்ப ஆய்வு (Technical Analysis)
    அ) கையாளப்படும் தொழில் நுட்பம் பற்றிய விவரம்
    ஆ) திட்டத்திற்கான செயல்முறையைத் தேர்ந்தெடுத்தல்
    இ) வெளிநாட்டு உடனுழைப்பு வாய்ப்புகள்
    ஈ) பொருள் தொடர்பான தொழில் நுணுக்க விவரங்கள்
6. எந்திரங்கள் (Machines & Equipments)
    அ) எந்திரங்களுக்கான குறிப்புகள் அடங்கிய பட்டியல்
    ஆ) எந்திரங்களின் தன்மை (இந்தியா அல்லது வெளிநாடு)
    இ) தொழிலகம் மற்றும் எந்திரங்கள் தேர்ந்தெடுப்பதன் நன்மை தீமைகள்.
7. திட்ட இட அமைவு
    அ) திட்டத்தின் சரியான இட அமைவு
    ஆ) கச்சாப் பொருள்கள், மின்சக்தி, தொழிலாளர், போக்குவரத்து, தண்ணீர் எரிபொருள் மற்றும் சந்தை போன்ற வசதிகள் அப்பகுதியில் கிடைப்பது.
    இ) தொழிலக இட அமைவு, மற்றும் கழிவுகள் வெளியேற்றுவதற்கான இட ஒதுக்கல்.
8. கச்சாப் பொருள்களும் பிற உள்ளீடுகளும்
    அ) கச்சாப் பொருள் அளிப்பதன் பல்வேறு ஆதாரங்கள் பற்றிய விளக்கம்குறிப்பாக தரம் மற்றும் விலை.
    ஆ) தண்ணீர், எரிபொருள், மின்சக்தி போன்றவற்றில் தேவை.
9. நிதித் தொகுப்பு
    அ) நிலை மூலதனத் தேவை மற்றும் நடைமுறை மூலதனத் தேவை பற்றிய விளக்கம்.
    ஆ) நிதி ஆதாரங்கள் (நிதி நிறுவனங்கள் அல்லது வங்கிகள்)
    இ) திட்ட கிரயம் பற்றிய விளக்கம்.

ஈ) பத்தாண்டுகளுக்கான இலாப அறிக்கையின் சரி சம ஆய்வு மற்றும் விகித ஆய்வு.

10. உற்பத்தி கிரயம் (Production Cost)

அ) பொருளுக்கான மொத்த உற்பத்தி கிரயம்

ஆ) தனி அலகின் உற்பத்தி கிரயம் பற்றியக் கூறு.

இ) பத்தாண்டுகளுக்கான வருங்கால உற்பத்தி கிரயம் பற்றிய விளக்கம்.

ஈ) திட்டத்தை உண்மையில் தொடங்குவதற்கான கால வரை.வாய்ப்பு எளிமை அறிக்கையின் பொதுவடிவம் மேற்கூறிய வகையில் அமைகிறது.

**ஒரு சிறந்த தொழில் அமைப்பின் இயல்புகள்**

தொழில் அமைப்பின் வகையைத் தேர்ந்தெடுக்கின்ற போது தொழில் முயல்வோர் கவனத்தில் கொள்ள வேண்டியவை.

தொழில் முனைவோர் பொருத்தமான தொழில் அமைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. தொழிலின் தன்மை மற்றும் ஆய்வு சேர்க்கப்பட்டுள்ள நபர்கள் உரிமை ஆகியவைகளைத் தீர்மானித்தவுடன் தொழில் அமைப்பின் வகையைத் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. தொழில் அமைப்பின் வகையைச் சரியாகத் தேர்ந்தெடுத்தால் அது தொழிலின் வெற்றிக்கு உதவுகின்றது. ஒரு சிறந்த தொழில் அமைப்பு அதனுடைய நோக்கங்கள் வேறுபட்டதாக இருப்பதால் ஒரு தொழில் அமைப்பு எல்லா வயையான தொழிலுக்கும் பொருத்தமாக இருக்காது. எனவே சிறந்த தொழில் அமைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது.

**ஒரு சிறந்த தொழிலமைப்பின் இயல்புகள்**

**(Characteristics of an Ideal Form of Organisation)**

ஒரு குறிப்பிட்ட வகையான தொழில் அமைப்பைத் தேர்ந்தெடுக்கின்றபோது அவருடைய தேவைகள், எவ்வாறு அத்தொழில் அமைப்பால் நிறைவேறும் என்பதைக் கண்டறிய வேண்டும். ஒரு சிறந்த தொழில் அமைப்பைத் தேர்ந்தெடுப்பதற்குப் பின்வரும் காரணிகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. தோற்றுவிப்பது எளிது (Easy Formation) ஒரு சிறந்த தொழில் அமைப்பைத் தேர்ந்தெடுக்கும் போது தொழில் முனைவோர் தோற்றுவிக்கும் எளிமைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஒரு சிறந்த தொழில் அமைப்பு குறைந்த இடையூறுகளில் அமைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். தொழில் அமைப்பை அமைப்பதற்கான செலவு மற்றும் சட்ட சடங்குகள் மிகக் குறைவாக இருக்க வேண்டும்.

2. மூலதனம் எழுப்பும் வசதிகள் (Facilite for Raising Capital) ஒரு நல்ல தொழில் அமைப்பின் மற்றொரு முக்கிய இயல்பு தேவையான மூலதனத்தை எழுப்பும் வசதியாகும். பேரளவு மூலதனம் தேவைப்படுகின்ற போது அம்மூலதனத்திற்குப் பாதுகாப்பு நியாயமான வட்டி, போன்றவை கிடைக்கும் படி இருக்க வேண்டும். பல்வேறு தொழில் அமைப்புகளில் எளிமையாக மூலதனம் எழுப்பக் கூடிய அமைப்பை தொழில் முயல்வோர் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

3. பொறுப்பு வரையறுக்கப்பட்டது (Limited Liability) இடரைப் பொறுத்தவரை தொழில் முனைவோர் வரையறுக்கப்பட்ட பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். இதனால் நிறுவனம் கலைக்கப்பட்ட அல்லது திவால் ஆகும் போது உரிமையாளர்கள் அவர்கள் அளித்த மூலதன அளவிற்குத் தொகை அளித்தால் போதும், சொந்த சொத்துக்களைப் பொறுப்பாக வைக்க வேண்டியதில்லை.

4. உரிமை கட்டுப்பாடு மற்றும் மேலாண்மைக்கு இடையேயான நேரடித் தொடர்பு (Direct Relationship Between Ownership control and Management) உரிமை இருக்கும் இடத்தில் கட்டுப்பாடு இருக்க வேண்டும். இதன் மூலம் மேலாண்மை மற்றும் தொழில் முயல்வோர் நிறுவனத்தை இயக்குவதில் முழுத் திறமையைக் காட்ட முடிகிறது. மேலாண்மை பொறுப்பு உரிமையாளர்களிடம் இல்லாவிட்டால் மேலாண்மை இலாபத்தை உயர்த்திக் கொள்வதில் தனிப்பட்ட ஆர்வம் காட்டுவதில்லை.

5. செயல்பாட்டில் நெகிழ்வுத் தன்மை (Flexibility of Operation) ஒரு நல்ல தொழிலமைப்பு உயர்ந்த நெகிழ்வுத் தன்மையையும் பின்பற்றக்கூடிய தன்மையையும் பெற்றிருக்க வேண்டும். தேவை ஏற்பட்ட போது அதிக செலவு இல்லாமல் மாற்றங்களைச் செய்து கொள்ளும்படி இருக்க வேண்டும். தொழில் முனைவோர் தேவை ஏற்பட்ட போது அதிகப்படியான நபர்களை உரிமையாளர்களாகச் சேர்த்துக் கொள்ளக் கூடிய தன்மையில் தொழில் அமைப்பின் வகை அமைய வேண்டும்.

6. நிலைத்த தன்மை (Stability) ஒரு சிறந்த தொழிலமைப்பு நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும்படி அமைய வேண்டும். தொழில் முனைவோரை பொருத்தவரை அவர் திட்டங்களை வகுக்கவும், நீண்ட காலத்திற்கு முதலீட்டுக்கு வருவாய் கிடைக்கும்படி இருக்க வேண்டும். சமுதாயத்தைப் பொருத்தவரை தொடர்ந்து தேவைகளை நிறைவேற்றும்படியும் வேலைவாய்ப்பு அளிக்கும்படியும் அமைய வேண்டும்.

7. தொழில் இரகசியங்களைப் பாதுகாத்தல் (Maintenance of Business Secrets) தொழில் முனைவோர் தொழில் ரகசியங்கள் பிறரால் வெளியிடப்படாமல் இருக்கும்படி தொழில் அமைப்பைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது அவருடைய தொழிலில் தொடர்புடைய நபர்களை (Associates) கவனத்துடன் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

8. மாநிலக் கட்டுப்பாட்டிலிருந்து சுதந்திரம் (Freedom from State Regualtion) பல்வேறு வகை தொழில் அமைப்பும் மாநிலத்தின் பல்வேறு சட்டங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்படுகின்றது. தொழில் அமைப்பு பெரும்பாலான நேரத்தை மற்றும் பணத்தை சட்ட சடங்குகளை நிறைவேற்ற செலவிட வேண்டியிருக்கிறது. எனவே குறைந்த பட்ச மாநிலக் கட்டுப்பாட்டுக்கு உட்படும் தொழில் வகையைத் தொழில் முனைவோர் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

9. குறைந்த வரிப் பொறுப்பு (Lesser Tax Liability) பல்வேறு வகைத் தொழில் அமைப்பும் பல்வேறு அடிப்படையில் வருமான வரி விதிப்புக்கு உட்படுகிறது. ஒரு சிறந்த தொழில் அமைப்பு குறைந்த அளவு வரி பொறுப்புக்கு உட்படுவதாக இருக்க வேண்டும்.

மேற்கூறிய இயல்புகளைக் கவனத்தில் கொண்டு ஒரு பொருத்தமான தொழில் அமைப்பைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பொருத்தமான தொழில் அமைப்பு

ஒரு சிறந்த தொழில் அமைப்பின் பல்வேறு தன்மைகளைத் தனிப்பட்ட முறையில் கவனிக்க முடியாது. நடைமுறையில் குறிப்பிட்டத் தேவையைக் கவனத்தில் கொண்ட ஆரம்பிக்கக் கூடிய தொழிலைத் தேர்ந்தெடுக்கின்ற போது பின்வருவன தொழில் முனைவோருக்கு வழிகாட்டுகின்றது.

1. தொழிலின் வகை, வியாபாரம், உற்பத்தி, வர்த்தகம் அல்லது சேவை.
2. எதிர்பார்க்கின்ற தொழில் அளவு
3. செயல்பாட்டு எல்லை.

4. மேலாண்மை மீது நேரடிக் கட்டப்பாடு
5. ஆரம்பத்தில் மற்றும் விரிவாக்கத்தில் தேவைப்படுகின்ற நிதி
6. தொழில் இடர்மீது தனிப்பட்டப் பொறுப்பை ஏற்கும்விருப்பம்
7. இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஏற்பாடு
8. எதிர்பார்க்கின்ற தொழிலின் ஆயுட்காலம்.
9. பல்வேறு வகையான உரிமையின் கீழ் வரி ஆதாயம்.
10. தொழில் முனைவோர் விரும்பும் சுதந்திரம் மற்றும் அரசின் கட்டுப்பாடு.

மேற்கூறிய தேவைகளை மனதில் கொண்டு பொருத்தமான தொழில் அமைப்பை தொழில் முனைவோர் அமைத்துக் கொள்ள வேண்டும். இவைகளில் மூலதனம் ஒரு தொழிலின் வெற்றிக்கு மிக முக்கியமானதாகும். எனவே, மூலதனம் திரட்டுவதற்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும். வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் கூடிய தொழில் அமைப்பு வகையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். எந்த வகையான தொழில் அமைப்பைத் தேர்ந்தெடுத்தாலும் அவை வெற்றிகரமாக அமையும் வண்ணம் தொழில் அமைப்பைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

**வியாபார வாய்ப்பு எளிமை**

## (COMMERICAL VIABILITY)

ஒரு திட்டத்தின் வியாபார அம்சத்தை மதிப்பிடுவது கச்சாப் பொருள்களைக் கொள்முதல் செய்தல் மற்றும் இறுதிப் பொருளை விற்பனை செய்தல் போன்ற ஏற்பாடுகளிலிருந்த அறிய முடிகின்றது. சாதனங்களைக் கொள்முதல் செய்வதற்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. தொழிற்சாலையைக் கட்டுவதற்குத் தேவையான சேவைகள் கிடைக்கின்றதா என்பது கவனிக்கப்பட வேண்டும்.

கட்டுமான வேலைகள் முடிவடைந்தவுடன் மின் இணைப்பு, தொழிற் சலையை இயக்குவதற்கான உழைப்பு மற்றும் கச்சாப் பொருள்கள் பெறப்பட வேண்டும். பிரச்சினைகள் எல்லாத் திட்டத்திற்கும் ஒரே மாதிரியாகவே இருக்கிறது. செலவிடப்பட்ட தொகைக்கு உரிய மதிப்பு கிடைத்துள்ளதா என்பதை அறிவது வியாபார வாய்ப்பு எளிமையின் நோக்கமாகும். நிறுவனம் செயல்படும் நிலையில் வியாபாரப் பிரச்சினைகள் துறைக்குத்துறை வேறுபடுகின்றன. தொழிற்சாலைகளில் உற்பத்திக்கு வேண்டிய பொருள்களின், கொள்முதலுக்கான கட்டு வரம்புகள் மற்றும் பொருளின் விற்பனை கவனமாக பரிசீலிக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் தான் செயல்முறை மூலதனத் தேவையின் அளவு அமைந்திருக்கிறது. நிறுவனம் ஏகபோக விற்பனை முகமையை நியமிக்க நினைத்தால் அது நிறுவனத்திற்கு பொது கொள்கைக்கு ஏற்றதாக இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

வியாபார இலாபத் தன்மை மூலம் இத்திட்டம் நாட்டின் பொருளாதாரத்திற்கு நல்ல எண்ணத்தை அளிப்பது இல்லை. இதில் ஒரு திட்டத்தின் பண அளவில் இலாபத்தை அறிவது மட்டும் வலியுறுத்தப்படுகிறது. சமுதாய நலத்திற்கு அளித்த உண்மையான வழங்கலால் வலியுறுத்தப்படுவது இல்லை. தேசிய பொருளாதாரத்திற்கு திட்டத்தின் வழங்கலை அளவிட தேசிய இலாபத் தன்மை (Profitability) ஆய்வு செய்யப்பட வேண்டும்.

தேசிய இலாபத் தன்மை ஆய்வு வியாபார இலாபத் தன்மை ஆய்வை ஒத்ததாகும். இரண்டும் கிரயம் மற்றும் பலன்களைக் கண்டறிய முயற்சிக்கின்றன. முதலீட்டு திட்டத்தின் இயல்பு தன்மையை ஒப்பிட்டு மதிப்பிடுகின்றன. இருந்த போதிலும் வியாபார இலாபத் தன்மைக்கும் தேசிய இலாபத் தன்மைக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன. வியாபார இலாபத் தன்மை ஆய்வின் நோக்கம் ஒரு

திட்டத்தில் நிகர நிதி முடிவுகளை மதிப்பிடுவதாகும். தேசிய இலாபத் தன்மை ஆய்வுத் திட்டம் வளர்ச்சி நோக்கத்திற்கு வழங்குவதை ஆய்வு செய்கின்றது.

நிதியியல் எளிவரல் தன்மையை ஆராய்வதனால் ஒரு திட்டத்தினுடைய நிதிச் செயல்பாடு பற்றிய விழிப்புணர்வையும் திட்டத்தினுடைய லாபகரத் தன்மையையும் தெரிந்து கொள்ளலாம். அவ்வாய்வின் கீழ்க்காணும் பணிகளை ஆராய்வது முக்கியமாகும்.

திட்டத்தினுடைய கிரய மதிப்பு (குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்கான)

திட்ட நிதியிடுகைக்கான மூலங்களின் கிடைப்புத் தன்மையும் நிதித் தேவையை அளவிடுதலும்.

**கடன் மதிப்பீடு**

கடனளிக்கும் முன் தேவையானவற்றை நன்கு ஆய்வு செய்து கடனை அளித்தல் முக்கியமானது. இத்தகைய ஆய்வை நாம் கடன் மதிப்பீடு என்று சொல்ல வேண்டும். இன்றைய நிலையில், கடனளித்தல் வங்கியரின் பொறுப்பான பணிகளுள் ஒன்றாகக் கருதப்படும் நிலையில் அவர் நல்ல திட்டமிட்ட முறையில் கடன் மதிப்பீடு செய்வது அவரது கடமையாகும். வாடிக்கையாளர் மற்றும் கடன் வேண்டுவோரின் தேவைகளின் தன்மையை அறிந்து கடனளித்தல் சிறந்தது. முந்தைய நாட்களில் கடனளிக்கும் பணி மிகவும் எளிதான ஒரு பணியாகக் கருதப்பட்டது. ஆனால், இன்று அது கவனமுடன் செயல்பட வேண்டிய சிரமமான பணியாகக் கருதப்படுகின்றது. கடன் தொகையும், கடன் பயன்படுத்தப்படும் நோக்கமும் அதன் பாதுகாப்பும் கடன் மதிப்பீட்டில் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

கடன் மதிப்பீட்டில் மேலும் முக்கியமாக கீழ்க்கண்டவை ஆராயப்படுகின்றன.

1. பிணையத்தன்மை, 2. இலாபத்தன்மை,
3. கடனாளியின் நடத்தை, 4. கடனாளியின் மூலதனம்,
5. கடனாளியின் திருப்பிக் கொடுக்கும் திறன், 6. நீர்மைத் தன்மை.

மேற்சொன்னவற்றைத் தீர்வுடன் கண்டறிய கடன் பெறுவோரின் நிதி அறிக்கைகள் கணக்கியல் விகிதங்கள் கொண்டு நன்கு ஆராயப்படுகின்றன.

**கடன் விண்ணப்பத்தை மதிப்பிடுதல்**

காலவரையற்றக் கடன்கள் குறுகியக் காலக் கடன்களை விட அதிக இடர்களைக் கொண்டுள்ளன. ஏனெனில், பேரளவுத் தொகையை நீண்ட காலத்திற்கு அளிக்க வேண்டியிருக்கிறது. எனவே, நிதி நிறுவனங்கள் தொழிற்சாலைகளுக்கு நீண்ட காலக் கடன் அளிக்கின்ற பொழுது அதன் கடன் விண்ணப்பங்களை மதிப்பிட வேண்டியிருக்கிறது.

கடன் விண்ணப்பங்களை மதிப்பிடுவது பின்வரும் வகையில் செய்யப்படுகின்றது.

1. தொழில் நுணுக்க வாய்ப்பு எளிமை
2. பொருளாதார வாய்ப்பு எளிமை
3. நிதி வாய்ப்பு எளிமை
4. மேலாண்மைத் திறன் வாய்ப்பு எளிமை.

1. தொழில் நுணுக்க வாய்ப்பு எளிமை

தொழிற்சாலைக்குரிய திட்டம் தொழில் நுணுக்க வாய்ப்பு எளிமை உடையதாக இருக்க வேண்டும். ஒரு திட்டம் தொழில் நுணுக்க ரீதியாக வாய்ப்பு எளிமை உடையதாக இருக்கின்றதா? என்பதைப் பின்வரும் காரணங்களைக் கொண்டு மதிப்பிடலாம்.

1. திட்டத்தின் இட அமைவு ஒரு திட்டத்தின் வெற்றி அதனுடைய இட அமைவையே பெரிதும் சார்ந்திருக்கின்றது. கச்சாப் பொருள்கள், போக்குவரத்து வசதிகள், மனித ஆற்றல், பொருட்களுக்கான சந்தை போன்றவை தாராளமாகவும் உடனடியாகவும் கிடைக்க வேண்டும்.
2. பயன்படுத்தும் தொழில் நுட்பம் திட்டத்திற்குப் பயன்படுத்துகின்ற தொழில் நுட்பம் நம் நாட்டு நிலைக்குப் பொருந்துவதாக இருக்க வேண்டும். சில திட்டங்களுக்கு வெளிநாட்டு வல்லுநர்களைப் பயன்படுத்த வேண்டும். கையாளவிருக்கும் தொழில் நுட்ப வகையை நன்கு தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.
3. எந்திரங்களும், கருவிகளும் தொழிற்சாலைக் கருவிகளையும், எந்திரங்களையும் அளிப்பவர்கள் அனுபவமும், புகழும் உடையவர்களாக இருக்க வேண்டும். தொழிற்சாலைக்கான வரையளவு உற்பத்தித் திட்டத்திற்கு உகந்தபடி இருக்க வேண்டும். பட்டியலிட்டபடி கட்டுமானம் செய்து முடிக்கப்பட வேண்டும். தொழில் நுணுக்க வாய்ப்பு எளிமையைப் பரிசீலனை செய்ய பலதரப்பட்ட வகையான தேவைகள் முழுமையாக மதிப்பிடப்பட வேண்டும். திட்டத்திற்கு தேவைப்படும் நிலம், எந்திரங்கள், பயிற்சி பெற்ற தொழிலாளர்கள், பயிற்சி வசதிகள், கச்சாப் பொருள்கள், போக்குவரத்து, எரிசக்தி, நீர் வசதி ஆகியவையும் விரிவாக மதிப்பிடப்பட வேண்டும்.

**2. பொருளாதார வாய்ப்பு எளிமை**

ஒரு திட்டத்தின் பொருளாதார வாய்ப்பு எளிமை அத்திட்டத்தின் வருவாய் ஈட்டும் திறனுடன் பெரிதும் தொடர்புடையதாக உள்ளது. பொருளாதார வாய்ப்பு எளிமை பின்வரும் காரணிகளைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும்.

1. புதிய திட்டத்தால் ஏற்பட்ட கூடுதல் விளைவு எந்த அளவுக்கு சந்தையில் ஈர்க்கப்படும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். பொருளின் மொத்த உற்பத்தி, தற்பொழுது அப்பொருளுக்குள்ள தேவை போன்றவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் உற்பத்தி தேவைக்கு ஏற்றபடி உள்ளதா என்பதை அறியமுடியும்.
2. அத்திட்டத்தினால் தேசிய கருவூலத்திற்குக் கிடைக்கும் நிதியின் அளவு.
3. திட்டத்திலிருந்து பெற்ற லாபம் அப்பகுதியில் வளர்ச்சியைக் கொண்டு வருமா?
4. திட்டம் கூடுதல் வேலை வாய்ப்பிற்கு வழி வகுக்குமா?
5. திட்டம் எந்த அளவிற்கு மாசுபாட்டைக் குறைக்கும்?

ஒரு தொழிலின் நீண்டகால வாய்ப்பை மதிப்பிட வேண்டுமெனில் அதன் தேவை மற்றும் அளிப்பின் எதிர்கால மாறுதல்களையும், போக்கையும் அறிந்து கொள்ளுதல் அவசியம், வருங்காலத் தேவையைக் கணக்கிடுகின்ற பொழுது ஏற்றுமதி வாய்ப்புகள், வருமானம் மற்றும் விலையில் உண்டாகும் மாறுதல்கள், பொருளின் பலதரப்பட்ட பயன்கள், உற்பத்திப் பெருக்கம் போன்ற பலவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இந்தியத் தொழில் வளாச்சி வங்கி இதற்கென பொருளாதார விளைவு வீதத்தைக் கணக்கிடுகின்றது.

**நிதி வாய்ப்பு எளிமை**

தொழிற்சாலைக்கான திட்டம் நிதி வாய்ப்பு எளிமை உடையதாகவும் இருத்தல் வேண்டும். நிதி வாய்ப்பு எளிமையைப் பரிசீலிக்க பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

1. திட்டத்தின் செலவு திட்டத்திற்கான செலவை மதிப்பிடுகன்ற போது அத்திட்டம் தொடர்பான அனைத்துச் செலவினங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். உண்மையான நிலையைப் பிரதிபலிக்க வேண்டும்.

2. நிதிக்கான மூல ஆதாரம் தொழிலைத் தொடங்குபவர்கள் குறிப்பிட்டுள்ள நிதி ஆதாரங்கள் போதுமானவைகளாக இருக்க வேண்டும். தேவைப்படுகின்ற போது நிதி கிடைக்க வேண்டும்.

3. இலாபத்திறன் நியாயமான காலத்திற்குள் தொழில் இலாபம் ஈட்ட வேண்டும். இலாபம் நஷ்டம் இல்லாத நிலைமை விரைவில் அடைய வேண்டும், அல்லது இலாபம் ஈட்டும் நிலையை அடைய வேண்டும். பல்வேறு சோதனைகளை மேற்கொள்ள வேண்டும். அதாவது, விற்பனைக்கான நிகர லாபம், சமபங்கு மூலதனம் ஈடுபடுத்தியதற்கான விளைவு போன்றன இலாபத்திறனுக்கான சோதனை ஆகும். நிதி நிறுவனங்கள் இலாபத்திறனைக் தீர்மானிக்க அக விளைவு வீத முறையை ஈடுபடுத்துகின்றனர். இவ்விளைவு வீதம் 15% அல்லது அதற்கு மேலிருந்தால் சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

4. திருப்பிச் செல்லும் காலவரம்பு வாங்கும் கடன் திருப்பி செலுத்தப்பட வேண்டுமாதலால், கடன் அளிக்கும் பொழுதே அதைத் திருப்பிச் செலுத்தும் கால அளவு வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும். இது கடன் வாங்குவோரின் நிதி நிலையையைப் பொறுத்தே அமைகின்றது. நிதி வாய்ப்பு எளிமையைக் கண்டறிய மேற்கூறியவைகள் பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

**மேலாண்மைத் திறன்**

நிர்வாகத் திறமை, தொழில் நுணுக்கத் திறன், வாய்மை, கடன் வாங்கும் நிறுவனத்தின் சாதனங்கள், உயர்நிலை மேலாண்மையாளர்கள் போன்றவை கடன் விண்ணப்பத்தை மதிப்பிடுவதற்கு நிதி நிறுவனங்களுக்கு உதவுகின்றன. திறமையான மற்றும் நேர்மையான மேலாண்மையைக் கொண்டு இருக்கின்ற நிறுவனங்களின் கடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மேலாண்மை மதிப்பீடு செய்வது காலவரைக் கடனளிப்பதற்கான உரைகல்லாகக் கூறப்படுகின்றது.

நிறுவனத்தின் கடன் விண்ணப்பத்தை அல்லது காலவரைக் கடன் முனையை மதிப்பிட மேற்கூறியவைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**<u>வினாக்கள்</u>**

1.கிராமப்புற வளர்ச்சிக்கு திட்டத்தின் நோக்கங்கள் ?
2. திட்ட வடிவமைப்பு என்றால் என்ன?
3. மூலதனத் திட்டமும் அதன் முக்கியத்தும் பற்றி கூறுக?
4. மேலாண்மைத் திறன் மற்றும் நிதியிடலில் உள்ள முக்கியத்துவம் என்ன ?
5. வாய்ப்பு எளிமை அறிக்கையின் பொது வடிவங்கள் யாவை ?
6. வியாபார வாய்ப்பு எளிமை
7. கடன் விண்ணப்பத்தை மதிப்பிடுதல் எவ்வாறு?
8. நிதி வாய்ப்பு எளிமையை விவரிக்க?
9. மேலாண்மைத் திறன் விவரிக்க?
10. ஒரு சிறந்த தொழில் அமைப்பின் இயல்புகள்?

## குறிப்பு

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

## அலகு–V

## இந்திய ரிசா்வ் வங்கியும் அதன் பணிகளும்

## RESERVE BANK AND ITS FUNCTIONS

நமது நாட்டிற்கென்று தனியே ஒரு மைய வங்கியை நிறுவ வேண்டும் என்பதை முதன் முதலானக 1773 ஆம் ஆண்டில் வாரன் ஹேஸ்டிங்ஸ் வலியுறுத்தினாா். அவரது விருப்பப்படியே பீகாா், வங்காளம் ஆகியவற்றுக்காக பொது வங்கி என்ற பெயரில் (General Bank of Bengal and Bihar) நிறுவப்பட்டது. ஆயினும் அது அற்ப ஆயுளில் முடித்து விட்டது. 1835 ஆம் ஆண்டில் வெள்ளி நாணயம் வெளியிடப்பட்டு நாடு முழுவதும் ஒரே சீரான பணப் புழக்கத்துக்கு வழிகுக்கப்பட்டது. தொடந்து வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சியடைந்தால், 1870 ஆம் ஆண்டில் தங்க மாற்றத் திட்டம் (Gold Exchange Standard) புகுத்தப்பட்டது எனலாம். இவ்வங்கியே காலப்போக்கில் நமது நாட்டின் மைய வங்கியாக மாற்றப்படும் என்று கருதப்பட்டது. ஆனால் 1926 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஹில்டன் யங் கமிஷன் ( Holiton Young Commission) வேறு ஒரு வங்கியைத் தனியே மைய வங்கியாக நிறுவ வேண்டும் என்று யோசனை தெரிவித்தது. அவ்வங்கிக்கு “ இந்திய ரிசா்வ் வங்கி” எனப் பெயரிடப் பட வேண்டும் எனவும், அதனிடமே மைய வங்கிப் பணிகள் அனைத்தும் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும், யோசனை கூறியது. இதன் அடிப்படையில் 1927 ஆம் ஆண்டில் ஒரு மசோதா தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இருந்த எதிா்ப்பு காரணமாக இம்மசோதா அப்போதே திரும்பப் பெறப்பட்டது. ஆயினும் 1931 ஆம் ஆண்டில் மத்திய வங்கி விசாரனைக் குழு (Central Banking Enquiry Commission) மைய வங்கியின் தேவையை மீண்டும் வலியுறுத்தியது. இதனால் 1934 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டப்படி, இந்திய ரிசா்வ் வங்கி நிறுவப்பட்டு 1935 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி முதல் செயல்படத தொடங்கியது. தொடக்கத்தில் இவ்வங்கி பங்குதாரா்களின் வங்கியாகவோ ஆரம்பிக்கப்பட்டது. இதன் தொடக்க மூலதனம் 5 கோடி ரூபாய் ஆகும். இதில் ஒரு பகுதி (44 %) மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டு மீதிப் பங்குகள் தனியாா் வசஅம வழங்கப்பட்டன. ஆயினும், இதனை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற கருத்து இரண்டாம் உலகப் போா் முடிந்த பின்னா் வலிமை பெறத் தொடங்கியது. எனினும், 1948 ஆம் ஆண்டில் தான் இவ்வங்கி நாட்டுமையாக்கப்பட்டு, அதன் பங்குகள் தனியாரிடமிருந்து மத்திய அராசல் நட்ட ஈடுக் கொடுத்து (விலைக்கு) பெறப்பட்டன. 1949 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி முதல் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியாகச் செயல்படத் தொடங்கியது.

### நிா்வாக இயந்திரத்தின் கட்டமைப்பு ( Structure of Administrative Machinery)

நன்கு கட்டமைக்கப்பட்ட நிா்வாக இயந்திரத்தினால் இந்திய ரிசா்வ் வங்கி நிா்வகிக்கப்பபடுகிறது. இந்திய ரிசா்வ் வங்கியின் அமைப்பு சாா்ந்த கட்டமைப்பை பின்வரும் வரைபடம் மூலம் நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

### வங்கியின் நிா்வாகம் (Management of the Bank )

ரிசா்வ் வங்கியின் நிா்வாகம் ஒரு மத்திய இயக்குநா் குழு வசம் (Central Board of Directors) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் இருபது உறுப்பினா்கள் இருப்பாா்கள். இக்குழுவின் தலைவராக அதன் ஆளுநா் (Governor) இருப்பாா். இக்குழு பின்க்கண்டவாறுஅமைக்கப் பெற்றுள்ளது.

1. ஒரு ஆளுநா், நான்கு துணை ஆளுநா்கள்
2. நான்கு வட்டாரக் குழுக்களில் இருந்தும் அரசு நியமனம் செய்யும் நான்கு இயக்குநா்கள்.
3. மத்திய அரசு நியமிக்கும் பத்து இயக்குநா்கள்.
4. மத்திய அரசு நியம்க்கும் ஓா் அரசு அதிகாரி.

எனவே, இவ்வங்கியின் நிர்வாகிகளை நியமிக்கும் பொறுப்பு மத்திய அரசு வசமே உள்ளது என்பது விளங்கும். இவர்களில் ஆளுநர், துணை ஆளுநர்கள் அனைவரும் ஐந்தாண்டு காலத்துக்கு மேற்பட்டால் அரசு நிர்ணயம் செய்யும் காலத்துக்கு பதவி வகிப்பார்கள். மற்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் நான்கு ஆண்டுகள் ஆகும். மத்திய அரசு அதிகாரியின் பதவிக் காலம் குறிப்பிடப்படுவது இல்லை. அவர் அரசு விரும்பும் காலம் வரையிலும் பதவியிலிருப்பார். பெரும்பாலும், மத்திய அரசு நிதி அமைச்சகத்தின் செயலாளரே இப்பதவியில் நியமிக்கப்படுவார்.

மையக் குழுவிற்கு ஆலோசனை கூற நான்கு வட்டாரக் குழுக்கள் (Local Boards) உள்ளன. இக்குழுக்கள் மும்பை, தில்லி, கோல்கத்தா, சென்னை, ஆகிய நகரங்களில் உள்ளன. இதில் ஐந்து உறுப்பினர்கள் இருப்பார்கள் இவர்களுக்கு மத்திய அரசால் நியம்க்கப் படுபவர்களயாவர். இவர்கள் கூடுமானவரை அந்தந்த வட்டாரங்களின் பொருளாதார நலன்கள், கூட்டுறவு வங்கிகள், நாட்டு வங்கிகள், (Indigenous Bankers) ஆகியவற்றின் பிரதிநிதிகளாக இருப்பார்கள். ஆனால் மைய நிர்வாகம்க் குழுவின் பத்து உறுப்பினர்களும் அவ்வாறு இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. இவர்களது பதவிக் காலம் நாள்கு ஆண்டுகள் ஆகும். இவர்களுள் ஒருவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவா. இவற்றின் முக்கியமான பணி மையக் குழுவிற்கு ஆலோசனை கூறுவதேயாகும்.

**ரிசர்வ் வங்கியின் பணிகள் (Functions of the RBI)**

மைய வங்கியின் முக்கியப் பணிகளில் நாட்டுக்கு நாடு வேறுபாடு இல்லை என்றாலும் அவற்றின் நோக்கங்களும், கொள்கைகளும் அந்நாடுகளின் பொருளாதார அமைப்பு, வளர்ச்சி, சூழ்நிலை ஆகியவற்றுக்கு ஏற்ப மாறுபடும் என்பது முன்பே கூறப்பட்டது. நமது ரிசர்வ் வங்கியின் பணிகள் ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் மூன்றாவது அத்தியாயத்தில் (III – Chapter of the Reserve Bank of India Act) விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :

**1. அரசுகளின் வங்கி (Banker to the Governments):**

நமது ரிசர்வ் வங்கியின் முதன்மையான பணி மத்திய, மாநில அரசுகளின் வங்கியாகச் செயல்படுவதாகும். தேசியக் கடன் நிர்வாகம் உள்ளிட்ட அரசின் எல்லா வங்கி நடவடிக்கைகளையும் இவ்வங்கியே கவனித்து வருகின்றது. மத்திய, மாநில, அரசுகள் இவ்வங்கியோடு செய்து கொண்ட ஒப்பந்துங்களின்அடிப்படையில் அரசுகளின் கணக்குகளை இவ்வங்கி நிர்வகித்து வருகின்றது. அரசின் ரொக்க இருப்புகளை வைத்திருப்பதற்கு வட்டி எதுவும் கிடையாது. ஆனாலும் பொதுக் கடனை (Public Dept or National Dept) நிர்வகிப்பதற்கு அரையாண்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு இரண்டாயிரம் ரூபாய் அரசு கம்ஷனாக செலுத்த வேண்டும் இதற்கு வட்டி கிடையாது. ஆனால் மத்திய அரசுக்கு குறைந்தபட்ச ரொக்க இருப்பு என்ற அளவு ஏதும் கிடையாது.

இவ்வங்கி பொதுக் கடனை நிர்வகிப்பதோடு அரசுக்காகக் கடனும் திரட்டி அளிக்கின்றது இத்தைகைய கடன்கள் இருப்புச் சான்றிதழ்கள் (Stock Certificates) வாக்குறுதிப் பாத்திரங்கள் (Promissory Notes) போன்றவற்றை வெளியிடுவதன் மூலமாகப் பெறப்படுகின்றன. மேலும், மாநில அரசுகளுக்குப் பணப் பற்றாக்குறை ஏற்படும் பொழுது அவற்றிற்கு வழிவகை முன்பணக் கடன்கள் (Ways and Means Advances) வழங்குகின்றது. இதற்கு மேலும் மாநில அரசுகள் அதிகப்பற்று (Overdraft) கடன் பெறலாம்.

இப்பணிக்களைத் தவிர, மற்ற நாடுகளின் மைய வங்கிகளைப் போன்று இது அரசுக்கு ஆலோசகராகவும் விளங்குகின்றது. மத்திய அரசின் நிதி அமைச்சகத்தோடு ( Finance Ministry) இதற்கு நெருங்கிய தொடர்பு உண்டு. அரசுக்கு நிதி திரட்டுதல், திட்டமிடுதல் போன்றவற்றில் ஆலோசனை

வழங்குகின்றது. விவசாயக் கடன்கள் (Agricultural Finance), தொழில் நிதி (Industrial Finance) ஆகியவற்றில் இதற்குத் தனிப் பொறுப்பு உள்ளது.

**2. பணம் வெளியிடுதல் ( Bank of Issue) :**

இந்திய ரிசர்வ் வங்கியில், வெளியிட்டுத் துறை (Issue Department), வங்கித் துறை (Banking Department) என்ற இரு பெரும் துறைகள் உள்ளன. ஒரு ரூபாய் நாணயம் அல்லது நோட்டு மற்றும் சில்லறை நாணயங்கள் நீங்கலாக மற்ற கரன்சி நோட்டுக்களை வெளியிடுவதற்கான முற்றுரிமை (Sole Right) இவ்வங்கிகளிடமே உள்ளது. இதன் வெளியிட்டுத் துறை தக்க சொத்துக்களை ஈடாக வைத்துக் கொண்டு கரன்சி நோட்டுக்களை வெளியிடுகின்றது. இச்சொத்துகள் வங்கித் துறையின் சொத்துகளில் இருந்து வேறுப்பட்டவை ஆகையால், இவை தனியே நிர்வகிக்கப்படுகின்றன. இவங்கி தொடங்கப்பட்டதில் இருந்து 20 ஆண்டுகள் வரையிலும் வீத அளவுக் காப்பு முறையை (Proportional Reserve System) பின்பற்றப்பட்டு வருகின்றது. ஐந்தாண்டு திட்டங்களை நிறைவேற்றப் பெருமளவில் பணம் தேவையாக இருந்ததால், பண வெளியீட்டில் செகிழ்வுத் தன்மையை (Elastic Structure) ஏற்படுத்தும் நோக்கத்துடன் இம்மாற்றம் செய்யப்பட்டது. இப்புதிய ஏற்பாட்டின்படி பண வெளியீட்டுக்கு ஈடாக 515 கோடி ரூபாய் மதிப்புக்கு காப்பீடு இருக்க வேண்டும் (400 கோடி ரூபாய் அந்நியப் பத்திரங்களும் 115 கோடி ரூபாய் தங்க இருப்பும்). பின்னர் 1947 ஆம் ஆண்டில், இத்தொகை 200 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டது. இதில் தங்க இருப்பு 115 கோடி ரூபாய்க்கு குறையக்கூடாது. அந்நியப் பத்திரங்கள் மதிப்பு 400 கோடி ரூபாயிலிருந்து 85 கோடி ஙபாயாக குறைக்கப்பட்டது.மேலும் அந்நியப் பத்திரங்களின் அளவை மேலும் குறைக்கவும் வங்கிக்கு அதிக அதிகாரம் அளிக்கப்பட்டது. இதானல் நாட்டில் வெராவணிப் புழக்கம் ஆண்டுத்தோறும் அதிகரித்க் கொண்டே வருகின்றது. இதற்கு அரசின் பற்றாக்குறை பட்ஜெட்டுகளே (Deficit Budgets) காரணம் எனலாம். 1950 ஆம் ஆண்டில், நமது நாட்டில் புழக்கத்தில் இருந்த காகிதப் பணம் 1,240 கோடி ரூபாய் ஆகும். 1973 ஆம் ஆண்டில் ,இது 5,535 கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது. இது மிகக் கடுமையான விளைவுகளைத் தோற்றுவித்துள்ளது. இதுப்பற்றி ஆராய்வது இந்நூலின் நோக்கம் அன்று. ஆகையால் இதன் விளைவுகளைப் பற்றி இங்கே விரிவாக ஆராயவில்லை.

**3. வங்கியரின் வங்கி (Banker to the Banks) :**

மற்ற மைய வங்கிகளைப் போலவே இந்திய ரிசர்வ் வங்கியும் இந்நாட்டில் உள்ள வணிக வங்கிகளின் வங்கியாகவும் பணியாற்றுகின்றது. வங்கிக் கம்பெனிகள் சட்டப்படி பட்டியலில் சேர்க்கப்பட்ட எல்லா வங்கிகளும் (Scheduled Banks) அவற்றின் நடப்பு வைப்புகளின் (Current Deposits) ஐந்து சதவிதமும் தவணை வைப்புகளில் (Time Deposits) சதவிதமும் ரிசர்வ் வங்கியிடம் ரொக்க இருப்பாக வைத்து இருக்க வேண்டும். 1962 ஆம் ஆண்டில், இவ்விருவகை வைப்புகளையும் சேர்த்து அவற்றில் 3 சதவீதம் ரொக்க இருப்பாக வைத்திருப்பது போதுமானது உன்று மாற்றப்பட்டது. மேலும், நமது வணிக வங்கிகள் இதனிடம் கடன்பெறவும் முடியும். எனவே, இவ்வங்கி மற்ற வணிக வங்கிகளுக்குக் கடன் பெறக் கடைசி பற்றுக் கோடாகவும் (Lender of the Last Resort) விளங்குகின்றது.

**4. அரசின் முகவர் மற்றும் ஆலோசகர்**

**(Agent and Adviser of the Government)** :

இந்திய ரிசர்வ் வங்கி அரசின் முகவராகவும் ஆலோசராகவும் பண்புரிகின்றது. இது பின்வரும் பணிகளை ஆற்றுகின்றது :

1. அரசின் முகவர் என்ற நிலையில், இது அரசின் சார்பில் பொதுக் கடனை நிர்வகிக்கிறது மற்றும் அரசின் கடன்களை ஏற்கின்றது.
2. இது அரசுப் பத்திரங்கள், கருவூல உண்டியல்கள் போன்றவற்றை வெளியிடுகிறது.

3. அனைத்து முக்கியமான பொருளாதார மற்றும் நிதி விஷயங்களில் இது அரசின் நிதிசார்ந்த ஆலோசகராகப் பணியாற்றுகின்றது.

**5. தேசிய தீர்வகமாக இயங்குதல்**

**(Acts as National Clearing House) :**

இந்தியாவில், இந்திய ரிசர்வ் வங்கி வங்கி நடவடிக்கைகளை தீர்க்கும் தீர்வமாக இயங்குகிறது. இதனால் வங்கிகளுக்கு இடையிலான கோரிக்கைகள் எளிதில் தீர்க்கப்படுகின்றன. மேலும், தீர்வுகளை சிக்கனமாகவும் மேற்கொள்கிறது. இந்திய ரிசர்வ் வங்கியினால் மேற்கொள்ளப்படும் அனைத்துத் தீர்வக இயக்கங்களும் கணிப்பொறிமயமாக்கப்பட்டுள்ளன. வங்கிகளுக்கு இடையிலான காசோலைகளைத் தீர்வு நடவடிக்கைகள் நாளொன்றிற்கு இருமுறை மேற்கொள்ளப்படுகின்றன. ரூ.1 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள காசோலைகளை தீர்க்கத் தனி வழி உண்டு. இந்திய ரிசர்வ் வங்கி இப்பணியை தேசிய தீர்வகம் என்ற ஒரு பிரிவின் (Cell) கீழ் செயல்படுத்துகிறது. ரிசர்வ் வங்கியில் இதற்கென பிரத்யேகமாக ஒரு அலுவலகம் இல்லாத பொழுது, இந்நடவடிக்கைகள் பாரத ஸ்டேட் வங்கியின் வளாகத்தில் மேற்கொள்ளப்படும். இந்தியாவில் 1998 ஆம் ஆண்டில், 860 தீர்வகங்கள் இயங்கி வந்துள்ளன. அவற்றுள் 14 இந்திய ரிசர்வ் வங்கியாலும், 578 பாரத ஸ்டேட் வங்கியாலும், ஏனைய தீர்வகங்கள் பொதுத் துறை வங்கிகளாலும் இயக்கப்பட்டு வந்துள்ளன.

**6. கடனளிக்கும் கடைசிப் பற்றுக் கோடு (Lender of Last Resort) :**

இந்திய ரிசர்வ் வங்கி கடனளிக்கு கடைசிப் பற்றுக் கோடாக விளக்குகிறது. அதாவது, வணிக வங்கிகளால் வேறு ஏதேனும் வழிகளில் நிதி உதவி பெறப்பட முடியவில்லை எனில், அப்பொழுது கடைசிப் பற்றுக் கோடாக அவை இந்திய ரிசர்வ் வங்கியை அனுகலாம். அவ்விதச் சூழ்நிலைகளில், அந்திய ரிசர்வ் வங்கி நம்பத்தக்க வணிக உண்டியல்கள் உள்ளிட்ட தகுதிவாய்ந்த ஈடுகளின் மீ வண்க வங்கிகளுக்குத் தேவையான கடன் வசதிகளை அளிக்கின்றது. இது வணிக வங்கிகளின் நிதி வள ஆதாரங்களின் ரொக்கமாக்கும் தன்மையை நிர்வகிக்கவும் உதவுகின்றது. மேலும், குறைந்தப்பட்ச ரொக்கக் காப்புகளுடன் தங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இது வணிக வங்கிகளை அனுமதிக்கின்றது. கடளனிக்கும் கடைசிப் பற்றுக் போடு என்ற நிலையில், இது வணிக வங்கிகளின் மீது முழு கட்டுப்பாட்டையும் விதிக்கிறது.

**7. கடன் கட்டுப்பாட்டாளராக இயங்குதல்**

**(Acts as the Controller of Credit) :**

வணிக வங்கிகளால் உருவாக்கப்படும் கடனை இச்திய ரிசர்வ் வங்கி கட்டுப்படுத்துகிறது. இதற்கென இந்திய ரிசர்வ் வங்கி கடன் அளவுக் கட்டுப்பாடு மற்றும் கடன் தன்மை போன்ற இரு முறைகள் பயன்படுத்துகிறது. இந்திய ரிசர்வ் வங்கியால் உபயோகப்படுத்தப்படும் பல்வேறு துறைகளாவன பின்வருமாறு :

1. வங்கி வீதக் கொள்கை.
2. வெளிச் சந்தை நடவடிக்கைகள்.
3. ரொக்க இருப்பு வசதி மாற்றம்.
4. வரம்புத் தேவைகளை நிர்ணயித்தல்.
5. அறிவுறுத்தல்.
6. ஆணைகளை அளித்தல்.
7. நேரடி நடவடிக்கை

இந்திய ரிசர்வ் வங்கி கடனைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பின்வருவனவற்றை அடைகிறது.

1. நாட்டில் தேவை நிலையில் பணத்தை சுழல விடுகிறது.
2. நாட்டில் நிலவும் விலைகளில் நிலைத் தன்மையை நிர்வகிக்கிறது.
3. வணிக சுழற்சிகளின் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துகிறது.

4. அந்நிய செலாவணி வீதத்தின் ஏற்ற இறங்கங்களைக் கட்டுப் படுத்துகிறது.

5. நாட்டில் உற்ப்பத்திச் சார்ந்த துறைனளுக்கு கடனளிக்க வகை நெய்கிறது.

**8. அந்நியச் செலாவணி ஒதுக்கீடுகளின் பாதுகாவலன்**
**(Custodian of Foreign Exchange Reserves) :**

இந்திய ரிசர்வ் வங்கி அந்நியச் செலாவணி ஒதுக்கீடுகளின் பாதுகாவலனாகச் செயல்ப்படுகின்து. போதுமான அளவிலான ஒதுக்கீடுகள் அந்நியச் செலாவணி வீதங்களை நிர்வகிக்க உதவுகின்றன. வீதங்களின் தேவையற்ற ஏற்ற இறங்கங்களைக் குறைப்பதற்கென இது சூழ்றிலைகளுக்கு ஏற்றவாறு அந்நிய நாணயங்களைவ ாங்கலாம் அல்லது விற்கலாம்.

வணிக வங்கிகளைப் போலவே சந்தையில் இருந்து இது அயல்நாட்டுநாணயங்களைவ ாங்கவும் விற்கவும் செய்கிறது. இது போதுமான ஒதுக்கீடுகளை ஏற்படுத்துவதற்கெனவோ அல்லது இந்தியாவிற்குள் திடிரென உள்ளே வந்த அந்நிய நாணயங்களால் ரூபாயின் மதிப்பு உத்தரவாதம் தரப்படாதநிலையில் உயர்வதைத் தடுக்கவோ, அந்நிய நாணயத்தை வாங்கலாம். சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு பன்னாட்டு நாணயங்களின் இலக்கியங்களில் திரட்டை மேலாண்மையை மேற்கொள்ளும் நோக்கோடு அந்நிய நாணயத்தை பன்னாட்டு சந்தையில் வாங்கவும் விற்கவும் செய்யலாம்.

**9. செலாவணிக் கட்டுப்பாடு (Exchange Control) :**

ஒரு நாடு செலுத்தல் வேறுபாட்டு மிகைப் பிரச்சனையை சந்திக்கும் பொழுது, அது அந்நியச் செலாவணியை கட்டுப்படுத்துகிறது மற்றம் செலுத்தல் முறையை தனக்கு நன்மை பயக்கும் விதத்தில் ஒழுங்குப்படுத்துகிறது. 1939 – ல் இரண்டாவது உலகப் போர் தொடங்கியது முதலே இந்தியா அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையால் அவதயுற்று வருகிறது. 1947 ஆம் ஈண்டு மார்ச்சு மாதம் முதல் அந்நியச் செலாவணி ஒழுங்முறைச் சட்டம் இயங்கத் தொடங்கியது. அதன் பின் 1-1-74 முதல் அந்நியச் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம், 1973 அறிதுகப்படுத்தப்பட்டது. தற்பொழுது இது அந்நியச் செலாவணி நிர்வாகச் சட்டமாக 1999 ஆம் ஆண்டில் மாற்றி அமைக்கப்பட்டு நாட்டில் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டை செயலாற்றி வருகிறது. இச்சட்டத்தின் கீழ், இந்திய ரிசர்வ் வங்கிக்கு அந்நியச் செலாவணியை ஒழுங்குப்படுத்தும் அதிகாரம் உள்ளது. உதாரணமாக, நாம் விரும்பும் எந்தப் பொருளை வெண்டுமானலும் இறக்குமதி செய்து அதற்குரிய அந்நியச் செலாவணியை அளிக் இயலாது. வணிகம் தொடர்பான இறக்குமதிகள் வணிகவியல் அமைச்சகத்தில் உள்ள அயல்நாட்டு வணிகத்தின் இயக்குநர் ஜெனரலால் ஒழுங்குப்படுத்தப்படுகின்றன. கண்ணுக்குப் கலனாகாத நடவடிக்கைகளான அயல்நாட்டு வருகை, சுற்றுலாத் துறை, பங்காதாயம், வட்டி செலுத்துதல் போன்ற இந்தியா ரிசர்வ் சங்கியால் ஒழுங்குப்படுத்தப்படுகின்றன.

அதைப்போலவே, இந்தியாவில் குடியுரிமை பெற்றவர்கள் பெறப்பட்ட அல்லது ஈடுப்பட்ட அந்நியச் செலாவணி ஆனது அந்நியச் வெலாவணியை கையாளுவதற்கென அளிக்கப்பட்ட வங்கிகளிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆயினும், 1992 முதல் அந்நியச் செலாவணியைப் பெறுபவர்கள் விரும்பினால், அதில் ஒரு பகுதியை தனியொரு அந்நியச் செலாணிக் கணக்கில் வைப்பில் வைக்கலாம். அக்கணக்கிற்கு , செலாவணி ஈட்டுபவர் அந்நிய நாணயக் கணக்கு என்று பெயர். மேலும், 1994 முதல் அந்நியச் வெலாவணிச் செலுத்தல்கள் மீது இந்திய ரிசர்வ் வங்கியால் விதிக்கப்பட்ட பல கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு உள்ளன.

## 10. பொருளாதார நெருக்கடியோடு போராடுதல் (Fight Against Economic Crisis) :

இந்திய ரிசா்வ் வங்கி நாட்டில் பொருளாதார நிலைத் தன்மையை பெறுதலையே தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. பொருயாதார நிலைத் தன்மைக்கு அபாயம் நேரிடும் பொழுதெல்லாம், ஆற்றல்மிக்க கொள்கை மாற்றங்கள் மற்றும் அவற்றின் நிறைவேற்றம் ஆகியவற்றின் மூலம் பொருளாதாரத்தை முறையான போக்கில் வைக்க உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கிறது.

இவை தவிர இந்திய ரிசா்வ் வங்கியானது நாட்டினுடைய நாணயத்தின் உள்நாட்டு மதிப்பை நிா்வகித்து அதில் ஸ்திரத்தன்மையை உநுதிப்படுத்துதல், நமது ரூபாயின் வெளிப்புற மதிப்பை நிா்வகத்து அதில் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துதல், நமது ரூபாயின் வெளிப்புற மதிப்பை நிா்வகித்தல், பொருளாதார மற்றும் நிதி தொடா்பான புள்ளியியல் விபரங்களைச் சேகரித்துப் புதுப்பித்தல் போன்ற பணிகளையும் ஆற்றுகின்றது.

## வணிக வங்கிகளும் ரிசா்வ் வங்கியின் கட்டுப்பாடும்
## CONTROL OF THE RBI OVER COMMERCIAL BANKS

நமது நாட்டின் வங்கி முறை ரிசா்வ் வங்கி அமைக்கப்படும் வரை கட்டுக் கோப்பில்லாததாக இருந்ததாலும், தொடா்ந்து பல வங்கிகள் முறிந்து மக்கள் மனதில் அச்ச உணா்வு ஏற்படுத்தியதாலும், நமது நாட்டிலுள்ள வணிக வங்கிகளின் மீது ரிசா்வ் வங்கி கடுமையான மேலாதிக்கமும், கட்டுப்பாடும் (Control and Supervision) செலுத்துகின்றது. இக்கட்டுப்பாடுகளைப் பின்வரும் தலைப்புகளில் ஆராய்வோம்.

### 1. பொது வங்கித் தொழிற் கட்டுப்பாடுகள் (General Banking Industry Control Activities)

வங்கிகள் மீது பல்வேறு வழிகளில் ரிசா்வ் வங்கி கடுமையான கட்டுப்பாட்டையும், கண்காணிப்பையும் உருவாக்கியுள்ளது. இவற்றுள் மிக முக்கியமானவை பின்வருமாறு :

1) **முன் அனுமதி (Permission of the RBI) :** வங்கிச் சட்டப்படி எந்த நிறுவனமும் வங்கித் தொழிலை நடத்துவதனால் ரிசா்வ் வங்கியின் முன் அனுதியைப் பெற வேண்டும். மேலும், இவற்றின் செலுத்தப்பட்ட மூலதனமும் குறிப்பிட்ட ஓா் அளவிற்கு இருக்க வேண்டும். இது பற்றி முன்பே கூறப்பட்ட உள்ளது. மேலும், தமது இலாபத்தில் 20 சதவீதத்தை ஒவ்வொரு ஆண்டும் வைப்பு நிதிக்கு (Reserve) ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

2) **கிளைகள் திறத்தல் (Opening of Branches) :** புதிய கிளைகளை வங்கிகள் திறப்பதற்கும் ரிசா்வ் வங்கியின் முன் அனுமதியைப் பெற வேண்டும். மேலும், இது பற்றி ரிசா்வ் வங்கி விதித்துள்ள நெறிமுறைகளைப் பின்பற்றினால் மட்டுமே உரிமம் (Liicence) வழங்கப்படும்.

3) **நிா்வாகத்தின் கட்டுப்பாடு (Control Over Management) :** தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் நிா்வாகக் குழுவில் இவ்வங்கியின் பிரதிநிதி ஒருவரும் அங்கம் வகிப்பாா். இது தவிர மற்ற தனியாா் வங்கிகளின் இயக்குநா், தலைவா், முதன்மைச் செயல் அலுவலா்கள் (Chief Executive Officers), தணிக்கையாளா்கள் ஆகியோரது நியமனமும் ரிசா்வ் வங்கியின் அங்கீகாரத்துக்கு உட்பட்டதேயாகும்.

4) **ஆய்வுகள் (Inspection) :** வங்கிகள் முறையாகவும் ஒழுங்காகவும் தமது பணிகளை ஆற்றி வருகின்றனவா என்பதையும், அவற்றின் நடவடிக்கைகள் வங்கித் தொழிலுக்கு மாறாக அல்லது விரோதமாக இல்லாமல் உள்ளனவா என்பதையும் கண்காணிக்க ரிசா்வ் வங்கிக்கு முழு உரிமை உண்டு. தான் நினைத்த போது இவ்வங்கிகளின் அலுவலகங்களில் உள்ள பதிவேடுகளையும்,

மற்ற ஆவணங்களையும் ஆய்வு செய்யவும், தேவையான புள்ளி விபரங்களைக் கோரவும் இதற்கு உரிமை உண்டு.

**5) வைப்பு வட்டி விகிதங்கள் (Rage of Interest on Deposits) :** வணிக வங்கிகளுக்கிடையே ஆரோக்கியமில்லாத போட்டியை (Unhealthy Competition) தவிர்க்கும் நோக்கத்துடன் நமது வங்கிகள் தவணை வைப்பு உள்ளிட்ட பல்வேறு வைப்புகளுக்கும் வழங்கும் வட்டி வீதத்தை நெறிமுறைப்படுத்தியுள்ளன. இதற்கு மேல் வட்டி வழங்க வணிக வங்கிகளால் இயலாது. இதுபோல் வைப்புகளும் காப்பீடு செய்யப்பட வேண்டும்.

**6) பொதுக் கடன்களும், குறிப்பிட்ட கடன்களும் (General Loans and Selective Advances) :** பல்வேறு வகையான கடன்களுக்கும் வங்கிகள் வசூலிக்க வேண்டிய வட்டி விகிதங்களும் ரிசர்வ் வங்கியால் நெறிமுறைப்படுத்தப்பட்டு உள்ளன. எனினும், இவற்றிற்குக் குறைந்தபட்ச (Minimum) மற்றும் உச்சபட்ச வரம்புகள் (Maximum Limits) மட்டுமே உள்ளன. இவ்வரம்புகளுக்கு உட்பட்டே இவை வட்டி வசூலிக்க வேண்டும்.

**7) முன்னுரிமை பெற்ற துறைகளுக்குக் கடன்கள் (Advances to Priority Sectors) :** ஏற்றுமதி, விவசாயம், சிறுதொழில்கள், சிறு வியாபாரம், சிறிய கைவினைஞர்கள் (Small Artisans), சுயவேலை வாய்ப்புகள் (Self-employment) ஆகியன முன்னுரிமை பெற்ற துறைகளாகும். ஒவ்வொரு வணிக வங்கியும் ஒரு குறிப்பிட்ட சதவீதம் தமது நிதியில் இக்கடன்களுக்கு ஒதுக்க வேண்டும் என ரிசர்வ் வங்கிணயிட்டுள்ளது.

**8) ஏற்றுமதி நிதிவசதி (Export Financing)** : ஏற்றுமதிக் கடன் பொறுப்பு உறுதிக் கழகம் (Export credit Guarantee Corporation) ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கக் காப்பீடுகளை (Export Covers) வழங்குகின்றது. இக்காப்பீடுகளைப் பொறுப்புறுதியாகப் பெற்றுக் கடன் வழங்க வேண்டியது வணிக வங்கிகளின் கடமையாகும்.

**9) வங்கிகள் இணைதல் (Merger and Amlagamation of Banks) :** பொது நலனை உத்தேசித்து இரண்டு மூன்று வங்கிகளை இணைத்து ஒரே வங்கியாக்குமாறு ஆணையிட ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் உள்ளது. இதுபோல் பல வங்கிகள் தாமாகவே விரும்பி இணைந்தாலும் (Voluntary Amalgamation) ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியைப் பெறவேண்டும்.

**10) வங்கியின் கலைப்பு (Liquidation) :** ரிசர்வ் வங்கி எந்த வணிக வங்கியையும் கலைத்து விடும்படி உத்தரவு இடவும் அதிகாரம் பெற்றுள்ளது. இது போல் வங்கிகள் தாமாகவே விரும்பிக் கலைப்பதாயினும் இதன் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

**2. அந்நியச் செலவாணிக் கட்டுப்பாடுகள் (Foreign Exchange Control)**

வணிக வங்கிகள் அந்நியச் செலவாணி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இதுபற்றி விரிவாக ஆராய்வது இந்நூலின் நோக்கம் அல்ல. எனவே, இங்கே இது பற்றி ஆராயவில்லை.

**3. கடனைக் கட்டுப்படுத்துதல் (Control of Credit)**

இந்திய ரிசர்வ் வங்கி கடனைக் கட்டுப்படுத்த வேண்டிய பணியையும் மேற் கொள்ள வேண்டியுள்ளது. வங்கி வீதம் (Bank Rate), வெளிச் சந்தை நடவடிக்கைகள் (Open Market Operations), ரொக்க இருப்பு விகிதத்தில் மாறுதல்கள் செய்தல் (Changing the Reserve Ratio) ஆகிய மரபுவழிக் கருவிகளைக் கொண்டும், தேர்ந்தெடுத்த கடன் கட்டுப்பாடு (Selective Credit Control) முதலிய பல புதிய கருவிகளைப் பயன்படுத்தியும் இது இப்பணியை ஆற்றி வருகின்றது. இது பற்றி பின்னர் விரிவாக ஆராயப்படும்.

**4. அந்நியச் செலவாணி நிர்வாகமும் கட்டுப்பாடும்**
**(Control ad Management of Foreign Exchange Reserves):**

நமது செலவாணியின் வெளிநாட்டு மதிப்பை நிலைப்படுத்துவது ரிசர்வ் வங்கியின் முக்கியமான பணிகளுள் ஒன்று ஆகும். இந்தியா, சர்வதேச நிதி நிறுவனத்தில் (International Monetary Fund) உறுப்பினராகச் சேர்ந்த பிறகு அந்நியச் செலவாணியை குறிப்பிட்ட விகிதத்தில் வாங்குவதற்கும், விற்பதற்கும் மற்றும் அந்நியச் செலாவணியை குறிப்பிட்ட விகிதத்தில் வாங்குவதற்கும், விற்பதற்கும் மற்றும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துவதற்கும் உரிய முழுப் பொறுப்பும் அதிகாரமும் இவ்வங்கியிடம் அளிக்கப்பட்டுள்ளது. அநேகமாக நமது முழு அந்நியச் செலவாணி இருப்பு ஆனது ரிசர்வ் வங்கியிடமே உள்ளது. இப்பணிகளை செலவாணிக் கட்டுப்பாட்டுத் துறை (Exchange Control Department) கவனிக்கின்றது.

**5. முன்னேற்றப் பணிகள் (Promotional Functions) :**

நம் நாடு விடுதலை அடைந்த பிறகு, பொருளாதார வளர்ச்சியல் ரிசர்வ் வங்கியும் முக்கியப் பங்கு பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனால் பல்வேறு புதிய பணிகளை ரிசர்வ் வங்கி மேற்கொள்ள வேண்டியதாயிற்று. இப்பணிகள் பொதுவாக உலக நாடுகளில் மைய வங்கிகள் மேற்கொள்ளாத புதுமையான பணிகள் எனலாம். இவற்றுள் முக்கியமானவை விவசாயக் கடன்களும் (Agricultural Finance) தொழிற் கடன்களும் (Industrial Finance) ஆகும். விவசாயக் கடன் துறை (Agricultural Credit Department) என்ற பிரிவு 1935 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது. இப்பிரிவு விவசாயக் கடன் நிலவரம் பற்றி ஆராய்ந்து அரசுக்கும் கூட்டுறவு வங்கிகளுக்கும் ஆலோசனை கூறுகின்றது. மேலும், இதன் விவசாயக் கடன் பணிகளையும் மற்ற வங்கிகளின் கடன் பணிகளையும், இணைக்கின்றது. இதன் மூலம் கூட்டுறவு அமைப்புகளுக்குக் குறுகிய கால, நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

இது போன்று தொழில்களுக்கு நிதி வழங்குவதிலும் ரிசர்வ வங்கியின் பங்கு மகத்தானதாகும். நமது நாட்டில் மூலதன அங்காடி (Capital Market) போதுமான அளவில் வளர்ச்சியடையாத நிலையில் ரிசர்வ் வங்கியே முன்னின்று பல்வேறு வளர்ச்சி வங்கிகளையும், தொழில் நிதி நிறுவனங்களையும் மத்திய, மாநில அளவில் நிறுவுவதற்குப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டுள்ளது. இவ்வங்கியின் தொழில் நிதித் துறை (Industrial Finance Department) தொழில் நிதி சம்பந்தமான பணிகளைக் கவனிக்கின்றது. மத்திய அரசு தொடங்கிய கடன் உத்தரவாதத் திட்டத்தின் (Credit Guarantee Scheme) நிர்வாகத்தையும் இத்துறையே கவனிக்கின்றது.

**6. வங்கிகளின் முதல் நிலை அதிகாரிகளுக்குப் பயிற்சி**
**(Taining Facilities to Supervisory Staff) :**

வங்கிகளில் பணியாற்றும் முதல் நிலை அலுவலர்களுக்குப் போதுமான பயிற்சி தரவும், வங்கித் தொழிலில் புதிய சிந்தனையையும் புதிய அணுகுமுறையையும் ஏற்படுத்தும் நோக்கத்துடனும் பல பயிற்சி நிறுவனங்களை ரிசர்வ் வங்கி ஆரம்பித்துள்ளது. 1954 ஆம் ஆண்டில், பம்பாயில், வங்கியர் பயிற்சிக் கல்லூரி (Banker’s Training College) தொடங்கப்பட்டது. தொடர்ந்து 1969 ஆம் ஆண்டில், பூனாவில் கூட்டுறவு வங்கியாளர்கள் பயிற்சிக் கல்லூரி துவக்கப்பட்டது. வங்கித் தொழிற் பயிற்சி, ஆராய்ச்சி ஆகியவற்றை ஒருங்கிணைக்கவும் (Co-ordinate) மற்ற பயிற்சி நிலையங்களுக்குத் தலைமை நிறுவனமாக விளங்கவும் பம்பாயில் 1969 ஆம் ஆண்டு தேசிய வங்கி நிர்வாகக் கல்விக் கழகம் (National Institute of Bank Management) என்ற அமைப்பு ஏற்பட்டது. இந்நிறுவனங்களில் நாட்டிலுள்ள வங்கிகள் தமது அலுவலர்களை அனுப்பிப் பயிற்சி பெறச் செய்து தமது பணிகளின் தரத்தை உயர்த்திக் கொண்டுள்ளன.

**சுயபரிசோதனை**

1. நமது நாட்டிற்கென்று தனியே ஒரு மைய வங்கியை நிறுவ வேண்டும் என்பதை முதன் முதலானக ____________ ஆண்டில் வாரன் ஹேஸ்டிங்ஸ் வலியுறுத்தினார் ( 1773).

2. ரிசர்வ் வங்கியின் பணிகள் ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் ________________ விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன( மூன்றாவது அத்தியாயத்தில்)

3. விவசாயக் கடன் துறை என்ற பிரிவு __________ ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது.( 1935)

## நபார்டு (NABARD)
## NATIONAL BANK FOR AGRICULTURE AND RURAL DEVELOPMENT

1979 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், கிராமப்புறக் கடன்களுக்காக நிறுவப்பட்ட நிறுவனங்கள் எவ்வாறு பணிபுரிகின்றன என்பதை மறு பரிசீலனை செய்யும் நோக்குடன் சிவராமன் கமிட்டி என்ற கமிட்டியை அரசு நியமித்தது. இக்கமிட்டி கிராமப்புறக் கடன் பற்றி விரிவாக ஆராய்ந்து தனது அறிக்கையை 1981 ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது. இதுவே, கிராமப்புற நிறுவனக் கடன்கள் பற்றிய முதல் அறிக்கை எனலாம். இக்கமிட்டி கிராமப்புறக் கடன் பற்றி மிகவும் விரிவாக ஆராய்ந்து இந்த அறிக்கையை சமர்ப்பித்தது.

**சிவராமன் கமிட்டியின் சிபாரிசுகள்**

**(Recommendations of Sivaraman Committee)**

இக்கமிட்டியின் சிபாரிசுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. கூட்டுறவுக் கடன் அமைப்பு (Co-operative Credit Structure) : ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (Integrated Rural Development Programme) சிறப்பாகச் செயல்பட கிராமப்புற அடித்தள மக்களுக்குப் பயன்படும் வகையில் அமைக்கப்பட வேண்டும் என்னும் தற்போது உள்ள கூட்டுறவின் மூன்றடுக்கு (Co-operative Three Tier System) முறையை மாற்ற கமிட்டி விரும்பவில்லை. எனினும், முடிந்த வரையில் குறுகிய காலக் கடன்களையும், நீண்ட காலக் கடன்களையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்று கமிட்டி சிபாரிசு செய்துள்ளது. மேலும், முதனிலைக் கூட்டுறவு சங்கங்களைப் பல நோக்குக் கூட்டுறவு நாணயச் சங்கங்களாக (Multi-purpose Co-operative Credit Societies) மாற்றவும், விவசாயிகளின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் வகையில் அவைகளை மாற்றி அமைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறியது.

பணத்தை மோசமாகவும், ஊதாரித்தனமாகவும், தவறாகவும் செலவு செய்து வரும் நில வள வங்கிகளைப் புனரமைப்பு செய்து வசூலாகாத கடன் பாக்கிகளை வசூல் செய்யும் மாநில அரசுகள் உதவி புரிய வேண்டும் என்று இக்கமிட்டி குறிப்பிட்டுள்ளது.

**2. வணிக வங்கிகளும் வட்டார கிராமப்புற வங்கிகளும் (Commercial Banks and Regional Rural Banks) :** வணிக வங்கிகள் கிராமப்புறங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் (Semi-urban Areas) உடனடியாகத் தனது பணிகளை வரிவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. வணிக வங்கிகளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிவசதி அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. கிராமப்புற நிதிவசதிக்கு ஏற்பாடு செய்ய வட்டார கிராம வங்கிகளே சிறந்த அமைப்பு என்று குறிப்பிட்டது. கூடுமான வரை, கிராமப்புறங்களுக்குத் தேவையான பகுதியில் வங்கி விஷயங்களை எல்லாம் வட்டார கிராம வங்கி வசம் ஒப்படைத்து விடலாம் என்றும் கூறியது.

**நபார்டு அமைத்தல்**

**(Setting up of the NABARD)**

சிவராமன் கமிட்டி கிராமப்புறக் கடன் வசதி பற்றி முறையாகக் கவனித்துத் திறமையாகச் செயல்பட புதிய நிறுவனம் ஒன்றை அமைத்தாக வேண்டும் என்று கூறியதன் அடிப்படையில் மற்ற எல்லா விவசாயக் கடன் நிறுவனங்களுக்கும தலைமை நிறுவனமாக (Apex Institution) செயல்படும் விதத்தில் விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய வங்கி (National Bank for Agriculture and Rural Development (NABARD)) என்ற நிறுவனத்தை நிறுவும்படி ஆலோசனை கூறியது. இதன் அடிப்படையில் 1982 ஆம் ஆண்டு ஜுலை மாதம் நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் நபார்டு ஒரு பொதுக் கார்ப்பரேஷனாக நிறுவப்பட்டது. இந்நிறுவனம் விவசாய மறுநிதிக் கழகத்தின் பணிகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டது. இது போல் ரிசர்வ் வங்கியானது கூட்டுறவு வங்கிகளுக்கும், வட்டார கிராம வங்கிகளுக்கும் அளித்து வந்த மறுநிதி வசதிகளையும் ஏற்றுக் கொண்டது. நபார்டின் மூலதனத்தில் பாதி ரிசர்வ் வங்கியினாலும் மீதி மத்திய அரசினாலும் வழங்கப்பட்டுள்ளது. இதனை மூன்று இயக்குநர்கள் கொண்ட குழு நிர்வகிக்கின்றது. மேலும், ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் (Deputy Governer) ஒருவர் இதன் தலைவராக (Chairman) இருப்பார்.

**நபார்டின் மூலதனமும் நிதிவசதிகளும்**

**(Capital and Financial Resources)**

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.500 கோடிகள் ஆகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.100 கோடிகள் ஆகும். இதில் பாதியை ரிசர்வ் வங்கியும் மீதிப் பாதியை மத்திய வங்கியும் அளித்துள்ளன. மேலும், உலக வங்கியிடமும் மத்திய அரசிடமும், நபார்டு கடன் பெற்று வருகின்றது.

ரிசர்வ் வங்கியிடம் இருந்த தேசிய விவசாய (நீண்ட கால நடவடிக்கைகள் மற்றும் நிலைநிறுத்தல்) நிதி (National Agricultural (Long-term Operation and Stabilisation) Fund) இவ்வங்கியிடம் மாற்றப்பட்டது. மேலும், ரிசர்வ் வங்கி தனது இலாபத்தில் 300 கோடி ரூபாயை 1982 ஆம் ஆண்டு இதற்கு மானியமாக அளித்தது. மேலும், கடன் பத்திரங்கள் வெளியீடு மூலம் ரூ. 33 கோடிகள் கடன் திரட்டியுள்ளது.

உலக வங்கியிடமிருந்தும் பன்னாட்டு வளர்ச்சி மன்றத்திடமிருந்தும் (IDA) பல்வேறு திட்டங்களை நிறைவேற்றக் கடன் வாங்கியுள்ளது. மேலும், பிரிட்டன், அமெரிக்கா, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்தும் கடன் வாங்கியுள்ளது.

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட அன்று ரிசர்வ் வங்கிக்கு மாநிலக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும் வட்டார வளர்ச்சி வங்கிகளிடமிருந்தும் வர வேண்டிய பாக்கியான 760 கோடி ரூபாயும் இந்நிறுவனத்திடம் மாற்றப்பட்டது. மேலும், 200 கோடி ரூபாய் மாநிலக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் வட்டார வளர்ச்சி வங்கிக்கும் குறுகிய காலக் கடன் வழங்குவதற்காக ரிசர்வ் வங்கி இந்நிறுவனத்திடம் வழங்கியது. எனவே, இந்நிறுவனத்தின் வசம் போதுமான நிதிவசதி உள்ளது என்பது தெளிவாகும்.

**பணிகள் (Functions of the NABARD)**

இவ்வங்கியின் பணிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. விவசாயம், சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள் கைவினைஞர்கள், உடல் ஊனமுற்றோர், கிராமப்புற நுட்பத் தொழில்கள் (Village Crafts) ஆகியவற்றின் பொருளாதார வளர்ச்சியை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தோடு ஒன்று இணைக்கும் வகையில் மறு நிதி உதவி செய்தல்.
2. மாநிலக் கூட்டுறவு வங்கிகள், வட்டார கிராம வங்கிகள், நில வள வங்கிகள், ரிசர்வ் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற நிதி

நிறுவனங்களுக்கு குறுகிய கால, நீண்ட காலக் கடன்கள் வழங்குதல்.

3. கூட்டுறவுச் சங்கங்களின் நிரந்தர மூலதனமான பங்குகளில் முதலீடு செய்ய மாநில அரசுகளுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்குதல்.

4. மத்திய அரசினால் விவசாய வளர்ச்சி, கிராமப்புற வளர்ச்சி ஆகியவற்றுக்கு உதவும் நிறுவனம் என்று அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்குக் கடன் வழங்குதல், அவற்றின் பங்குகளில் முதலீடு செய்தல்.

5. மத்திய மாநில அரசுகள், திட்டக்குழு, மற்றும் அகில இந்திய அளவிலும் மாநில அளவிலும் கிராமப்புற வளர்ச்சிக்காகப் பாடுபடும் நிறுவனங்கள் ஆகியவற்றின் பணிகளை ஒருங்கிணைத்தல்.

6. வட்டார கிராம வங்கிகள் (RRBs), கூட்டுறவுச் சங்கங்கள், முதனிலைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தல்.

7. விவசாயத்தில் ஆராய்ச்சியை மேற்கொள்ளவும், கிராமப்புற வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதற்கும், ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஏற்ற திட்டங்களைத் தீட்டவும் ஓர் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியை (Research and Development Fund) நிர்வகித்தல்.

**முன்னேற்றமும் எதிர்காலமும் (Progress and Future)**

இவ்வங்கி தொடங்கப்பட்ட ஓராண்டிற்குள்ளேயே மிகச் சிறப்பாகப் பணியாற்றத் தொடங்கிவிட்டத எனலாம். 1982-83 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனாக மட்டும் 1,120 கோடி ரூபாய் கடன் வழங்கியது. புதிய இருபது அம்சத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படவும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு பேருதவி செய்து உள்ளது. விவசாய மறுநிதிக் கழகத்தின் பணிகள் அனைத்தும் தன்வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டதால், இந்த ஆண்டில் அக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட 24,410 திட்டங்களுக்கு 5,600 கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது. இதிலும் 10,000 திட்டங்களுக்கு மேல் சிறுபாசனத் திட்டங்கள் ஆகும். 1997-98 ஆம் ஆண்டில், இவ்வங்கியால் அளிக்கப்பட்ட மொத்தக் கடனின் அளவு ரூ. 52,133 கோடிகள் ஆகும் (முந்தைய ஆண்டு இந்தத் தொகை ரூ. 47,635 கோடிகளாக இருந்தது). 1992-93 ஆம் ஆண்டில், இவ்வங்கியால் அளிக்கப்பட்ட மறு நிதி வசதி ரூ. 2, 359 கோடியாகும். இது இவ்வங்கியால் முந்தய ஆண்டு அளிக்கப்பட்ட மறு நிதி வசதியை விட இது (ரூ. 2,054 கோடிகள்) 14.85% அதிகமாகும். ஒவ்வொரு ஆண்டும் இவ்வங்கியின் நிதிப் பணி அதிவேக வளர்ச்சியைக் கண்டு வருகின்றத என்பதை மேற்கண்ட விபரத்தில் இருந்து நாம் அறியலாம்.

வங்கிகள் அதிகம் இல்லாத மாநிலங்களான உத்திரப்பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் விவசாய வளர்ச்சிக்கு இவ்வங்கி மிகப் பெருமளவில் விரிவாக உதவி செய்துள்ளது.

குறிப்பாக நமது நாட்டில் இன்னும் வளர்ச்சி குன்றிய நிலையில் உள்ள கூட்டுறவுத் துறையின் வளர்ச்சின் அதன் சீரமைப்பிற்கும் இவ்வங்கி பெரும் அளவில் பாடுபட்டு வருகின்றது. 1982-83 ஆம் ஆண்டில் மட்டும் 5,000 க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இதனால் பயனடைந்தன.

எனவே நபார்டு, ரிசர்வ் வங்கியின் பயனையும் விவசாய மறுநிதிக் கழகத்தின் பணிகளையும் ஏற்றுக் கொண்டு வியப்பூட்டத்தக்க வகையில் பணியாற்றி வருகின்றது. எதிர்காலத்தில் இதன் பணிகள் மேலும் சிறப்பாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

**DIC**

இந்த இரு நிறுவனங்களுமே சுய வேலை வாய்ப்புகளை ஊக்குவித்து, தொழில் தொடங்குவோருக்கு நிதி உதவியும், ஆலோசனைகளையும் வழங்குகின்றன. உதாரணமாக, எஞ்ஜினியரிங் படித்த ஒருவர் ஏதாவது ஒரு

தொழில் தொடங்க நிதி உதவி வேண்டி வங்கிகளை அணுகுவதற்கு முன்பு தம் கல்வித் தகுதி, முன் அனுபவம் ஆகியவற்றைக் காட்டும் Bio - Data ஒன்றனைத் தயார் செய்து கொள்ள வேண்டும். அதில் அந்தத் தொழிலுக்குத் தேவைப்படும் இடம், எந்திரங்கள், உபகரணங்கள் (Plant & machinery), கட்டிடம், திரி.்.பேஸ் மின் உரிமம், கடை நடத்தும் உரிமம், தேவைப்படும் நடைமுறை மூலதனம், (Working Capital), போன்ற சரியான விவரங்களை எழுதி ஒரு Project Report செய்து அவர் தாழ்த்தப்பட்ட, பழங்குடி இனத்தவராயிருந்தால் TAHDCO என்கிற நிறுவனத்திற்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பு அல்லாதவராயிருந்தால், மாவட்டத் தொழில் மையத்திற்கும் (District Industrial Centre) அனுப்பி வைக்க வேண்டும்.

அங்கே DIC வங்கியாளர் (Banker), ஊரக வளர்ச்சி அதிகாரி (BDO), DIC அலுவலர் ஒருவர் ஆக மூவர் அடங்கிய Screening Committee எனும் ஒரு குழு மனுவைப் பரிசீலித்து, அந்த மனுதாரரை நேர்முகத் தேர்வுக்கு (Interview) அழைத்து விசாரிக்கும். திருப்திகரமாயிருக்கும் பட்சத்தில், மனுதாரர் எந்த முகவரியில் தொழில் தொடங்குகிறாரோ அங்கே உள்ள ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிக்கு அவரது மனுவை அனுப்பி வைக்கும். அந்த வங்கி அதிகாரிகள் மனுதாரரின் முகவரிக்குச் சென்று விசாரித்து, அவர்களும் திருப்தியடைந்த பின், தேவைப்படும் பத்திரங்களை (Document) வாங்கிக் கொள்வார்கள். மின்சார உபகரணங்கள், உதிரி பாகங்கள், மிஷின்கள் ஆகியவற்றை அவர் வாங்க விரும்பும் கம்பெனியின் கொட்டேஷன்களைக் வாங்கிக் கொண்டு, வங்கிக் கடனை டிரா.்.ப்டாகவோ, பேங்கர் செக்காகவோ தருவார்கள். இதுதான் கடன் வாங்குவதற்கான சுருக்கமான வழிமுறையும் அவர்கள் பின்பற்றும் நடைமுறையுமாகும்.

இப்போது வங்கிகள் வழங்கும் முன்னுரிமைக் கடன்கள் SHG, SGSY, PMRY, SUME, TAHDCO, IRDP, SEEUY, TRYSEM, DWACRA, D. R.I, மற்றும் SEPUP போன்று ஏராளமான அரசு நலத் திட்டங்களை அரசும் வங்கிகளும் நடைமுறைப்படுத்தி வருகின்றன. அவற்றுள் பல கடன் திட்டங்களை அவ்வப்போது சிறு சிறு மாற்றங்களுடன் பெயர் மாற்றி நடைமுறைப்படுத்துகின்றன.

**அரசாங்கம் அல்லாத நிறுவனத்தின் பணிகள்:-**

**Role of NGOS**

அரசாங்கம் அல்லா நிறுவனங்கள் அதன் பணிகளை நன்கு செய்கின்றனர். இந்த நிறுவனம் எந்த பகுதியில் விற்பனை குறைவோ அல்லது லாபம் எங்கு குறைவோ அங்கு இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்படுகிறது.

இந்த நிறுவனம் கிராமபுறங்களின் தரத்தை உயர்த்தவும், அவர்களின் வாழ்வு உயர்த்தவும் உதவுகிறது. இந்த நிறுவனத்தின் மூலம் கிராமபுற மக்களுக்கு வேலைவாய்ப்பு, படிப்பு, நல்ல மருத்துவ வசதி, வீட்டு வசதி, குடிநீர் வசதி, மின்சாரம் ஆகியவை தர முடிகிறது.

NGO களின் மூலம் கிராமப்புற மக்கள் எவ்வாறு வங்கியின் மூலம் கடன் வாங்குவது, கடனை வாங்குபோது அதன் தள்ளுபடிகள் யாவை என்று அறிய முடியும். இந்த NGO மூலம் பலதரப்பட்ட திட்டங்கள் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. அவை கிராமபுற சுகாதாரம் மற்றும் சூழ்நிலை திட்டம் (RHEP), IRDP Scheme மூலமாக கிராமபுற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றனர்.

**வினாக்கள்**

1. இந்திய ரிசா்வ் வங்கியும் அதன் பணிகளும் ?
2. அரசுகளின் வங்கி பற்றி விவரி?
3. பணம் வெளியிடுதல் எவ்வாறு?
4. அரசின் முகவா் மற்றும் ஆலோசகரின் பணிகள்?
5. அந்நியச் செலாவணி ஒதுக்கீடுகளின் பாதுகாவலன் பற்றி விவரி?
6. வணிக வங்கிகளும் ரிசா்வ் வங்கியின் கட்டுப்பாடுகள் பற்றி குறிப்பு வரைக?
7. நபாா்டு விவரி?
8. நபாா்டின் மூலதனமும் நிதிவசதிகள் பற்றி விவரி ?

# குறிப்பு

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..